விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144.
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 வைகாசி 22 திங்கட்கிழமை (05.06.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 168

## பளை துப்பாக்கிச் சூடு
## முன்னாள் போராளி ரி.ஐ.டியினரால் கைது

(யாழ்ப்பாணம்)

பளையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் உரும்பிராயை சேர்ந்த முன்னாள் போராளி ஒருவர் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் (ரி.ஐ.டி) நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் உரும்பிராய் பகுதியைச் சேர்ந்த கிருபானந்தமூர்த்தி விஜயகணேசன் 24

## 79 பேரை காணவில்லை

(கொழும்பு)

நாட்டில் வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகள் போன்ற விபத்துக்கள் ஏற்பட்டு 10 நாட்கள் கடந்து விட்ட நிலையில் 79 பேரை தொடர்ந்தும் காணவில்லை 23

## தந்தையுடன் பயணித்த வேளை
## படகு கவிழ்ந்து விபத்து; மகன் நீரில் மூழ்கி பலி

(பரந்தன்)

கிளிநொச்சியிலுள்ள குளமொன்றில் மீன் பிடிக்க தந்தையுடன் சென்ற மகனொருவர் நீரில் மூழ்கி பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி பிரமந்தனாறு குளத்தில் நேற்று மாலை மீன்பிடி படகில் தந்தையுடன் சென்ற மகனே படகு கவிழ்ந்ததில் தந்தையுடன் சேர்ந்து நீரில் மூழ்கியுள்ளார்.

மூழ்கிய இருவரையும் கண்ணுற்ற கிராம மக்கள் அவர்களை உடனடியாக மீட்டு தர்மபுரம் வைத்தியசாலைக்கு கொண்டு சென்று பின் அங்கிருந்து நோயாளர் காவுவண்டி 23

## வடக்கு மாகாண சபையின்
# இரு அமைச்சர்கள் பதவி விலக வேண்டும்!
### ஊழல் குற்ற விசாரணை அறிக்கை பரிந்துரை

(யாழ்ப்பாணம்)

**வடக்கு மாகாண சபை வினைத்திறனாக இயங்க வேண்டும் எனில் வடக்கு மாகாண சபையின் இரு அமைச்சர்கள் உடனடியாக பதவி விலக வேண்டும் என வட மாகாண அமைச்சர்களுக்கு எதிராக சுமத்தப்பட்ட ஊழல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான விசாரணை அறிக்கையில் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.**

வடக்கு மாகாண அமைச்சுக்களில் பல்வேறு மோசடிகள் முறையற்ற செயற்பாடுகள் இடம்பெற்று வருவதாகவும் அது தொடர்பில் விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரி வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது.

அந்த வகையில் வடக்கு மாகாண அமைச்சர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்கு . இரு ஓய்வு பெற்ற நீதிபதிகள் மற்றும் ஓய்வு 23

## மேலும் மீன்கள் கரையொதுங்கின

(வட்டுவாகல்)

முல்லைத்தீவு நந்திக்கடல் வட்டுவாகல் களப்பில் நேற்றும் இறந்த நிலையில் அதிகளவிலான மீன்கள் கரையொதுங்கி உள்ளன.

இறந்த நிலையில் 23

## ரூ.30 பில். பொருளாதார இழப்பு

(இரத்தினபுரி)

அண்மையில் நாட்டின் தென்பகுதியில் வெள்ளம் மற்றும் மண்சரிவு அனர்த்தங்களால் ஏற்பட்ட இழப்புக்கள் 30 பில்லியன் 23

## ஆடைகளை கிழித்து 10 பேர் அடிதடி!

(யாழ்ப்பாணம்)

முச்சக்கரவண்டிகளில் வந்து ஒன்று கூடிய 10க்கும் மேற்பட்ட நபர்கள் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொண்டதோடு ஆடைகளைக் கிழித்துக் கொண்டதோடு தகாத வார்த்தை 23

## அனர்த்த உயிரிழப்பு; இன்று பிரார்த்தனை

(கொழும்பு)

நாட்டில் அண்மையில் ஏற்பட்ட மண்சரிவு மற்றும் வெள்ளப் பெருக்கினால் உயிரிழந்தோரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் அனைத்து இலங்கை மக்களுக்கும் நாட்டு 23

## கத்திக்குத்து; இளைஞன் பலி

(கரணவாய்)

வடமராட்சி அல்வாய் பகுதியில் இடம்பெற்ற கத்திக்குத்து சம்பவத்தில் இளைஞர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள் 23

## 100-வது நாளை எட்டவுள்ள பட்டதாரிகளின் போராட்டம்





(யாழ்ப்பாணம்)

நிரந்தர அரச வேலைவாய்ப்பினைக்கோரி வடமாகாண வேலையற்ற பட்டதாரிகள் யாழ். மாவட்டச் செயலகம் முன்பாக முன்னெடுத்து வரும் 24

## குடிநீர் போத்தல்; விநியோக உரிமம் பலரிடம் மோசடி

(யாழ்ப்பாணம்)

யாழ்மாவட்டத்தில் குடி தண்ணீர் போத்தல் விநியோக உரிமம் தருவதாகக் கூறி பலரிடம் கோடிக் கணக்கில் மோசடி செய்த நபர்களை, அவர்களால் பாதிக்கப்பட்டவர்கள் ஒன்றிணை 23

## வீடமைப்பு திட்ட தாமதம் மகிந்த ஆட்சியே காரணம்
### இராதாகிருஷ்ணன் குற்றச்சாட்டு



(நுவரெலியா)

இந்திய அரசாங்கம் மலையகத்திற்கு வழங்கிய 4 ஆயிரம் வீட்டு திட்டம் நடைமுறைப்படுத்தாமல் இருந்தமைக்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சியிலிருந்த அமைச்சர்களே காரணம் என கல்வி 24

## அனர்த்த எச்சரிக்கை நீடிப்பு!

(கேகாலை)

இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட 7 மாவட்டங்களுக்கான மண்சரிவு அபாய எச்சரிக்கை மேலும் 24 24

புதுக்கடை திறப்பு விழா
L
DS882
சசிகா லேணர்ஸ்
அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை 05.06.2017 திங்கட்கிழமை இன்று நண்பகல் 12 மணிக்கு உள்ள சுப வேளையில் திறந்து வைக்கப்படவுள்ளது என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றோம்.
05.06.2017 தொடக்கம் 15.06.2017 வரை பதிவினை மேற்கொள்வோருக்கு விலைக்கட்டணக்கழிவும் அன்பளிப்புப் பொருட்களும் வழங்கப்படும்.
021 222 8004,
077 722 6247
இல.821 C, மணிக்கூட்டு
கோபுர வீதி, யாழ்ப்பாணம்.

## ஐ.நா பொதுச் சபையின் உபதலைவர் பதவி இலங்கை வசம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையின் 72 ஆவது கூட்டத் தொடருக்கான உப தலைவர் பதவிக்கு இலங்கை தேர்வு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி ஆசிய மற்றும் பசுபிக் பிராந்தியங்களை பிரதிநிதித்துவப்படுத்தி உபதலைவர் பொறுப்பை இலங்கை வகிக்கவுள்ளது.

ஐக்கிய நாடுகளின் பொதுச் 23

## பொருளாதார நெருக்கடியால் ஒலிம்பிக் பதக்கத்தை விற்கிறார் சுசந்திகா!



(கொழும்பு)

பொருளாதார நெருக்கடி காரணமாக தான் வென்ற ஒலிம்பிக் வெள்ளி பதக்கத்தை விற்பனை செய்ய தீர்மானித்துள்ளதாக நாட்டின் மூத்த ஓட்ட பந்தைய வீராங்கனை சுசந்திகா ஜய 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஆட்டோ - மோ.சைக்கிள் விபத்து; குடும்பஸ்தர் காயம்



(கோப்பாய்)

முச்சக்கரவண்டி - மோட்டார் சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று பகல் 10 மணியளவில் கோண்டாவில் டிப்போக்கு முன்பாக இடம்பெற்றுள்ளது.

பலாலி வீதி வழியாக பயணித்துக் கொண்டிருந்த முச்சக்கரவண்டி கோண்டாவில் டிப்போவை அண்மித்த வேளை அருகில் இருந்த அன்னாங்கை வீதி வழியாக சடுதியாக பலாலி வீதிக்கு மோட்டார் சைக்கிளை செலுத்தி செல்ல முற்பட்ட போது குறித்த விபத்து ஏற்பட்டுள்ளது.

இதன்போது விபத்துக்குள்ளான மோட்டார் சைக்கிளில் இருந்து தூக்கி வீசப்பட்ட குடும்பஸ்தர் காலில் காயமடைந்துள்ளார். அவருடன் மோட்டார் சைக்கிளில் பின்னால் இருந்து பயணித்த பெண்ணொருவர் தெய்வாதீனமாக காயங்கள் ஏதுமின்றி தப்பித்துள்ளார்.

இவ்விபத்தின் போது முச்சக்கரவண்டி முன்பகுதி பாரிய சேதமடைந்ததுடன் மோட்டார் சைக்கிளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

விபத்து தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதை அடுத்து சம்பவ இடத்துக்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (செ-87)

## பொலிஸ் வாகனத்தை மோதிவிட்டு

# மணல் கடத்திய உழவு இயந்திரம் தீவிர தேடுதலின் பின் சிக்கியது

(யாழ்ப்பாணம்)

பொலிஸ் வாகனத்தை தாக்கிவிட்டு தப்பிச் சென்ற சட்டவிரோத மணல் கடத்தலில் ஈடுபட்டு வந்த உழவு இயந்திரத்தினை சில மணித்தியால இடைவெளிகளில் கொடிகாமம் பொலிஸார் தேடிப் பிடித்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை கொடிகாமம் தவசிகுளம் பகுதியில் இருந்து சட்டவிரோதமாக மணலை உழவு இயந்திரத்தில் கடத்திச் சென்ற வேளை, குறித்த உழவு இயந்திரத்தை அவதானித்த பொலிஸார் வழி மறித்துள்ளனர்.

இதன்போது பொலிஸாரின் வாகனத்தினையும் மோதி தள்ளிவிட்டு மணல் கடத்தல்காரர்கள் உழவு இயந்திரத்துடன் தப்பித்துச் சென்றிருந்தனர்.

இந்த நிலையில் கொடிகாமம் பொலிஸார் உடனடியாக தீவிர தேடுதல் நடவடிக்கையினைத் தொடர்ந்திருந்தனர்.

தேடுதல் ஆரம்பித்த சிலமணி நேரங்களில் பொலிஸாரைத் தாக்கிவிட்டு தப்பித்த உழவு இயந்திரம் தவசிகுளம் பகுதியில் உள்ள பற்றைக் காட்டுப் பகுதியில் மறைத்து விடப்பட்டிருந்த நிலையில் கொடிகாமம் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.

எனினும் மணல் கடத்தல்காரர்கள் எவரும் கைது செய்யப்படாத நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (செ-89)

# கதிர்காமம் முருகன் ஆலய தலைமை மதகுரு யாழ்.வருகை



(யாழ்ப்பாணம்)

கதிர்காமம் முருகன் ஆலய தலைமை மதகுரு பஸ்நாயக்க நிலமே டி.பி.குமாரகே யாழ்ப்பாணத்தில் உள்ள வரலாற்று சிறப்பு மிக்க ஆலயங்களுக்கு சென்று வழி பாடுகளை நடத்தியுள்ளார்.

நேற்றைய தினம் (ஞாயிற்றுக்கிழமை) யாழ்.விஜயம் செய்த பஸ்நாயக்க நிலமே நல்லூர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் மற்றும் கலாநிதி ஆறு.திருமுகன் ஆகியோரை சந்தித்து கலந்துரையாடல் நடத்தியுள்ளார்.

அத்துடன், நல்லூர் கந்தசுவாமி ஆலயம், தொண்டமனாறு செல்வச்சந்நிதி ஆலயம் ஆகியவற்றுக்கு சென்று வழிபாடுகள் மேற்கொண்டுள்ளார்.

இதேவேளை இந்து மத தலைவர்களுடன் நடைபெற்ற சந்திப்பின் போது யாழ். மாவட்டத்திலிருந்து கதிர்காமத்திற்கு வரும் யாத்திரிகர்களின் வருகை மிகக் குறைவடைந்துள்ளமை ஏன் என பஸ்நாயக்க கேள்வி எழுப்பியிருந்தார்.

இதன் போது கதிர்காமம் இந்து தலம் என்பதற்கான அடையாளங்கள் மாற்றப்பட்டு வருகின்றமை மற்றும் மொழிப் பிரச்[illegible] யாழ்ப்பாண மக்களுக்குள்ள அச்சம், கதிர்காமத்தில் யாத்திரிகர்களுக்கான தங்குமிடம் போன்றன இல்லாமையினாலேயே யாழ்ப்பாணத்திலிருந்து யாத்திரிகர்கள் கதிர்காமம் வருவது குறைந்துள்ளது என இந்து மத தலைவர்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்நிலையில் இவ்வாறான பிரச்சினைகள் தொடர்பான தீர்வினை காணலாம் எனவும் யாழ்ப்பாணத்திலிருந்து அதிகளவு யாத்திரிகர்கள் கதிர்காமத்திற்கு வரும் வகையிலான ஒழுங்குகளை யாழ்ப்பாணத்தில் உள்ள இந்து மத தலைவர்களும், கதிர்காமம் முருகன் ஆலயமும் இணைந்து மேற்கொள்ளலாம் என்றவாறான விடயங்கள் இதன போது கலந்துரையாடப்பட்டிருந்தன. (செ-4)




வன்னிவிளாங்குளம்

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய

வருடாந்த பொங்கல் விழா

09.06.2017 - வெள்ளிக்கிழமை

பூத்தவளே புவனம் பதினான்கையும் பூத்தவண்ணம்
காத்தவளே பின்கரந்தவளே கறைக்கண்டனுக்கு
மூத்தவளே என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே
மாத்தவளே உன்னை அன்றி மற்றோர் தெய்வம் வந்திப்பதே

அம்பிகை அடியார்களே!

வன்னிவிளாங்குளம் பகுதியில் பன்னெடுங்காலமாக கோவில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ முத்துமாரி அம்மனின் வருடாந்த பொங்கல் விழா நிகழும் ஏவிளம்பி வருஷம் வைகாசித் திங்கள் 26ஆம் நாள் (09.06.2017) வெள்ளிக்கிழமை வழமைபோல் நடைபெற திருவருள் கைகூடியுள்ளது.

அன்று நண்பகல் அம்பாளுக்கும் பரிவாரமூர்த்திகளுக்கும் விசேட அபிஷேகமும் அலங்கார பூசைகளும் நடைபெறும். இரவு 9 மணியளவில் மடைப்பண்டம் எடுக்கும் நிகழ்வும் தொடர்ந்து பொங்கல் விழா நிகழ்வுகளும் நடைபெறும். அடியார்கள் பூசைக்குரிய அபிஷேகப் பொருட்கள், பூக்கள், பூமாலைகள் போன்றவற்றை தந்துதவுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

குறிப்பு:-

1. பொங்கல் தினத்தன்று விசேட போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளது.
2. பாதுகாப்பு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது.
3. பொங்கல் தினத்தன்று வியாபார நிலையங்கள் அமைக்க விரும்புவோர் 07.06.2017 நண்பகல் 12.00 மணி தொடக்கம் தங்கள் பதிவுகளை பெயர்களை பதிவு செய்து உரிய பணத்தினை செலுத்தி பற்றுச்சீட்டினை பெற்றுக் கொள்ள வேண்டும்.

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்"

(C-8725)

தொடர்புகட்கு:
076 679 5361

ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய திருப்பணிச் சபை
வன்னிவிளாங்குளம், மாங்குளம்.



பாராட்டி வாழ்த்துகின்றோம்

லயன் தில்லையம்பலவாணர் விமலன்



பிரதேச தேசோதய சபை - கோப்பாய் கிளையின் உப தலைவரும் கோப்பாய் பிரதேச செயலகத்தில் காணிப்பயன் பாட்டுத்திட்டமிடல் உத்தியோகத்தராக கடமையாற்றிய லயன் தில்லையம்பலவாணர் விமலன் அவர்கள் காணி அமைச்சின் கீழ் உள்ள காணி சீர்திருத்த ஆணைக்குழுவில் வடக்கு வலய உதவிப்பணிப்பாளர் ஆக நியமனம் பெற்றதையிட்டு பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாரதி லேன்,
நாயன்மார்கட்டு.

இ.மயில்வாகனம் ஜே.பி
தலைவர், பிரதேச தேசோதய சபை
வலி. கிழக்கு, கோப்பாய்.

(8726)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் பிரச்சினையை அரசால் தீர்க்க முடியாது

## தினேஷ் எம்.பி.விசனம்

(கொழும்பு)

அரசாங்கத்துக்கு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்க முடியாது என நாடாளுமன்ற உறுப்பினரும் கூட்டு எதிரணியின் தலைவருமான தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கம்பஹாவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார். "அத்துடன் மக்களின் எதிர்ப்பை பெற்றுள்ள அரசாங்கம் தேர்தலை ஒத்திவைத்து வருகின்றது" என்றும் அவர் குற்றஞ்சாட்டினார். (இ-7)

# சிறுமிகள் மீது பாலியல் இம்சை; கண்டித்து நேற்றும் போராட்டம்

(ஏறாவூர்)

திருகோணமலை, மூதூர் மல்லிகைத்தீவில் மூன்று பெண் சிறுமிகள் பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்தப்பட்டதைக் கண்டித்து வாழைச்சேனை கிண்ணையடி எதிர்கால இளைஞர் முற்போக்கு அமைப்பினரால் நேற்றுக் காலை கண்டனப் பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.



வாழைச்சேனை, கிண்ணையடி, திருகோணமலை பிரதான வீதியில் குறித்த கண்டனப் பேரணி முன்னெடுக்கப்பட்டது.

இளைஞர் அமைப்பின் தலைவர் மு.கோகுலராசா தலைமையில் இடம்பெற்ற குறித்த பேரணியில் அறநெறிப் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள், இளைஞர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது துள்ளி விளையாடும் சிறுவர்களின் வாழ்வில் எள்ளி நகையாடுகிறீர்களா? சுற்றிலும் அபாயம் முற்றிலும் விழித்திரு, வன்புணர்வுக்கான தண்டனை மரணம் மட்டுமே, பாலியல் குற்றத்துக்கான தண்டனைகள் கடுமையாக்கப்பட வேண்டும் போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளுடன் மக்கள் பேரணியில் கலந்து கொண்டிருந்தனர்.

சிறுமிகள் மீதான பாலியல் இம்சை சம்பவத்தை கண்டித்து கிழக்கு மாகாணத்தில் தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

### இலங்கை தொடர்பில் துறைசார் மையம் மீண்டும் எச்சரிக்கை

இலங்கையில் நிர்மாணிக்கப்படவுள்ள நெடுஞ்சாலைகள் காரணமாக பாரிய ஆபத்தொன்று ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலைகளை நிர்மாணிப்பதற்காக மண்நிறைத்து அதற்கு மேல் நிர் மாணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள கூடாது என குறிப்பிடப்பட்டுள்ளது.

அதிவேக நெடுஞ்சாலைகளுக்கு மண் நிறைத்து நிர்மாணித்தால் நாடு முழுவதும் உள்ள 103 கங்கை மற்றும் 206 பள்ளத்தாக்குகளுக்கு தடை ஏற்படும் ஆபத்துக்கள் உள்ளதாக இயற்கை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அதிவேக நெடுஞ்சாலைகள் நிர்மாணிக்கப்பட்டதால் மழை காலங்களில் நாட்டின் நடுவில் நீர்த்தேக்கங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளதாக மையத்தின் தேசிய அமைப்பு சுற்றுச்சூழல் ஆய்வாளர் ரவிந்திர காரியவசம் தெரிவித்துள்ளார். (இ-7)

# லண்டனில் நடந்த தாக்குதலுக்கு ஜனாதிபதி மைத்திரி கண்டனம்

(கொழும்பு )

லண்டனில் இடம்பெற்ற பயங்கரவாத தாக்குதலுக்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கண்டனம் வெளியிட்டுள்ளார்.

"இவ்வாறான பயங்கரவாத தாக்குதல்கள் ஒரு கொடூரமான செயல்" இந்த தாக்குதல் காரணமாக லண்டனில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தான் ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார்.

தனது உத்தியோகபூர்வ டுவிட்டர் வலைத்தளத்திலேயே ஜனாதிபதி இந்த கருத்தினை வெளியிட்டுள்ளார்.

பிரித்தானியாவில் நடத்தப்பட்ட பயங்கரவாத தாக்குதலில் ஆறுபேர் உயிரிழந்துள்ளதுடன் 48 பேர் காயமடைந்துள்ளதாக லண்டன் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதேவேளை, இந்த தாக்குதலினால் லண்டனில் வாழும் இலங்கையர்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என்றும் இது வரையில் அவ்வாறான செய்தி ஒன்றும் பதிவாகவில்லை என இலங்கை வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (இ-7)

# ஐ.தே.க, சு.க.இடையே புதிய உடன்படிக்கை

அரசாங்கம் புதிய உடன்படிக்கை ஒன்றை கைச்சாத்திடத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஐக்கிய தேசியக் கட்சிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டிருந்தது.

இந்த உடன்படிக்கையை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு உடன்படிக்கை கைச்சாத்திடுவது குறித்த ஆரம்ப கட்ட பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையில் சில திருத்தங்களைச் செய்து புதிய உடன்படிக்கை கைச்சாத்திடப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (இ-7)

# அமெரிக்க அரசின் ரூ. 350 மில்.நிதி ஜனாதிபதியிடம்



(கொழும்பு)

சீரற்ற காலநிலையினால் ஏற்பட்ட வெள்ளம் மற்றும் மண்சரிவினால் அழிவுற்ற வீடுகளை மீள நிர்மாணிப்பதற்காக அரசாங்கம் முன்னெடுக்கும் திட்டத்துக்கு அமெரிக்க அரசாங்கத்தின் 350 மில்லியன் ரூபா நிதி அன்பளிப்பு நேற்று முன்தினம் ஜனாதிப்தியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் ஒப்படைக்கப்பட்டது.

இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் அதுல் கெசாப் உள்ளிட்ட பிரதிநிதிகளால் அந்த நன்கொடை ஜனாதிபதியிடம் உத்தியோகபூர்வமாக ஒப்படைக்கப்பட்டது.

மேலும் நாட்டிலுள்ள இளைஞர், யுவதிகளின் நிபுணத்துவ ஆற்றலை மேம்படுத்துவதற்காக 12 மில்லியன் டொலரை வழங்குவதற்கு அமெரிக்க அரசாங்கம் விருப்பம் தெரிவித்துள்ளது. நான்கு ஆண்டுகளில் அந்த உதவியை மேற்கொள்ள இருப்பதாக அமெரிக்க தூதுவர் இதன்போது தெரிவித்தார்.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட களுத்துறை மாவட்ட பாடசாலைகளை துப்புரவு செய்வதில் அமெரிக்க பிரதிநிதிகள் ஈடுபட்டிருப்பதாகவும் அந்த செயற்பாடு தொடர்ந்து இடம்பெறுமென்றும் அமெரிக்க தூதுவர் தெரிவித்தார். (இ-7)

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலை துரிதகதியில் நடத்துமாறு மகாநாயக்க தேரர்கள் கோரிக்கை

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை துரிதகதியில் நடத்துமாறு கோரிக்கை ஒன்றை முன்வைத்து, மகாநாயக்க தேரர்கள் மகஜர் ஒன்றை சமர்ப்பிக்கவுள்ளனர்.

இந்த விசேட மகஜர் பௌத்த மகாநாயக்க தேரர்களினால் தயாரிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட அரசாங்கத் தரப்பினரிடம் இந்த மகஜர் விரைவில் ஒப்படைக்கப்படவுள்ளது.

கண்டி அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடாதிபதிகள் மகஜர் ஒப்படைப்பு குறித்த தகவலை உறுதி செய்துள்ளனர். நாளுக்கு நாள் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் ஒத்திவைக்கப்படுவதனால் மக்கள் பாதிக்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர். (இ-7)

# இந்த அரசாங்கம் நாட்டை முன்னோக்கி நகர்த்தாது

## விமல் வீரவன்ச கூறுகிறார்

(கொழும்பு)

இந்த அரசாங்கம் நாட்டை முன்னோக்கி நகர்த்தப் போவதில்லை என பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச குற்றம் சுமத்தியுள்ளார். 2016 ஆம் ஆண்டு நிதி அமைச்சின் ஆண்டறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் குறித்து திருப்தி கொள்ள முடியாது என கணக்காய்வாளர் நாயகம் தெரிவித்துள்ளதாக கூறியுள்ள விமல் கடந்த அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்தி இந்த அரசாங்கம் இரண்டு ஆண்டுகளில் பாரியளவில் கடனைப் பெற்றுக்கொண்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் பொய்யான தகவல்களை வெளியிடுவதனால் எதிர்காலத்தில் எமக்கு வெளிநாடுகள் உதவிகளை வழங்காது எனவும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ



முடியாத அரசாங்கமொன்றே இன்று நாட்டை ஆட்சி செய்து வருவதாகவும் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.(இ-7)

### வயோதிபரின் சடலம் கிணற்றிலிருந்து மீட்பு

வடமராட்சி புற்றளைப் பகுதியிலுள்ள கிணறு ஒன்றிலிருந்து வயோதிபர் ஒருவரின் சடலம் நேற்று முற்பகல் மீட்கப்பட்டதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர். புற்றளை புலோலி தெற்கைச் சேர்ந்த சின்னையா சிவபாலசுப்பிரமணியம் (வயது-71) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.

மேற்படி பகுதியிலுள்ள கிணறு ஒன்றில் சடலம் இருப்பதாக பருத்தித்துறை பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து சடலம் மீட்கப்பட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது. இது தொடர்பாக பருத்தித்துறைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.(இ-60)

# பிரதமரின் உடல்நிலை சிறப்பாக உள்ளதாம்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நியூயோர்க்கில் தமது மருத்துவ சிகிச்சைகளை நிறைவு செய்துள்ளதாகவும், அவரது உடல் நிலை சிறப்பாக உள்ளதாகவும் நியூயோர்க் வைத்தியர்கள் தெரிவித்துள்ளதாகவும் கொழும்பு ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.



நியூயோர்க்கிலுள்ள பல்கலைக்கழக வைத்தியசாலையில், பிரதமருக்கான சிகிச்சைகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில், தமது உடல் நிலையில் எவ்வித சந்தேகத்துக்குரிய நிலைமைகளும் இல்லை என வைத்தியர்கள் கூறியதாக நியூயோர்க்கிலிருந்து பிரதமர் தெரிவித்தார் என குறித்த ஆங்கில ஊடகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இதற்கு முன்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சிங்கப்பூரில் சிகிச்சை பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மழையின் குறுக்கீட்டால் டக்வோர்த் லூயிஸ் முறையில் பாகிஸ்தானை 164 ஓட்டங்களால் வென்றது இந்தியா



சம்பியன்ஸ் டிராபி கிரிக்கெட் தொடரில், பாகிஸ்தான் பந்து வீச்சை பந்தாடிய இந்திய அணி 319 ஓட்டங்கள் குவித்தது. பாகிஸ்தான் அணியின் வெற்றி இலக்கு 324 ஓட்டங்கள் என நிர்ணயிக்கப் பட்டது.

சம்பியன்ஸ் டிராபி கிரிக்கெட் தொடரில் ரசிகர்கள் மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்த இந்தியா-பாகிஸ்தான் ஆட்டம் பேர்மிங்ஹாமில் உள்ள எட்பஸ்டன் ஸ்ரேடியத்தில் நேற்று நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி களத்தடுப்பை தேர்வு செய்தது.

இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. ரோகித் ஷர்மா, ஷிகர் தவான் ஆகியோர் தொடக்க வீரர்களாக களமிறங்கி நிதானமாக விளையாடினர். 10-வது ஓவரின் போது மழை பெய்ததால் சிறிது நேரம் ஆட்டம் பாதிக்கப்பட்டது.

பின்னர் தொடர்ந்து ஆடிய தொடக்க வீரர்கள் இருவரும் அரை சதம் கடந்து நல்ல அடித்தளம் அமைத்தனர். தொடர்ந்து முன்னேறிய ஷிகர் தவான் 68 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். தொடக்க ஜோடி 136 ஓட்டங்கள் குவித்தது. அவரைத் தொடர்ந்து ரோகித் சர்மாவுடன் இணைந்த அணித் தலைவர் ஹோலி, நிதானமாக விளையாடினார்.

34-வது ஓவரில் அணியின் ஓட்ட எண்ணிக்கை 173 ஆக இருந்தபோது மீண்டும் மழை பெய்தது. இதனால், ஆட்டம் நிறுத்தப்பட்டு ஆடுகளம் மூடப்பட்டது. ரோகித் சர்மா 77 ஓட்டங்களுடனும், ஹோலி 24 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

பின்னர் மழை விட்டதும் ஆட்டம் தொடங்கியது. அப்போது போட்டி 48 ஓவர்களாக குறைக்கப் பட்டது. தொடர்ந்து ஆடிய ரோகித் சர்மா 91 ஓட்டங்கள் எடுத்த நிலையில், ரன் அவுட் ஆகி வெளியேறினார். அவரைத் தொடர்ந்து விராட் ஹோலியுடன் யுவராஜ் இணைந்து அதிரடியாக ஆடினார். இருவரும் அரைச் சதம் கடந்த நிலையில் அணியின் ஓட்ட எண்ணிக்கையும் விறுவிறுவென உயர்ந்தது.

யுவராஜ் சிங் 32 பந்துகளில் 8 பவுண்டரி, ஒரு சிக்சருடன் 53 ஓட்டங்கள் குவித்து ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து களமிறங்கிய ஹர்திக் பாண்ட்யா பாகிஸ்தான் பந்துவீச்சை விளாசினார். கடைசி ஓவரில் ஹாட்ரிக் சிக்சர் அடித்து அசத்தினார். இதனால் 48 ஓவர்கள் முடிவில் இந்திய அணி 3 விக்கெட் இழப்பிற்கு 319 ஓட்டங்கள் குவித்தது. ஹோலி 81 ஓட்டங்களுடனும், பாண்ட்யா 20 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.



இப்போட்டியில் ரொப் ஆர்டர் வீரர்கள் 4 பேரும் அரைச் சதம் அடித்து அசத்தினர். பாகிஸ்தான் தரபபில் ஹசன் அலி, ஷதாப் கான் ஆகியோர் ஆகியோர் தலா ஒரு விக்கெட் எடுத்தனர்.

இதையடுத்து, டக்வோர்த் லூயிஸ் விதிப்படி பாகிஸ்தான் அணியின் வெற்றிக்கு 324 ஓட்டங்களாக இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

இந்த கடினமான இலக்கை நோக்கி பாகிஸ்தான் அணி களமிறங்கியது.



தொடக்க வீரர்களாக அசார் அலி மற்றும் அஹமட் ஷெஷாட் ஆகியோர களமிறங்கினர். அசார் அலி 50 ஓட்டங்களுடனும் அஹமட் ஷெசாட் 12 ஓட்டங்களுடனும் வாவர் அஷாம் 8 ஓட்டங்களுடனும் மொகமட் கபீஸ் 33 ஓட்டங்களுடனும் சொய்ப் மலிக் 33 ஓட்டங்களுடனும் ஷர்பிராஸ் அஹமட் 11 ஓட்டங்களுடனும் இமாட் வசீம் ஓட்டம் எதுவும் எடுக்காமலும் மொஹமட் அமீர் 9 ஓட்டங்களுடனும் ஹஷன் அலி ஓட்டம் எதுவும் எடுக்காமலும் ஆட்டமிழந்தனர். சடப் கான் 14 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் உமேஷ் யாதவ் 3 விக்கெட்டுக்களும் ஹர்திக் பாண்ட்யா, ஜடேஜா ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களும் புவனேஸ்வர் குமார் ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக யுவராஜ் சிங் தெரிவு செய்யப்பட்டார்.




## லண்டன் குண்டு வெடிப்பை அடுத்து சம்பியன் டிராபி போட்டிகளுக்கான பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது



லண்டனில் நேற்று முன்தினம் 2 இடங்களில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலையடுத்து இந்தியா - பாகிஸ்தான் மோதும் போட்டிக்கு பலத்த பாதுகாப்பு ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது.

தொடக்க ஆட்டத்தில் இங்கிலாந்து 8 விக்கெட் வித்தியாசத்தில் பங்களாதேஷை வீழ்த்தியது. அவுஸ்திரேலியா - நியூசிலாந்து மோதிய 2-வது ஆட்டம் மழையால் பாதியில ரத்து செய்யப்பட்டது. நேற்று முன்தினம் நடந்த 3-வது ஆட்டத்தில் தென்னாபிரிக்கா 96 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இலங்கையை வீழ்த்தியது.

4-வது 'லீக்' ஆட்டம் பேர்மிங்ஹாமில் உள்ள எட்பஸ்டன் மைதானத்தில் நடந்தது. இதில் விராட் ஹோலி தலைமையிலான இந்தியா - சர்பிராஸ் அஹமட் தலைமையிலான பாகிஸ்தான் அணிகள் மோதுகின்றன.

இந்திய அணி வெற்றியுடன் கணக்கை தொடங்கும் ஆர்வத்தில் உளது. இரு அணிகளும் சமபலத்துடன மோதியதால் இந்த ஆட்டம் விறுவிறுப்பு நிறைந்ததாக இருந்தது

இதற்கிடையே நேற்று முன்தினம் லண்டனில் 2 இடங்களில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினார்கள். இதையொட்டி இந்தியா- பாகிஸ்தான் வீரர்களுக்கு கூடுதல் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருந்தது.

சம்பியன்ஸ் டிராபி போட்டியை சீர்குலைக்கும் வகையில் எட்பஸ்டனிலும் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தலாம் என்று இங்கிலாந்து உளவுத்துறை எச்சரித்துள்ளது. இதை தொடர்ந்து இந்தியா- பாகிஸ்தான் வீரர்களுக்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் இந்தியா, பாகிஸ்தான் கிரிக்கெட் வாரிய நிர்வாகிகள் பெரும் பீதி அடைந்து உள்ளனர். உளவுத்துறையின் எச்சரிக்கையால் மேலும் அச்சத்தில உள்ளனர். இங்கிலாந்து பாதுகாப்பு அதிகாரிகள் அவர்களை சமாதானப்படுத்தினர். வீரர்களுக்கான பாதுகாப்பு உத்தரவாதத்தை அவர்கள் அளித்து உள்ளனர்.

## ஆப்கானிஸ்தானுக்கெதிரான இருபது - 20 தொடரைக் வென்றது மேற்கிந்தியத் தீவுகள்



ஆப்கானிஸ்தான் அணிக்கு எதிரான 2-வது 20 ஓவர் போட்டியில் 29 ஓட்டங்கள் வித்தியாசத்தில வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள தொடரையும் கைப்பற்றி உள்ளது.

ஆப்கானிஸ்தான் மூன்று 20 ஓவர் போட்டி மற்றும் மூன்று ஒருநாள் போட்டிகளில் விளையாடுவதற்காக மேற்கிந்தியத் தீவுகள் சென்றுள்ளது.

முதல் 20 ஓவர் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. 2-வது ஆட்டம் நேற்று முன்தினம் நடந்தது. மழையால் ஆட்டம் 15 ஓவர்களாக குறைக்கப்பட்டது. முதலில் ஆடிய மேற்கிந்தியத் தீவுகள 3 விக்கெட் இழப்புக்கு 112 ஓட்டங்கள் எடுத்தது.

டக்வொர்த் லீவிஸ் விதிப்படி ஆப்கானிஸ்தானுக்கு 15 ஓவர்களில் 123 ஓட்டங்கள் இலக்கு நிர்ணயிக்கப் பட்டது. அந்த அணி 13.3 ஓவர்களில 93 ஓட்டங்களில் சுருண்டது.

இதனால் 29 ஓட்டங்களால் மேற்கிந்தியத் தீவுகள வெற்றி பெற்றது. ஏற்கெனவே முதல் போட்டியில் வென்றதால் மேற்கிந்தியத் தீவுகள தொடரை கைப்பற்றியது. 3-வது மற்றும் கடைசி 20 ஓவர் ஆட்டம் இன்று நடக்கவுள்ளது.

# தாய்லாந்து ஓபன் பட்மிண்டனில் சாய் பிரனீத் சம்பியனானார்



தாய்லாந்து ஓபன் பட்மிண்டன் போட்டியில், இந்திய வீரர் சாய் பிரனீத் சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

தாய்லாந்து நாட்டின் பாங்கொக் நகரில் தாய்லாந்து ஓபன் பட்மிண்டன் போட்டிகள் நடைபெற்றன. இதில் கடைசி நாளான நேற்று ஆடவர் ஒற்றையர் இறுதி போட்டி நடந்தது. இந்த போட்டியில் இந்தோனேசியாவின் ஜோனதன் கிறிஸ்டியுடன் இந்தியாவின் சாய் பிரனீத் மோதினார். விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் 17-21, 21-18, 21-19 என்ற செட் கணக்கில் கிறிஸ்டியை பிரனீத் வீழ்த்தினார்.

முதல் செட்டை கிறிஸ்டியிடம் 4 புள்ளிகள் வித்தியாசத்தில் இழந்த பிரனீத், அடுத்த செட்டில் எழுச்சியுடன் ஆடி, 9-3 என்ற கணக்கில் முன்னிலை பெற்றார். ஆனால் அடுத்த ஆட்டத்தில் 6 புள்ளிகளை பெற்ற கிறிஸ்டியால் செட் சமனானது. தொடர்ந்து அதிரடியாக விளையாடிய பிரனீத் அந்த செட்டை கைப்பற்றினார்.

இதனால் வெற்றி தோல்வியை நிர்ணயிக்க வேண்டிய 3-வது செட்டை விளையாட வேண்டிய சூழல் ஏற்பட்டது. அந்த செட்டையும், 2 புள்ளிகள் வித்தியாசத்தில் கைப்பற்றிய பிரனீத், போட்டியையும் கைப்பற்றினார். 72 நிமிடங்கள் நடந்த இந்த போட்டியில் வெற்றி பெற்ற பிரனீத் சம்பியன் பட்டத்தினை வென்றார்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தோனேசியாவின் பெர்ரி ஆங்க்ரியவான் - ஹர்தியாந்தோ ஜோடி பட்டம் வென்றது. மகளிர் ஒற்றையர் பிரிவில் தாய்லாந்தின் ரட்சனாக் இன்டானன், மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தோனேசியாவின் கிரேசியா போலி-அப்ரியானி ரகாயு ஜோடி, கலப்பு இரட்டையர் பிரிவில் சீனாவின் ஹி ஜிதிங்-டு யீ ஜோடி சம்பியன் பட்டம் வென்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீர்மேவு யாழ்ப்பாணம் கோண்டாவில் ஈழத்து தில்லையம்பதி

# அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில் புதிய நவகோண சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா சிறப்பு மலர்

**காலம் : 05.06.2017 திங்கள் பி.ப 4.00 மணி**



**சின்மயாமிஷன் சுவாமிகளின் ஆசிச் செய்தி**

கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோவிலில் மஹோற்சவம் நடைபெறுவது. அதன் ரதோற்சவத்துக்காக புதிய சித்திரத்தேர் உருவாக்கப்பட்டு இன்று 05.06.2017 வெள்ளோட்டம் நடைபெறுவது என்பன மகிழ்ச்சிக்குரிய விடயங்களாகும். இறைவனின் பஞ்ச கிருத்தியங்களைக் குறித்து நிற்கும் மஹோற்சவங்களில் இரதோற்சவமானது அழித்தல் தொழிலை குறிப்பதாகும். அதாவது எம்மிடையே உள்ள தீய குணங்களை அழித்தலைக் குறிப்பதாகும். இத்தகைய சித்திரத்தேர் வெள்ளோட்டம் மற்றும் தேர் உற்சவம் ஆகியவற்றைத் தரிசிக்கும் அடியார்களாகிய நாம் எம்மிடமுள்ள ஏதாவது ஒரு தீய பண்பையாவது இன்றிலிருந்து விடுத்து புதிய நற்பண்புகளை வளர்த்துக் கொள்வதாக திடசங்கற் பம் எடுத்துக் கொள்வோம். இச் சித்திரத் தேர் வெள்ளோட்டம் சிறப்புற நடைபெற ஆசிவேண்டி எல்லாம் வல்ல ஸ்ரீ சிவகாமி அன்னையையும் பூஜ்ய குரு தேவர் சுவாமி சின்மயானந்தரையும் பிரார்த்திக்கின்றோம்.

**பிரம்மச்சாரி ஜாக்ரத் சைதன்யா**
**வதிவிட ஆச்சாரியார், சின்மயா மிஷன்,**
**யாழ்ப்பாணம்**





தில்லையம்பதியாளே! சிவகாமசுந்தரியே! சரணம்".

**பிரதம குருவின் ஆசியுரை**

கடவுளுடைய திருவடிகளை அடைவதற்காகவே பிறவி எடுத்தோமாதலால் அத்திருவடிகளைச் சிந்தித்தலும், துதித்தலும், வணங்குதலுமே நமது முக்கியமான கடமையாகும். உடம்பு நயப்படுவதற்கு உணவும், மனம் நயப்படுவதற்கு கல்வியும் வேண்டப்படுதல் போல ஆன்மா நயப்படுவதற்கு கடவுள் வழிபாடு வேண்டப்படும். ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும் மலங்களையும் அழிக்கின்ற இரதோற்சவமானது பரார்த்த பூஜையிலே முக்கியமானது. அழித்தல் தொழிலை குறிக்கின்ற தேர்த்திருவிழாவானது எமது ஆலயத்தில் நவகோண வடிவிலான புதிய சித்திரத்தேர் அமைக்கப் பெற்று நடைபெறுவதையிட்டு மனம் மகிழ்வோடு அம்பாளினுடைய அருளும் கிடைக்கப் பெற்று வாழ பிரார்த்தனையோடு எனது நல்லாசிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

சுபமஸ்து

**சிவஸ்ரீ. நா. திவாகரக் குருக்கள்**
**பிரதம குரு**
**தில்லையம்பதி**



**பூஜண்ட நாகநாத சித்தர் சுவாமிகளின் ஆசிச் செய்தி**

யாழ்ப்பாணம், கோண்டாவில் ஈழத்து தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீசிவகாமி அம்பாள் திருக்கோயில் நாற்பத்திரெண்டாவது ஆண்டு வைகாசி மஹோற்சவ பெருவிழாவில் புதிதாக அமைக்கப் பெற்ற சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா சிறப்புற அமைய எம்பெருமாட்டியை வேண்டுவதுடன் அவள் அடியார்களுக்கு அருள் அள்ளி வழங்க வேண்டுமென வாழ்த்தி அமைகின்றேன்.

**பூஜண்ட நாகநாத சித்தர் சுவாமிகள் (அதிஸ்டானம்)**
**வடபன்பட்டி திருவத்தூர் தாழ்வு, சிவகங்கை மாவட்டம், தமிழ்நாடு.**



**பரிபாலன சபைத் தலைவரின் வாழ்த்துச் செய்தி**

ஆலயம் தொழுவது சாலமும் நன்று என்ற முதுமொழிக்கிணங்க உலகம் முழுவதும் பரந்து வாழும் மக்கள் தங்கள் சமயங்களுக்கேற்ற வகையில் ஆலயங்களை அமைத்து போற்றிவருவது நெடுங்கால வழக்கமாகும். என் கடன் பணி செய்து கிடப்பதே என்பதற்கிணங்க கோண்டாவில் ஈழத்து தில்லையம்பதி அருள் மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாளுக்கு தொண்டு செய்யும் பேறு கிடைத்தது பெரும் கருணையே. இன்று எமது சபையின் அயராத ஒத்துழைப்பாலும் கிராம மக்களின் உதவியாலும் புலம்பெயர்ந்து வாழும் உறவுகளின் அன்பினாலும் மிகக் குறுகிய காலத்தில் இந் நவகோண சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா நடைபெறுவதையிட்டு மனம் மகிழ்வதோடு அம்பாளின் அருளும் கிடைக்க எனது நல்லாசிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**சின்னராசா சிவலிங்கம், தலைவர், பரிபாலன சபை**



**தேர்த் திருப்பணி சபை தலைவரின் வாழ்த்துச் செய்தி**

அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகி ஈழத்து தில்லையம்பதி ஸ்ரீ. சிவகாமி அம்பாளுக்கு புதிதாக அமைக்கப் பெற்ற நவகோண சித்திரத் தேரானது வெள்ளோட்ட விழா காணவுள்ளது மிகவும் மகிழ்ச்சியைத் தருகின்றது. எமது தேர்த் திருப்பணி சபையினரின் பெரு முயற்சியினாலும் பொதுமக்களின் அளப்பரிய பங்களிப்பினாலும் சிற்பாச்சாரியார்களின் கைவண்ணத்தினாலும் அம்பிகையின் அருட்பிரவாகத்தினாலும் நவகோண சித்திரத் தேர் உருவாக்கப்பட்டு வெள்ளோட்டம் நடைபெறுவது மிகவும் சிறப்பானதாகும்.

**க. கிருபாகரன்**
**தலைவர், தேர்த் திருப்பணிச் சபை.**



**அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி**

கோண்டாவில் ஈழத்து தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீசிவகாமி அம்பாள் திருக்கோயில் நாற்பத்திரெண்டாவது ஆண்டு வைகாசி மஹோற்சவ பெருவிழாவில் புதிதாக அமைக்கப்பெற்ற சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா சிறப்புற அமைய வாழ்த்துச்செய்திவழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன். சீர்மேவு யாழ்ப்பாணம் கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில் தொன்மையான ஆதி சக்தியாக அடியவர்களின் ஆன்மீக தேடலுக்கும் அருள் வெளிப்பாட்டிற்கும் ஆதாரமாய் புதிய சித்திர சிறப்புத் தேரில் உமையவள் காட்சி தருவது எல்லோருக்கும் இன்பத்தைத் தரும் சக்தியாகவும் அடியவர்கள் அம்பாளின் அருட்கடாட்சத்தைப் பெற்று உய்யும் வண்ணம் கிடைத்தற்கரிய பேறாய் அமைகின்றது. அம்பிகையின் அற்புத கருணையினை அம்பிகை அடியவர்கள் சிறப்புற பெறுதற் பொருட்டு வைகாசி மஹோற்சவ பெருவிழாவில் புதிய சித்திரத் தேர் பணியினை சிறப்புற நடத்தும் பரிபாலன சபையினர் போற்றுதற்குரியவர்கள். அவர்களது திருப்பணி தொடரவும் சித்திரத் தேர் வெள்ளோட்ட நிகழ்வு சிறப்புற அமையவும் அம்பிகையின் திருப்பாதங்களைப் பணிந்து என் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

**நா.வேதநாயகன்**
**அரசாங்க அதிபர், யாழ்.மாவட்டம்.**



**தேர்த்திருப்பணிச்சபை செயலாளரின் வாழ்த்துச் செய்தி**

ஈழத்து தில்லையம்பதியில் அருளாட்சி புரியும் அன்னை ஸ்ரீ சிவகாமி அம்பாளுக்கு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நவகோண சித்திரத்தேர் வெள்ளோட்ட விழாவிற்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மனமகிழ்வடைகிறேன். 150 ஆண்டுகளுக்கு முன் தோற்றம் பெற்று இத் திருக்கோயிலுக்கு முன்பு இருந்த அன்னை ஸ்ரீ சிவகாமி அம்பாளுக்கு சித்திரத்தேர் அமைத்த தனவான்கள், அன்றைய தேர்த் திருப்பணி சபையினரின் பெரு முயற்சியால் உருவாக்கப்பட்டது. இவ்வாண்டு இன்றைய தேர்த்திருப்பணி சபையின் பெரு முயற்சியினாலும் ஊர் மக்களின் நிதி அன்பளிப்புடன் வெளிநாட்டில் வசிக்கும் எமது கிராம மக்களின் நிதி அன்பளிப்புடன் புதிய நவகோண சித்திரத்தேர் அமைக்கப்பட்டு வெள்ளோட்டம் காணவுள்ளது மிகவும் சிறப்பானது ஒன்றாகும்.

**சி.ஆனந்தராஜா, செயலாளர், தேர்த்திருப்பணிச் சபை.**



**மத்திய கிராம அபிவிருத்திச் சங்க, மத்திய சனசமூக நிலைய தலைவரின் வாழ்த்துச் செய்தி**

தில்லையம்பதிஅருள்மிகுஸ்ரீசிவகாமி அம்பாள் திருத்தேரில் வரும் காட்சி காண கோடி கண்கள் வேண்டும். புதுத்தேரில் எம் பெருமாள் வீற்றிருந்து பவனி வந்து எம்மவர்களின் குறை தீர்ப்பாள் என்பதில் ஐயமில்லை. எம்பெருமாளுக்கு புதுத்தேர் அமைக்க உதவிய அத்தனை உள்ளங்களுக்கும் எனது பாராட்டுக்கள் உரித்தாகுக.

**ந. மயூரன்,**
**தலைவர், ம.கி.அ.சங்க, ம.ச.ச.நிலையம்**



**எல்லாம் வல்ல கோண்டாவில் ஈழத்து தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாளுக்கு கோடி வணக்கங்கள்**

எம் பெருமாளுக்கு திருவருட் கருணையோடு திராவிட மரபில் முக உத்தர சிற்ப வேலைப்பாடுகளுடன் நவ பத்ம சித்திரத் தேர் நிர்மாணித்து மாதா, பிதா, குரு, பாதம் பணிந்து வெள்ளோட்டம் விடுகின்ற வேளை மிகுந்த பெருமகிழ்ச்சியடைகின்றேன். இப்பெரும் திருப்பணியில் எமது சிற்பாலயம் இந்த சிற்பத் தேரினை வடிவமைத்துள்ளது. இத் திருப்பணியில் இணைந்து பணியாற்றிய கலைஞர்களுக்கும் தேர்த்திருப் பணிச் சபையினர்க்கம் ஆலய நிர்வாக சபையினர்க்கும் ஊர்மக்கள், இளைஞர்கள் யாவர்கட்கும் எம் பெருமாள் சிற்பத்தேரேறி அருள் மழை பொழிய அவர் பாதம் பணிந்து வணங்கி அமைகின்றேன்.

**தேர் ஸ்தபதி கலைஞானச்செல்வன்**
**விஸ்வப் பிரம்மஸ்ரீ**
**மு.சங்கர் ஆச்சாரியார்.**

## காணக் கண் கோடி வேண்டுமே...



அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகியாக கோண்டாவில் தில்லையம்பதியிலேகோயில்கொண்டு எம் அடியார்களுக்கெல்லாம் அருளாட்சி புரியும் அருள்மிகு ஸ்ரீ சிவகாமிஅம்பாளின் அற்புதங்கள் பல. அத்தகைய அன்னை இன்று அடியார் துயர் துடைத்து அழகுக் கோலத்துடன் அருட்காட்சி தருகின்றாள். வேண்டும் வரம் தந்தருளும் எங்கள் அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாளின் அருட் கடாட்சம் இப் பூவுலகில் தோன்றிய அன்னத்து அடியார்களுக்கும், ஜீவராசிகளுக்கும் கிட்டுவதாக. எந்நாளும் பாடிப்பரவி நிதம் நிதம் குறையிரந்து அருள் வேண்டி இன்று எத்தனை எத்தனை திருவுள்ளங்கள் ஆனந்தம் கொண்டாடுகின்றன.

*ஆயிரம் ஆயிரம் நல் தொலைவில் எம் ஆத்மா இருந்தாலும் தேவி சிவகாமியே உன் திருவடி நாடுதம்மா* என்ற திருப்பாடலுக்கிணங்க அன்னையின் நினைவுடன் புலம் பெயர்ந்த நாட்டில் கால் பதித்திருக்கும் எங்கள் அன்னையின் பக்தர்களும், இங்குள்ள அன்னை ஸ்ரீ சிவகாமி அம்பாளின் அடியவர்களும் இந்த அரும்பணிக்கு வழிகாட்டியவர்களாக இருக்கின்றார்கள். இத்தகைய பக்தர்களின் வழிகாட்டலிலே தேர்த் திருப்பணிகளைத் தொடங்கிய நாள் முதல் புதிய நவகோண சித்திரத் தேர் பவனிவரும் இந்நாள் வரை பலரும் நிதியாகவும் பொருளாகவும் தமது பங்களிப்பினை அளித்து வருகின்றனர்.

எனவே எம் உள்ளத்தில் உறைந்து, எம்மை யெல்லாம் ஆற்றுப்படுத்தி அருள்பாலித்துக் கொண்டிருக் கும் ஈழத்து தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம் பாளின் அருட்கடாட்சம் என்றும் அடியவர்க்கு கிடைக்கப் பெற வேண்டும் என என் அன்னையை மனதால் நினைத்துக் கொண்டு வேண்டுகின்றேன்.

ஈழத்து தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாளின் அழகிய நவகோண சித்திரத் தேரில், அன்னையின் ஆலயம்சார் ஆரம்ப வரலாற்று மகிமைகள், புராணக் கதைகள், சித்தாந்த தத்துவங்கள், அன்னையின் அருளாட்சியின் போது வெளிப்படும் சக்தியின் அவதார திருவுருவக் காட்சிகள் முதலானவை அமைக்கப் பெற்றுள்ளன.

மேலும் தேர்மனை, தேரோடும் வீதி, அன்னையின் அருளோசையாக விளங்கும் பாரிய கண்டாமணி, அதற்கான அழகான மணிக்கோபுரம் அத்தனைக்கும் முந்தி உயர்ந்து விளங்கும் வானுயர்ந்த இராஜகோபுரம் முதலிய இத்தனையும் அமையப் பெற்றனவாக அன்னையின் திருக்கோயில் காட்சியளிக்கின்றது.

இத் திருக்கோயிலின் முன்றலில் தலவிருட்சமாகக் காணப்படும் ஆல் அரசு மரத்தின் அழகிய மரப் பொந்தினூடாக மூலஸ்தானத்தில் ஆனந்தக் கலசம் காட்டும் அருளாட்சி அன்னையவள், அடியார்க்கு மனமிரந்து கேட்கும் அத்தனை வரங்களையும் கொடுத்தருள்கின்றமை அதியற்புதம் நிகழ்த்தும் அம்பாளின் அனுக்கிரகமே. அனைவரும் அன்னையின் அருட்கடாட்சத்தினுள் திளைத்து, அருளாட்சி பெற்று சக்தியின் நவகோ்ண சித்திரத் தேரை ஊர்கூடி வடம் பிடித்து வருகின்ற காட்சியைக் காண்போம்.

அம்பாளின் அடியவர்களின் பங்களிப்பால் அன்னையின் ஆலயம் உயர்வு பெற்று வரலாற்றின் பொக்கிஷமாக விளங்குகின்றது. எல்லாம் வல்ல அவள் பாதங்களை நாளும் துதித்து அவள் அருளைப் பெறுவோமாக.

**க. தர்மராசா,**
**பொருளாளர், தேர்த் திருப்பணிச் சபை**

அனுசரணை :
இரதோற்சவ வெள்ளோட்டம்
சிறப்புற வாழ்த்துவோர்
கிருஷ்ணபிள்ளை
கனகராஜா (குடும்பம்)
- ஜேர்மனி -

[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருக்கோயில் பரிபாலன சபையினரும் தேர்த்திருப்பணிச் சபையினரும்.**

# உலக சுற்றாடல் தின வாரத்தை முன்னிட்டு கோப்பாய் மத்தியில் பல்வேறு திட்டங்கள்





(யாழ்ப்பாணம்)

உலக சுற்றாடல் தின வாரத்தை முன்னிட்டு கோப்பாய் மத்தி கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கோப்பாய் மத்தி கிராம அலுவலர் பிரிவின் ஏற்பாட்டில் ஆரம்பமான இந்த செயற்றிட்டத்தில் சுற்றாடல் விழிப்புணர்வு தினத்தை முன்னிட்டு கடந்த வாரம் 29 ஆம் திகதி கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் மாணவர்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கு இடம்பெற்றது.

இதே வேளையில் சுற்றுப்புற சூழலை சுத்தப் படுத்தும் தினத்தை முன் னிட்டு கடந்த 30 ஆம் திகதி கோப்பாய் மத்தி றோ.க.த.க. பாடசாலையில் சிரமதான நிகழ்வு இடம்பெற்றது. மரம் நடுகை தினத்தை முன்னிட்டு கடந்த முதலாம் திகதி கோப்பாய் மத்தி பரிகன்னி மரியாள் தேவாலயத்தில் மரநடுகை நிகழ்வு இடம் பெற்றது.

நீர் மற்றும் நீர்வள பாதுகாப்புத் தினத்தை முன்னிட்டு கடந்த 2 ஆம் திகதி கோப்பாய் மத்தி கிராம சேவகர் அலுவலகத்தில் குழாய்க்கிணறு அடித்தல் தொடர்பான விழிப்புணர்வு கருத்தரங்கு இடம்பெற்றது. உயிர் பல்வகைமை பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு கடந்த 3 ஆம் திகதி கோப்பாய் நாவலர் வித்தியாலயத்தில் தரம் 5 மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்வு இடம் பெற்றது.

நில முகாமைத்துவ தினத்தை முன்னிட்டு முன்னிட்டு நேற்றைய தினம் கோப்பாய் மத்தி காந்தி கிராமத்தில் பார்த்தீனிய ஒழிப்பு வேலைத்திட்டம் இடம்பெற்றது. (இ-9)

# புனர்வாழ்வு அதிகார சபையால் அதிகாரிகளுக்கு பயிற்சிப்பட்டறை



(யாழ்ப்பாணம்)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் புனர்வாழ்வளிப்பு நிகழ்ச்சித் திட்டத்தை சிறப்பான முறையில் அமுல்படுத்துவதற்காக மாவட்ட மட்ட அதிகாரிகள். அபிவிருத்தி உத்தியோகத்தர்களை ஊக்குவிப்பதற்கான பயிற்சி பட்டறை புனர்வாழ்வு அதிகார சபையின் ஏற்பாட்டில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

ஒஃப்பர் நிறுவனத்தின் அனுசரணையில் நடைபெற்று வரும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தில் யாழ்.மாவட்ட அபிவிருந்தி உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வு ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை யாழ்.மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. அதில் புனர்வாழ்வு அதிகார சபையின் மனித நன்னடத்தைகள் நிறைவேற்று பணிப்பாளர் என்.புகனேந்திரன், யாழ்.மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் எஸ். அகிலன், வேர்ல்ட் விஷன் நிறுவன உத்தியோகத்தர் ஜெராட் அன்ரனி ஆகியோர் கலந்து கொண்டு கருத்துரைகளை வழங்கியிருந்தனர். (இ-9)

# மஹா கும்பாபிஷேகம்

(கரணவாய்)

செம்பியன் பற்று தெற்கு பாலையடி ஞானவைரவர் ஆலய மஹாகும்பாபிஷேகம் எதிர்வரும் 14ஆம் திகதி புதன் கிழமை முற்பகல் 10.38 தொடக்கம் 11.34 மணிவரையான சுபவேளையில் நடைபெறவுள்ளது. 13ஆம் திகதி காலை 8 மணிமுதல் மாலை 6 மணிவரை எண்ணெய்க்காப்புச் சாத்துதல் இடம் பெறவுள்ளது. (இ-60)

# காணாமற்போனோர் உறவுகளின் கவனயீர்ப்பு நேற்றும் தொடர்ந்தது




வடமராட்சி கிழக்கு மருதங்கேணியில் காணாமல் போனோரின் உறவினர்களால் முன்னெடுக்கப்படும் கவனயீர்ப்புப் போராட்டம் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. (இ-60)

# சிவசிதம்பரத்தின் நினைவு தினம் இன்று



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அமரர் மு.சிவசிதம்பரத்தின் நினைவு தினம் இன்று திங்கட் கிழமை காலை 8 மணியளவில் நெல்லியடி நகரில் உள்ள அவரது சிலைக்கு முன்பாக இடம் பெறும்.

பாராளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா அமரர் சிதம்பரத்தின் சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்துவார். இந் நிகழ்வில் மாகாணசபை உறுப்பினர்களான எஸ். சுகிர்தன், வி.சிவயோகன், எம். கே. சிவாஜிலிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர். (இ-60)

# சுற்றாடல் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதி மைத்திரியின் செய்தி

தானும் இயற்கையின் ஓர் படைப்பு என்பதை ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவத்தை மனிதன் பல நூற்றாண்டுகள் கடந்ததன் பின்னரே பெற்றுக் கொண்டான்.

உகந்ததை உரிய இடத்தில் வைத்து உருவாக்கப்பட்டிருக்கும் இயற்கையின் அபூர்வ படைப்புக்களை மனிதர்கள் தத்தமது எண்ணங்களுக்கேற்ப மாற்றியமைக்கத் தொடங்கியதன் விளைவாக மனித நாகரிகம் ஆரம்பமான போதிலும் இயற்கையின் நிலையான நீடிப்பு இல்லையெனில் மனிதனின் நிலைப்பு இல்லை என்பதை இயற்கை தற்போது வெளிப்படுத்திவரும் எச்சரிக்கைகளைக் கொண்டு நாம் ஏற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. பாரிய மண்சரிவு வெள்ளப் பெருக்கு, பஞ்சம் மற்றும் வரட்சி என்பவையும் இயற்கையின் அந்த எச்சரிக்கையினையே எமக்கு நினைவூட்டுகின்றன. இயற்கையின் அத்தகைய எச்சரிக்கைகளை ஆழமாக புரிந்து இயற்கையுடன் ஒன்றிய தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ளக்கூடிய வாய்ப்பு இன்னும் எமக்கு இருந்து வருகின்றது. இயற்கையை ரசிக்கும் சமூகம் எனும் தொனிப்பொருளின்கீழ் நடத்தப்படும் இவ்வருட உலக சுற்றாடல் தினமும்



அவ்வாறானதொரு சகவாழ்வினை இயற்கையோடு ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய தன் அவசியத்தை நமக்கு எடுத்துக் கூறுகின்றது. அவ்வாறு சுற்றாடல் மற்றும் அதன் செயற்பாடுகள் தொடர்பில் மக்களிடம் காணப்படும் அறிவினை அவர்களது அன்றாட வாழ்க்கை நடத்தையிலும் உள்வாங்கச் செய்வதே இவ் வருட சுற்றாடல் தினத்தின் எதிர்பார்ப்பாகும்.

சூழலுக்கு ஒவ்வாத வாழ்க்கை முறைகள் மற்றும் பழக்க வழக்கங்களில் இருந்து விலகிக் கொள்ளல் மற்றும் சூழலை நேசிக்கும் பழக்க வழக்கங்களைப் பழகிக் கொள்ளல் என்பன மனிதர்களின் நிலையான வாழ்க்கையுடன் நேரடியான தொடர்புகளை கொண்டுள்ளன என்பதை உணர்ந்து கொள்வதே இதன் நோக்கமாகும்.

இக் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக நடத்தப்படும் உலக சுற்றாடல் தினத்தின் அனைத்து செயற்பாடுகளும் சிறப்பாக வெற்றியடைய வேண்டுமென பிரார்த்திப்பதுடன் சூழலின் நீடித்த நிலைப்புக்காக செயற்படும் அனைத்து சூழல் நேய செயற்பாட்டாளர்களுடன் நானும் இணைந்து கொள்கிறேன்.

மைத்திரிபால சிறிசேன
இலங்கை ஜனாதிபதி

# இராசி பலன்

05.06.2017
(வைகாசி 22, திங்கட்கிழமை)
சூரிய உதயம் காலை 5.52 மணிக்கு
ஏகாதசி பிற்பகல் 12.26 மணிவரை
சித்திரை முன்னிரவு 8.13 மணிவரை
சுபநேரம் 11.52-1.22 மணிவரை
இராகுகாலம் 7.22-8.52 மணிவரை
சர்வதேச சுற்றுச்சூழல் தினம்
ஏகாதசி விரதம், சித்தாமிர்தம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | சுக் | சூரி புத | செவ் |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் பூரட்டாதி ,உத்தரம் காலை7.38 ற்கு துலா- சந் | | |
| | | | ராகு |
| | சனி | சந் | குரு |

**மீனம்:** வரவும் செலவும் சமமாகும் நாள், கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், தொழில் ரீதியான பயணங்களின் போது கூடுதல் கவனம் தேவை.

**மேடம்:** பொன்னான நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், உடல் நலம் சீராகும், புதிய பொருட் சேர்க்கையுண்டு, முயற்சிகள் கைகூடும்.

**இடபம்:** தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், உள்ளம் மகிழும் வகையில் உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.

**மிதுனம்:** நன்மைகள் நாடி வரும் நாள், பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம்.

**கும்பம்:** தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்; பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள்.

**கடகம்:** தேவைகள் பூர்த்தியாகும் நாள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு.

**மகரம்:** தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், தன்னம்பிக்கை துளிர் விடும் நாள்.

**சிம்மம்:** உற்சாகத்தோடு பணி புரிவீர்கள், சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட சிறப் படைவீர்கள், சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும்.

**தனுசு:** நினைத்த காரியம் நிறைவேறி நிம்மதி காணும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், குடும்ப மகிழ்ச்சி கூடும் நாள்.

**விருச்சிகம்:** செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு, அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் நாள்.

**துலாம்:** எதிர்பாராத காரியமொன்று இன்று கைகூடும் வாய்ப்புண்டு, தேக நலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், கற்பனை மிகுதியான நாள்.

**கன்னி:** சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், தொழில் ரீதியாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், வார்த்தைகளில் நிதானம் தேவை, பொது நல ஈடுபாடு கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

57

# தமிழரின் தலைவிதி எப்படியாகும்?



வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்களை கட்சியிலிருந்து நீக்கிவிடுமாறு கட்சித் தலைமைக்கு கூறிவிட்டேன் என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் அவுஸ்திரேலிய வானொலிக்கு வழங்கிய செவ்வியில் தெரிவிக்க, அது தமிழர் தாயகத்திலும் புலம் பெயர் தமிழ்மக்களிடமும்



மிகப்பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

வடக்கின் முதலமைச்சரை கட்சியில் இருந்து நீக்கிவிடுமாறு கூறுகின்ற அதிகாரத்தை சுமந்திரனுக்குக் கொடுத்தது யார்? என்ற வாதப்பிரதிவாதங்கள் முன்னெழுந்தன.

சுமந்திரனின் பேட்டி தொடர்பில் வடக்கின் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் ஓர் அறிக்கையொன்றை வெளியிட்டிருந்தார். அந்த அறிக்கையில் உடல்நிலை சரியில்லை என்றால் எப்படிக் கனடாவுக்குச் செல்ல முடியும். எனது உடல் நிலை சரியில்லாத காரணத்தால்தான் நான் கனடாவுக்கு போகமுடியவில்லை என்பதாக முதலமைச்சரின் விளக்க அறிக்கை இருந்தது.

எதுவாயினும் கட்சியிலிருந்து முதலமைச்சர் விக்னேஸ்வரனை நீக்கிவிடுமாறு கட்சித் தலைமைக்கு கூறிவிட்டேன் என்பதற்குள் சமயப் பாகுபாடும் உள்ளது என்ற கருத்துக்களும் வெளிப்பட்டன.

அதாவது வடக்கின் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் அவர்கள் நெற்றியில் திருநீறு அணிவது, குங்குமத் திலகம் இடுவது, மேடைகளில் உரையாற்றும் போது குருப்பிரம்மா குரு விஷ்ணு... என்ற சுலோகத்தைக் கூறுவது என்பன கிறிஸ்தவ சமயத்தின் சில பிரிவினருக்கு உடன்பாடில்லை என்றும் எனவேதான் முதலமைச்சர்

## விக்னேஸ்வரன் சுலோகம் சொல்வதை தடுத்து நிறுத்தியது யார்கொலோ!

விக்னேஸ்வரனை அந்தப் பதவியில் இருந்து நீக்கவேண்டும் என்ற அடிப்படையில்தான், கூட்டமைப்பிற்குள் இருக்கக்கூடிய ஒரு சிலர் கடும் முயற்சி செய்கின்றனர் என்ற கருத்துக்களும் வெளிவந்தன.

தந்தை செல்வநாயகம் அவர்கள் தென்னிந்தியத் திருச்சபை சார்ந்தவர். அவர் தமிழர் தலைவராக இருப்பதை இந்துக்கள் எதிர்க்கவில்லை.

சைவாலயங்களுக்கு தந்தை செல்வநாயகம் செல்லும் சந்தர்ப்பத்தில் ஆலயப் பிரசாதங்களை வழங்க சிவாச்சாரியார்கள் முற்படும் போதெல்லாம் தந்தை செல்வநாயகம் இரண்டடி பின் செல்லுவார் என்ற அவதானங்களும் தமிழ் மக்களிடம் உண்டு.

இருந்தும் தந்தை செல்வநாயகம் தமிழர் தலைவர் என்பதை சைவத் தமிழர்கள் ஏற்றுக்கொண்டனர். அவ்வாறு ஏற்றுக்கொண்டதால்தான் தந்தை செல்வநாயகம் தமிழர் தலைவராக இருந்தார்.

ஆனால் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் இந்துவாக இருப்பதால் அந்தப் பதவியில் இருந்து அவரை நீக்க கிறிஸ்தவத்தின் ஒரு சில பிரிவினர் முற்படுகின்றனர் என்ற கருத்து எழுந்த போது தமிழ்மக்களின் எதிர்கால நலன்கருதி அந்தக் கருத்துக்களை தமிழ் ஊடகங்கள் அப்படியே இருட்டடிப்புச் செய்தன.

எனினும் மேடைகளில் பேசுவதற்கு முன்னதாக முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் சொல்லுகின்ற குருப்பிரம்மா குரு விஷ்ணு... என்ற சுலோகத்தை இப்போது மேடைகளில் கூறுவதை அவர் தவிர்த்துள்ளார் என்பதையும் அவதானிக்க முடிகின்றது.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த நிகழ்வொன்றில் உரையாற்றிய விக்னேஸ்வரன் அவர்கள் தனது உரையின் தொடக்கத்தில் குருப்பிரம்மா குரு விஷ்ணு.... என்ற சுலோகத்தை கூறியுள்ளார்.

அந்த மேடையில் எம்.ஏ. சுமந்திரன், தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோரும் இருந்துள்ளனர். இவ்வாறு சுலோகம் சொல்வது நல்லதல்ல என மேடையில் இருந்தவாறு சித்தார்த்தனும் சுமந்திரனும் கதைத்துள்ளனர்.

இச்சுலோகத்தை மேடையில் சொல்வது பொருத்தமல்ல என்றும் இதுபற்றி சித்தார்த்தன் முதலமைச்சர் விக்னேஸ்வரனிடம் சொல்லவேண்டும் என்றும் அந்த சம்பாசணையில் முடிவு செய்யப்பட,

ஒரு சந்தர்ப்பத்தில் குறித்த சுலோகத்தை தவிர்க்குமாறு சித்தார்த்தன் முதலமைச்சர் விக்னேஸ்வரனிடம் கூறியதாகவும் அதற்குப் பின்னர் அந்தச் சுலோகத்தை மனதில் நினைத்துவிட்டு முதலமைச்சர் விக்னேஸ்வரன் உரையைத் தொடங்குகிறார் என்ற செய்திகளும் உண்டு.

என்ன செய்வது, பௌத்தர்கள் பிரித்தோதி பொது நிகழ்வுகளை ஆரம்பிப்பர்.

இந்தியாவின் பிரதமராக இருந்த இந்திராகாந்தி உருத்திராட்ச மாலையுடனேயே பிரதமர் பதவியை அலங்கரித்தார்.

இப்போது இருக்கும் பிரதமர் நரேந்திரமோடி காவி தரிப்பார், மிக நீண்ட உருத்திராட்சமாலை அணிவார், அமெரிக்க விஜயத்தின் போது நவராத்திரி விரத காலம் என்பதால் அமெரிக்க ஜனாதிபதியின் விருந்தையும் மறுப்பார், இலங்கைக்கு விஜயம் செய்து மலையகத் தமிழ் மக்களை சந்தித்து உரையாற்றும்போது நீங்களும் நானும் சிவனை வழிபடுபவர்கள் என்று கூறுவார்.

ஆனால் வடக்கின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் சுலோகம் சொல்வதும் திருநீறு அணிவதும் குங்குமத் திலகம் இடுவதும் சிலருக்கு மத அடையாளமாகத் தெரிய, அதை அடியோடு நீக்க வேண்டும் என முயற்சி செய்கின்றனர்.

இதன் ஒரு வெளிப்பாடாகக் கூட அந்த வானொலிச் செவ்வி இருந்திருக்கலாம் என்ற விமர்சனங்களும் உண்டு.

எது எவ்வாறாயினும் கட்சியில் இருந்து முதலமைச்சர் விக்னேஸ்வரனை நீக்கிவிடுமாறு கட்சித் தலைவருக்குக் கூறிவிட்டேன் என பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அவுஸ்திரேலிய வானொலிக்கு வழங்கிய செவ்வி சுமந்திரன் எதிர் விக்னேஸ்வரன் என்ற ஒரு குழப்பமான சூழ்நிலையை ஏற்படுத்தியது.

(வளரும்)

-புருசோத்தமன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6 கோடியே 92 இலட்சத்து 69 ஆயிரம் நிதி

# 8 ஆயிரத்து 8 விவசாயிகளின்

# நெற்பயிரழிவிற்கு பகிர்ந்தளிப்பு

## மன்னார் மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் தெரிவிப்பு

(மல்லாவி)

மன்னார் மாவட்டத்தில் கடந்த 2016-2017 ஆம் ஆண்டுக்கான காலபோக நெற் செய்கையின் போது வறட்சி காரணமாக நெற் செய்கை பாதிக்கப்பட்ட 8 ஆயிரத்து 8 விவசாயிகளின் 22 ஆயிரத்து 286.75 ஏக்கர் பயிரழிவிற்கு மொத் தம் 6 கோடியே 92 இலட் சத்து 69 ஆயிரத்து 200 ரூபா பணம் விவசாயிக ளின் வங்கிக் கணக்குகள் ஊடாக பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட கமநல அபிவிருத் தித் திணைக்களத்தின் உதவி ஆணையாளர் பாலசிங்கம் - தேவரதன் தெரிவித்துள்ளார்.



இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் ஏற்பட்ட வறட்சி நிலை காரணமாக மன்னார் மாவட்டத்தில் உள்ள 12 கமநல சேவை நிலையங்களின் கீழ் கடந்த 2016 - 2017 ஆம் ஆண்டுக்கான காலபோக நெற் செய்கை பாதிப்படைந்துள்ளது.

இதன்போது நெற் செய்கையை மேற்கொண்ட நிலையில் 3 ஆயிரத்து 481 விவசாயிகளின் 9 ஆயிரத்து 860.25 ஏக்கர் நெற் பயிர ழிவிற்கு தலா ஒரு ஏக்க ருக்கு 8 ஆயிரத்து 650 ரூபா வீதம் மொத்தம் 03 கோடியே ஒரு இலட்சத்து 10 ஆயிரத்து 650 ரூபா பணம் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வறட்சி காரணமாக குளங்களின் நீர் மட்டம் குறைவடைந் தமையால் நெல் விதைப்பு மேற்கொள்ள முடியாது போன 4 ஆயிரத்து 527 விவசாயிகளின் 12 ஆயிரத்து 426.5 ஏக்கர் நெற் செய்கை காணிக்கு விவசாயிகளின் பொருளாதார நிலைமையைக் கருத்தில் கொண்டு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் இழப்பீட்டை அரசாங்கம் வழங்கியுள்ளது.

இதற்கமைய, ஏக்கர் ஒன்றிற்கு 8 ஆயிரத்து 650 ரூபா வீதம் மொத்தம் 03 கோடியே 91 இலட்சத்து 58 ஆயிரத்து 550 ரூபா பணம் விவசாயிகளின் தனிப்பட்ட வங்கிக் கணக்கிலக்கங்கள் ஊடாக வழங்கப்பட்டுள்ளது.

இந்தக் கொடுப்பனவுகள் அனைத்தும் மத்திய விவசாய அமைச்சின் கீழுள்ள கமத்தொழில் மற்றும் கமநலக் காப்புறுதி சபையின் ஊடாக விவசாயிகளின் வங்கிக் கணக்கிலக்கங்களுக்கு வரவிடப்பட்டு வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-15)

## நட்பு நாடலும் நண்பகல் விருந்தும்

மு/ மாங்குளம் மகா வித்தியாலயத்தில் இன்று திங்கட்கிழமை முற்பகல் 11.30 மணிக்கு நட்பு நாடலும் நண்பகல் விருந்தும் வித்தியாலய பிரதான மண்டபத்தில் மன்றத் தலைவர் ச. சாரூபன் தலைமையில் நடைபெறும்.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக முது நிலை தமிழ்த் துறை விரிவுரையாளர் த. அருந்தாகரன், சிறப்பு விருந்தினராக ஒட்டுசுட்டான் கோட்டக் கல்விப் பணிப்பாளர் த. மங்கையச்செல்வன், ஆசிரியர் செல்வி. சி. உமா நந்தினி, மாங்குளம் கிராம அலுவலர் த.தனபாலராஜ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினராக கிளிநொச்சி ம.வி. பிரதி அதிபர் ப.ரவீந்திரநாதன், மு/பாலிநகர் ம.வி.அதிபர் த.பிரேமச்சந்திரன், யாழ்/தும்பளை சிவப்பிரகாச ம.வி.பிரதி அதிபர் செ.தேவகுமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (2)






முறிகண்டி தென்னிந்திய திருச்சபை புனித பவுல் பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தின் வருடாந்த மழலைகள் விளையாட்டுவிழா கடந்த 2 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்றது...

(படங்கள்:- மல்லாவி, புலோப்பளை செய்தியாளர்கள்)

## முல்லைத்தீவு, கிளிநொச்சி மாவட்டங்களில் 169 பேருக்கு முள்ளந்தண்டு வடம் பாதிப்பு

### 27 பேருக்கு முற்றாக கழுத்துக்குக் கீழ் செயலிழப்பு

நாட்டில் இடம்பெற்ற யுத்த சூழ்நிலைகளாலும் மற்றும் ஏனைய வழிகளாலும் முள்ளந்தண்டு வடம் பாதிக்கப்பட்ட நிலையில் வடக்கு மாகாணத்திற்குட்பட்ட முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்கள் உட்பட ஐந்து மாவட்டங்களிலும் ஆண்கள் 129 பேரும், பெண்கள் 40 பேருமாக மொத்தம் 169 பேர் இதுவரை பதிவு செய்யப்பட்டுள்ள நிலையில் இவர்களில் 27 பேருக்கு கீழ் முற்றாக செயலிழந்துள்ள நிலையில் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் தமது உறவினர்களுடன் தங்கி வாழும் அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக பாதிக்கப்பட்ட உடல் வலுவிழந்தோர் தெரிவித்துள்ளார்கள்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

பாதிக்கப்பட்ட நிலையில் வடக்கு மாகாணத்தில் மட்டும் 216 பேருக்கு மேல் வாழ்ந்து வந்த நிலையில் பொருளாதார வசதிகள் இன்றி 47 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

மிகுதியான 169 பேரும் பொருளாதார ரீதியான பாதிப்புக்களையும் மன உளைச்சல்களையும் சுமந்தவாறு வாழ்ந்து வருகின்றனர்.

இந்த உடல் வலுவிழந்த மாற்றுத் திறனாளிகளில் முல்லைத்தீவு மாவட்டத்தில் 50 பேரும், கிளிநொச்சி மாவட்டத்தில் 46 பேருமாக மொத்தம் 96 பேர் தற்போது வாழ்ந்து வருகின்றனர்.

இந்நிலையில், உடல் வலுவிழந்த 169 மாற்றுத் திறனாளிகளில் முற்று முழுதாக உடல் வலுவிழந்த 27 பேருக்கு அரசாங்கத்தின் சமூக சேவை திணைக்களத்தின் ஊடாக மாதாந்தம் தலா 3 ஆயிரம் ரூபா நிதி உதவியும் இடுப்புக்கு கீழ் வலுவிழந்த 142 பேருக்கு தலா ஆயிரத்து 500 ரூபாவும் வழங்கப்பட்டு வருகின்றது.

இப் பண உதவியானது இவர்களுக்கு போதுமானதாக இல்லை. இவ்வாறான நிலையில், முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆண்கள் 37 பேரும், பெண்கள் 13 பேருமாக மொத்தம் 50 பேர் உள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் ஆண்கள் 36 பேரும், பெண்கள் 10 பேருமாக மொத்தம் 46 பேர் உள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் ஆண்கள் 26 பேரும், பெண்கள் 11 பேருமாக மொத்தம் 37 பேர் உள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் ஆண்கள் 22 பேரும், பெண்கள் 02 பேருமாக மொத்தம் 24 பேர் உள்ளனர்.

மன்னார் மாவட்டத்தில் ஆண்கள் 08 பேரும், பெண்கள் 04 பேரும் பல்வேறு பொருளாதார ரீதியான பாதிப்புக்களையும் தாங்கியவாறு வாழ்ந்து வருகின்றனர்.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் உள்ள அம்பாறையில் ஆண்கள் 13 பேரும், பெண்கள் ஒருவருமாக மொத்தம் 14 பேரும், திருகோணமலையில் ஆண்கள் 05 பேரும், பெண்கள் 02 பேருமாக மொத்தம் 07 பேரும் வாழ்ந்து வருகின்றனர். (2-15)

## கைப்பற்றப்பட்ட மாட்டிறைச்சி திருநகர் சுடலையில் புதைக்கப்பட்டது



யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு திருடப்பட்டு வெட்டப்பட்டு இறைச்சியாக கொண்டு செல்லப்பட்ட நிலையில் முழங்காவிலில் கடந்த 2 ஆம் திகதி பிற்பகல் 5 மணியளவில் கூலர் ரக வாகனத்தில் பிடிக்கப்பட்ட 2 ஆயிரத்து 500 கிலோவுக்கு மேற்பட்ட இறைச்சி கிளிநொச்சி மாவட்ட நீதவான் நீதிமன்றின் உத்தரவுக்கு அமைய கிளிநொச்சி திருநகர் சுடலையில் கரைச்சிப் பிரதேச சபையினரின் கனரக வாகனத்தின் மூலம் பணியாளர்களின் உதவியுடன் பாரியளவில் குழி தோண்டி புதைத்துள்ளனர்.

அத்துடன் மாடுகள் கொள்வனவு செய்தமைக்கோ, இறைச்சிக்காக வெட்டப்படுவதற்கோ, அல்லது கொண்டு செல்லப் படுவதற்கோ என எவ்விதமான சட்டரீதியான ஆவணங்களும் இவர்களிடம் காணப் படவில்லை எனத் தெரிவிக்கப் படுகிறது.

இதேவேளை கைதான சந்தேக நபர்கள் இருவருக்கும் இரண்டு இலட்சம் ரூபா தலா இரண்டு ஆள்பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். (2-312)

## ஆரம்பப் பாடசாலை புதிய கட்டடம் திறந்து வைப்பு



(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு துணுக்காய் கல்வி வலயத்தின் பாண்டியன்குளம் ஆரம்பப் பாடசாலையின் புதிய கட்டடத்தை வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் அண்மையில் திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் வலயக் கல்வி பணிப்பாளர் பொ.ரவிச்சந்திரன், கோட்டக்கல்வி பணிப்பாளர், மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் உள்ளிட்ட பிரமுகர்கள் வகுப்பறைகளைத் திறந்து வைத்தனர்.

தொடர்ந்து நடைபெற்ற இந்நிகழ்வில் பாடசாலையின் வளர்ச்சி பற்றி அனைவரும் கருத்துக்கள் தெரிவித்தனர். அத்தோடு பாடசாலை முதல்வர் பௌதீக வளக் குறைகள் பற்றி தெரிவித்ததை ஏற்றுக்கொண்ட வடக்கு மாகாணசபை உறுப்பினர் அடுத்தாண்டுக்கான தனது ஒதுக்கீட்டில் இரண்டு இலட்சம் ரூபா தருவதாக உறுதியளித்துள்ளார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமுறிகண்டி, மாங்குளம் பிரதேசங்களில்

# வர்த்தக நிலையங்கள், சிற்றுண்டிச்சாலைகள் திடீர் பரிசோதனை நடவடிக்கையில் சிக்கின

## எதிர்வரும் 7ஆம் திகதி வழக்குத்தாக்கல்

(மல்லாவி )

ஒட்டுசுட்டான் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பிரிவிற்குட்பட்ட மாங்குளம் பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவின் கீழுள்ள திருமுறிகண்டி, மாங்குளம் ஆகிய இடங்களில் உள்ள வர்த்தக நிலையங்கள், உணவு விற்பனை வண்டிகள், உணவு விற்பனைச் சாலைகள் மற்றும் பாடசாலைகளில் உள்ள சிற்றுண்டிச் சாலைகள் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் ஒட்டுசுட்டான் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் வைத்தியர் தலைமையிலான அணியினர் திடீர் பரிசோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

ஒட்டுசுட்டான் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை பிரிவின் வைத்தியர் நிலக்சன் தலைமையிலான மாங்குளம் பொலிஸார், மாங்குளம் பொது சுகாதார பரிசோதகர் விஜயஜங்கரன் உட்பட ஒட்டுசுட்டான் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிற்குட்பட்ட பொதுச் சுகாதார பரிசோதகர்கள் ஆகியோர் அடங்கிய அணியினர் இந்த திடீர் பரிசோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதன்போது திருமுறிகண்டி பிள்ளையார் ஆலயத்தின் புனித பிரதேசத்தில் உள்ள வர்த்தக நிலையங்கள், உணவு விற்பனை வண்டிகள், உணவு விற்பனைச்சாலைகள் என்பனவற்றின் மீது திடீர் பரிசோதனை மேற்கொண்ட போது, உணவு விற்பனைச் சாலைகள் மற்றும் ஏனைய வர்த்தக நிலையங்களுமாக மொத்தம் 10 விற்பனை நிலையங்களில் காலாவதியான பொருட்கள், சுகாதார நடைமுறைகளை கடைப்பிடிக்காமல் உணவுப் பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்தமை, பணியாளர்கள் தனிநபர் சுகாதார நடைமுறைகளைக் கடைப் பிடிக்காமல் வேலைகளில் ஈடுபட்டமை போன்ற பல்வேறு குற்றங்களுக்காக மாட்டிக் கொண்டனர்.

இதேவேளை ஏ-9 வீதியில் உள்ள மாங்குளம் நகரப் பகுதி வர்த்தக நிலையங்கள், உணவு விற்பனை வண்டிகள், உணவு விற்பனைச் சாலைகள் உட்பட மாங்குளம் பொதுச் சந்தை, பாடசாலைகளின் சிற்றுண்டிச் சாலைகள் என்பனவும் திடீர் பரிசோதனை நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.



இதன் போது சில வர்த்தக நிலையங்களில் சுகாதார நடவடிக்கைகள் தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

நடமாடும் ஐஸ்கிறீம் வண்டி உட்பட உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் வண்டிகள் 2ஐ தடுத்து நிறுத்தி சோதனையிட்ட போது, சுகாதார விதி முறைகளை பின்பற்றாது விற்பனை நடவடிக்கையில் ஈடுபட்டதுடன் உணவுப் பொருட்களுடன் உணவல்லாத வாசனைத் திரவியங்களையும் கொண்டு சென்று விற்பனை செய்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இவ்வாறு தவறிழைத்துள்ள 10 விற்பனை நிலையங்களின் உரிமையாளர்களுக்கும் மற்றும் நடமாடும் உணவு விற்பனை வண்டிகளின் உரிமையாளர்கள் 2 பேருக்கும் எதிராக முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தின் கீழுள்ள மல்லாவி ஆரம்ப நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் எதிர்வரும் புதன்கிழமை மேற்கொள்ளப்படவுள்ளதாக மாங்குளம் பொது சுகாதார பரிசோதகர் விஜயஜங்கரன் தெரிவித்துள்ளார். (2-15)

வன்னி வலம்

## விசேட பொதுக்கூட்டம்

(சிவநகர்)

கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானத்தின் விசேட பொதுக்கூட்டம் இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

கடந்த மாதம் 27 ஆம் திகதி கூட்டத்தின் தீர்மானத்திற்கு அமைவாக நடைபெறவுள்ள இக்கூட்டத்திற்கு ஆயுட்கால உறுப்பினர்கள், திருவிழா உபயகாரர்கள் மற்றும் உறுப்பினர்கள், அடியவர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு ஆலய பரிபாலன சபை செயலாளர் அறியத்தந்துள்ளார். (2-254)

### 96 ஆவது நாள்

## கேப்பாப்பிலவு நில மீட்பு போராட்டம் தொடர்கிறது



(பனிக்கன்குளம்)

நாட்டில் இறுதிக்கட்ட யுத்தம் நிறைவடைந்த நிலையில் 2012 ஆம் ஆண்டு மாதிரிக் கிராமங்களில் மீள் குடியேற்றப்பட்ட மக்கள் சொந்த நிலத்திற்குச் செல்வதற்கான போராட்டத்தை கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி ஆரம்பித்திருந்தனர்.

கேப்பாப்பிலவு நில மீட்பு போராட்டம் ஆரம்பிக்கப்பட்டு நேற்றுடன் 96 நாட்களை எட்டியுள்ளது.

இந்நிலையில் நேற்றைய தினம் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா, வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் ஆகியோர் மக்களை சந்தித்து கலந்துரையாடினர். (2-281)

## முல்லை. மாவட்ட அரச ஓய்வூதியர் சங்க கட்டடத்துக்கு அடிக்கல் நாட்டல்





முல்லைத்தீவு மாவட்டத்தின் அரச ஓய்வூதியர் சங்க கட்டடத்துக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முற்பகல் 10.24 மணியளவில் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்துக்கு அருகில் நடைபெற்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் அரச ஓய்வூதியர் சங்க செயலாளர் அ.செல்வரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா கலந்துகொண்டு அடிக்கல்லை நாட்டி வைத்தார்.

இந்நிகழ்வில் கனடா வன்னித் தமிழ் சமூக கலாசார அமையம், பிரம்டன் தமிழ் மூத்தோர் கழக உறுப்பினர் செல்லையா செல்வக்குமாரன் மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தின் அரச ஓய்வூதியர் சங்க உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

முல்லைத்தீவிலுள்ள இந்த அமைப்பானது பல்வேறுபட்ட திட்டங்களோடு தமக்கான கட்டடத்தை அமைக்க ஆரம்பித்துள்ளதாகவும் இதற்காக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜாவின் நிதி ஒதுக்கீட்டில் 3 இலட்சம் நிதி ரூபா தமக்கு கிடைக்கப்பெற்றுள்ளது. அதற்கான வேலையை நேற்று ஆரம்பித்துள்ளதாகவும் இதனைவிட வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கே.கே.காதர் மஸ்தானின் நிதி ஒதுக்கீட்டில் ஒரு இலட்சம் ரூபா கிடைக்கப் பெற்றுள்ளது எனவும் இதனைவிட வடக்கு மாகாண சபை பிரதி அவை தலைவர் வ.கமலேஸ்வரனின் நிதி ஒதுக்கீட்டில் 50 ஆயிரம் ரூபாவும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் க.சிவநேசனின் நிதி ஒதுக்கீட்டில் ஒரு இலட்சம் ரூபாவும் வடக்கு மாகாண சபை உறுப்பினர் ஆ.புவனேஸ்வரனின் நிதி ஒதுக்கீட்டில் 50 ஆயிரம் ரூபாவும் கிடைக்கப்பெற்றுள்ளது. இன்னும் பலரது உதவியோடு இந்த கட்டடத்தை அமைத்து தமது சேவைகளை தொடரவுள்ளதாக தெரிவித்தனர். (2-281)

## வவு. புதிய மத்திய பேருந்து நிலையத்தின் சேவைகள் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன



வவுனியாவில் 5 மாதங்களாக பூட்டப்பட்டிருந்த புதிய மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து தூர இடங்களுக்கான பேருந்து சேவைகள் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

195 மில்லியன் ரூபாய் செலவில்வவுனியாவில்அமைக்கப்பட்ட மத்திய பேருந்து நிலையத்தை போக்குவரத்து மற்றும் பயணிகள் விமான சேவைகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா இவ்வாண்டு ஜனவரி மாதம் 16 ஆம் திகதி திறந்து வைத்தார்.

13 பேருந்துகள் மாகாணங்களுக்கிடையிலான சேவையிலும் 21 பேருந்துகள் உள்ளூர் சேவையிலும் ஈடுபடத்தக்க வகையில் ஏ-9 வீதியில் மூன்று ஏக்கர் நிலப் பரப்பில நாளாந்தம் 100 பேருந்துகள் வந்து செல்லத்தக்க வகையில் நவீன முறையில் இப் பேருந்து நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

எனினும்தனியார் இலங்கை போக்குவரத்து சபை சாரதி மற்றும் நடத்துநர்களுக்கிடையில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள், மோதல்கள் காரணமாக புதிய மத்திய பேருந்து நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டது.

கடந்த 26 ஆம் திகதி வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் 9 ஆவது அமர்வு போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் தலைமையில் மன்னாரில் இடம்பெற்றது.

இதனையடுத்து இலங்கை போக்குவரத்து சபையின் தலைமைக்காரியாலயம் மற்றும் இ.போ.சபையின் வட பிராந்திய அலுவலகத்தின் வேண்டுகோளுக்கு இணங்க இ.போ.சபையின் பேருந்துகள் நேற்று முன்தினம் சனிக்கிழமை முதல் புதிய பேருந்து நிலையத்தில் சேவையை ஆரம்பித்துள்ளது.

நேற்று முன்தினத்தில் இருந்து வவுனியா நகர மத்தியில் அமைந்துள்ள இ.போ. சபையின் பேருந்து நிலையத்தில் தரித்து நின்று பயணிகளை ஏற்றிக்கொண்டு புதிய மத்திய பேருந்து நிலையத்திற்கு வந்து செல்கின்றன.

எனினும் தனியார் பேருந்துகள் புதிய மத்திய பேருந்து நிலையத்தில் சேவையை வழுங்கவில்லை என இ.போ. ச. ஊழியர்களினால் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

இவ்விடயம் தொடர்பாக வவுனியா தனியார் போக்குவரத்துச் சங்கத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் ராஜேஸ்வரனிடம் தொலைபேசியூடாக தொடர்பு கொண்டு வினவிய போது,

இ.போ.சபையின் அனைத்து பேருந்துகளும் புதிய மத்திய பேருந்து நிலையத்திற்கு செல்வதில்லை எனவும் இவ்விடயம் தொடர்பாக தற்போது வன்னி பிராந்திய பொலிஸ்மா அதிபர் காரியாலயத்தில் கூட்டம் இடம் பெறுவதாகவும் தெரிவித்தார்.

எனினும் புதிய மத்திய பேருந்து நிலையத்தில் பயணிகள் எவரும் இல்லாமல் தற்போது கடமைக்காக புதிய பேருந்துநிலையத்திற்கு இ.போ. சபையின் பேருந்துகள் சென்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (2-250)

## வற்றாப்பளை அம்மன் ஆலய மேற்கு வாசல் கோபுரத்திற்கு அடிக்கல்

### முல்லை. பெருங்கடலில் இன்று தீர்த்தமெடுக்கப்படும்

வரலாற்று சிறப்புமிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய மேற்கு வாசல் கோபுரத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்று முற்பகல் 10.24 மணிக்கு நடைபெற்றது. வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய புனர் நிர்மாணப் பணிகள் நடைபெற்று வரும் நிலையில் ஆலய மேற்கு வாசல் கோபுரத்துக்கான அடிக்கல் நாட்டப்பட்டது.



வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய உற்சவம் எதிர்வரும் 12 ஆம் திகதி இடம்பெறவுள்ளதோடு உப்பு நீரில் விளக்கெரியும் அதிசயம் நிகழும் இந்த ஆலய தீர்த்தமெடுக்கும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை முல்லைத்தீவு பெருங் கடலில் சிறப்புற இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆவரங்கால் மேற்கு மத்திய முன்பள்ளியின் கண்காட்சி விழா அண்மையில் நடைபெற்றது. இதில் பிரதம விருந்தினராக ஆசிரிய கல்வியியலாளர் ஆசிரியர் வளநிலையத்தை சேர்ந்த ஞா.இரத்தினசிங்கம் கலந்து கொண்டார்.

# கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம்

வட்டுக்கோட்டை கிழக்கு சித்தன்கேணி அந்திரான் ஜெனசத்தி தோற்பொருட் உற்பத்தி விற்பனை கூட்டறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு வட்டுக்கோட்டை கிழக்கு மாதர் சங்க வளாகத்தில் நடைபெறும் என சங்கத்தின் தலைவர் எஸ். சாம்பசிவம் அறிவித்துள்ளார். (இ-5-102)




# கடும் வறட்சியினால் வற்றும் நீர்நிலைகள்

## குடிநீருக்காக அலையும் மக்கள்

(மந்துவில்)

தென்மராட்சி மந்துவில் பகுதியில் கடும் வறட்சி காரணமாக தரைக்கீழ் நீர்மட்டம் வெகுவாக குறைந்து வருகிறது.

நீண்டகாலம் மழை வீழ்ச்சி கிடைக்காமை, வறட்சி போன்றவற்றால் குளங்கள், கிணறுகள், வாய்க்கால்கள் போன்றவற்றின் நீர்மட்டம் குறைந்தும் சில குளங்கள் வற்றியும் காணப்படுகின்றன.

இதனால் குடிநீருக்காக தாம் நீண்ட தூரம் அலைய வேண்டியுள்ளதாகவும் வறட்சியினால் தாம் அதிகளவில் பாதிப்படைந்துள்ளதாகவும் அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (இ-5-101)

# சிறுதானிய பயிர்ச்செய்கை வறட்சியால் கைவிடப்பட்டது

தென்மராட்சி மந்துவில் பகுதியில் கடும் வறட்சி காரணமாக சிறுதானியப் பயிர்ச் செய்கை வீழ்ச்சியடைந் துள்ளது. பெரும் போக நெற் செய்கையின் பின்பு சாவகச்சேரி கமநலசேவைகள் திணைக்களம் ஊடாகவும் விவசாய சம்மேளனத்தினின் அறிவுறுத்தற்கமைவாகவும் விவசாயிகள் சிறுதானிய பயிர்ச் செய்கையில் ஈடுபட்டனர்.

சிறுதானியப்பயிர்ச் செய்கையை மேற்கொள்வோர் ஏக்கருக்கு ரூபா 5000 பெற்றுத்தரப்படும் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் நெல் அறுவடையின் பின்பு தொடர்ந்து நிலவிய கடும் வறட்சி காரணமாக பயிர்களிலிருந்து உரிய விளைச்சலை பெற்றுக் கொள்ள முடியவில்லை. இது தவிர கட்டாக்காலி கால்நடைகள் எஞ்சிய பயிர்களையும் அழித்தமையால் சிறுதானிய பயிர்ச்செய்கை கைவிடப்பட்டது.

கடும் வறட்சி காரணமாக பெரும்போக நெற் செய்கையும் சிறுதானிய பயிர்ச் செய்கையும் பாதிப்படைந்துள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.(இ-5-101)

# எமக்கு எப்போது நியமனம் கிடைக்கும்?

# வடக்கு சுகாதாரத்தொண்டர்கள் மீண்டும் தொடர் போராட்டத்தில்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்கள் நிரந்தர நியமனத்தை வலியுறுத்தி கடந்த ஒரு மாத காலமாக மேற்கொண்டு வந்த போராட்டம் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் வழங்கிய வாக்குறுதிகளை எழுத்து மூலமாக உறுதிப்படுத்தி வழங்காத நிலையில் தொடர்ச்சியாக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

கடந்த 23 வருடங்களில் இருந்து கடந்த 3ஆண்டுகள் வரை சேவைக்காலத்தை உடைய சுகாதாரத் தொண்டர்கள் 820 பேருக்கும் இதுவரை நிரந்தர நியமனமானது வழங்கப்பட்டிருக்கவில்லை. இவர்கள் அனைவரும் பொதுச் சுகாதார திணைக்களத்தின் கீழான வைத்தியசாலைகள், பொதுச் சுகாதார நிலையங்கள் போன்றவற்றில் சுகாதாரத் தொண்டர்களாக சேவையாற்றி வருகின்றனர்.

இவ்வாறு சுகாதார தொண்டர்களாக பணியாற்றும் இவர்களுக்கு இதுவரையில் எந்தவிதமான கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன் நிரந்தர நியமனமும் வழங்கப்படவில்லை. இதனையடுத்து வடக்கில் உள்ள அனைத்து சுகாதாரத் தொண்டர்களும் தமது நிரந்தர நியமனத்தை வலியுறுத்தியும்.வயதெல்லை பாராது சேவைக்காலத்தின் அடிப்படையில் உள்வாங்க வலியுறுத்தியும் கடந்த ஒரு மாத காலமாக தொடர்ச்சியான கவனயீர்ப்புப் போராட்டங்களை முன்னெடுத்து வந்தனர்.

இப் போராட்டத்தின் ஒரு கட்டமாக கடந்த மாதம் 31 ஆம் திகதி வடமாகாண ஆளுநரை சந்தித்து இவர்கள் தமது பிரச்சினைகளை கலந்துரையாடியிருந்தனர்.

இக் கலந்துரையாடலின் போது ஆளுநர் சுகாதார தொண்டர்களுக்கு சில வாக்குறுதிகளை வழங்கியிருந்தார்.

தற்போது சுகாதாரத் தொண்டர்களை நிரந்தர நியமனம் வழங்கி உள்ளீர்ப்பதற்கு வெற்றிடங்கள் எதுவும் இல்லை. எனவே தற்போது பணியில் உள்ளவர்கள் ஓய்வு பெற்று செல்லும் போது அவர்களது இடத்திற்கு இச் சுகாதாரத் தொண்டர்களை சேவைக் காலத்தின் அடிப்படையில் உள்ளீர்க்கப்படுவார்கள்.

இவ்வாறு உள்ளீர்க்கப்படும் சுகாதாரத் தொண்டர்கள் எந்தவிதமான கல்வித் தகைமையும் இன்றி அவர்களது சேவைக் காலத்தின் அடிப்படையில் உள்ளீர்க்கப்படுவதுடன் இதில் எந்தவிதமான அரசியல் தலையீடுகளும் காணப்படாது எனவும் உறுதியளித்திருந்தார். அத்துடன் கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் சுகாதாரத் தொண்டர்களுக்கு உத்தியோகபூர்வமான கடிதமொன்றை ஆளுநர் வழங்குவதாக உறுதியளித்திருந்தார்.

ஆளுநரின் இவ் உறுதிமொழியையடுத்து போராட்டத்தை தற்காலிகமாக நிறுத்துவதாக சுகாதாரத் தொண்டர்கள் தெரிவித்திருந்தார்கள்.

எனினும் ஆளுநர் கொடுத்த வாக்குறுதியின் படி இதுவரையில் தமக்கு எந்த விதமான கடிதமும் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்த சுகாதாரத் தொண்டர்கள் தொடர்ச்சியான போராட்டத்தை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் மீண்டும் வட மாகாண ஆளுநரை சந்தித்து தமது பிரச்சினை தொடர்பாக கலந்துரையாடவுள்ளதாகவும் வடமாகாண சுகாதாரத் தொண்டர்கள் தெரிவித்துள்ளார்கள். (செ-4)

# விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ்.மந்துவில் றோ.க.த.க. பாடசாலை , யாழ். அல்லாரை அ.த.க. பாடசாலை ஆகிய பாடசாலைகளுக்கு அதிபர் வகை II இற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பிப்பதற்கான தகைமைகள் குறித்த பாடசாலைகளுக்கு விண்ணப்பிப்போர் இலங்கை அதிபர் சேவை தரம் II அல்லது அதற்கு மேற்பட்ட தரமுடையவர்களாக இருத்தல் வேண்டும்.

குறித்த தரத்தைச் சேர்ந்த அதிபர்கள் விண்ணப்பிக்காத சந்தர்ப்பத்தில் இலங்கை அதிபர் சேவை தரம் III ஐச் சேர்ந்தவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

நிபந்தனைகள்: அதிபர் நியமனத்தின் போது தென்மராட்சி வலயப் பாடசாலைகளில் நிரந்தரமாகச் சேவையாற்றும் இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களிற்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பதாரிகள் தற்போது கடமையாற்றும் பாடசாலையில் மூன்று வருடங்கள் தொடர்ச்சியான சேவையினை ஆற்றியிருத்தல் வேண்டும்

தங்கள் அதிபர் தரத்திற்குப் பொருத்தமற்ற பாடசாலைகளில் கடமையாற்றுபவர்களும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பதாரிகள் விண்ணப்ப முடிவுத் திகதியிலிருந்து ஆகக் குறைந்தது மூன்று வருடங்கள் கடமையாற்றக் கூடிய வயதெல்லையைக் கொண்டவராக இருத்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் தாங்கள் விரும்பிய ஒழுங்குமுறைக்கு ஏற்ப விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களை வலயக் கல்வி அலுவலக நிர்வாகக் கிளையில் பெற்று பூரணப்படுத்தி 19.06.2017 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்குமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் அறிவித்துள்ளார். (இ

# கசிப்பு உற்பத்தி ஒருவர் கைது



(கரணவாய்)

துன்னாலைப் பகுதியில் நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் மூலம் ஒரு தொகுதி கசிப்பு வடிக்கும் உபகரணமும் சோடாவும் மீட்கப்பட்டன.

துன்னாலை பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை நெல்லியடிப் பொலிஸார் சோதனை நடவடிக்கையினை மேற்கொண்ட போது [illegible] மீட்கப்பட்டது [illegible] ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (இ-60)

# பூனையால் மாணவர்களின் கல்விக்கு ஏற்பட்ட சிரமம்

(கரணவாய்)

துன்னாலை குடவத்தைப் பகுதியில் குடிசை ஒன்று தீயினால் எரிந்ததன் காரணமாக பாடசாலை செல்ல முடியாது நிற்கதிக்குள்ளாகி நின்ற மாணவர்கள் கல்வியினை மேற்கொள்வதற்கு ஏதுவாக சீருடைகளையும் ஏனைய உடைகளையும் பாடசாலை அதிபரூடாக வழங்கி வைத்தார். வடமாகாண சபை உறுப்பினரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ் மாவட்ட அமைப்பாளர் சிவக்கொழுந்து அகிலதாஸ் மேற்படி பகுதியிலுள்ள குடிசையில் இருந்து இரண்டு மாணவர்கள் குப்பி விளக்கில் படித்துக் கொண்டிருக்கும் போது பூனையொன்று அக் குப்பி விளக்கினைத் விழுத்தியதன் காரணமாக 31.05.2017 அன்று இரவு அக் குடிசை எரிந்து நாசமானது.

இதனால் கட்டைவேலி விநாயகர் வித்தியாலயத்தில் கல்வி கற்றுவரும் இரண்டு மாணவர்களின் சீருடைகள் தீயில் எரிந்தமை தொடர்பில் பாடசாலை அதிபரினால் வடமாகாணசபை உறுப்பினருக்கும் தெரியப்படுத்தப்பட்டதையடுத்து அவரினால் ஆறாயிரம் ரூபா பெறுமதியான மாணவர்களுக்கான உடைகளும் சீருடையும் கடந்த முதலாம் திகதி பாடசாலை அதிபரூடாக வழங்கப்பட்டன. (இ-60)

# தமிழ் பொலிஸார் பற்றாக்குறை

பத்து தமிழ் பொலிஸார் இருக்கவேண்டிய தலைமைப்பீட பொலிஸ் நிலையத்தில் தற்போது மூன்று தமிழ் பொலிஸாரே கடமையாற்றி வருவதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன. வடமராட்சிப் பகுதியில் உள்ள மூன்று பொலிஸ் நிலையங்களில் பருத்தித்துறை பொலிஸ் நிலையமே தலைமைப்பீட பொலிஸ் நிலையமாகவுள்ளது.

தலைமைப்பீட பொலிஸ் நிலையத்தில் பத்து தமிழ் பொலிஸாருக்கு குறையாமல் இருக்க வேண்டும். ஆனால் தற்போது மூன்று தமிழ் பொலிஸாரே கடமையாற்றி வருகின்றனர். விசாரணை, முறைப்பாட்டை பதிவு செய்தல், நீதிமன்றம் செல்லல், ரோந்து செல்லல் போன்ற அனைத்து செயற்பாடுகளுக்கும் மூன்று தமிழ் பொலிஸார் போதாமையாக இருக்கிறது.

எனவே தலைமைப்பீட பொலிஸ் நிலையமாக இருக்கும் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்திற்கு குறைந்தது பத்து தமிழ் பொலிஸார் வரையில் நியமிக்க வேண்டியது பொலிஸ் திணைக்களத்தின் பொறுப்பாகும். (இ-60)

# வீதி விளக்குகளை பொருத்த உரிய நடவடிக்கை எடுங்கள்

வலி. தென் மேற்கு பிரதேசத்துக்குட்பட்ட மானிப்பாய் சந்தியிலிருந்து சண்டிலிப்பாய் சீரணி அம்மன் கோயில் வரையிலான பிரதான வீதியில் மின் விளக்குகள் எதுவும் பொருத்தப்படவில்லை. இதனால் இரவுவேளைகளில் இவ் வீதியில் பயணிக்கும் போது பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக பிரதேச மக்கள் கவலை வெளியிட்டனர். இப் பிரதேசத்திற்குட்பட்ட சில வீதிகளில் மின்குமிழ்கள் பொருத்தப்பட்டும் அவை ஒளிர்வது இல்லை எனவும் தெரிவித்தனர். இதனால் இரவில் பணயத்தை மேற்கொள்வோர் விபத்துகளுக்குள்ளாகின்றனர். எனவே உரிய தரப்பினர் இதனைக் கருத்திற்கொண்டு விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப் பகுதி ம்க்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (இ-5-102)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லாட்சி அரசின் வாக்குறுதிகள் நிறைவேறாது

## நீதியமைச்சர் விஜயதாஸ கூறுகிறார்



நல்லாட்சி அரசாங்கம் ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் அளித்த வாக்குறுதிகளை தற்போது நிறைவேற்ற முடியாது என்று நீதி மற்றும் புத்தசாசன அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வார இதழ் ஒன்றுக்கு அமைச்சர் அளித்துள்ள நேர்காணலில் இதனைத் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இந்த நல்லாட்சி அரசாங்கமானது, 18ஆவது திருத்தச் சட்டத்தை ரத்துச் செய்து 19ஆவது திருத்தச் சட்டத்தை நிறைவேற்றியமை, ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டமை, சுயாதீன ஆணைக் குழுக்கள் என குறிப்பிட்ட சில வாக்குறுதிகளை மட்டுமே நிறைவேற்றியுள்ளது.

எவ்வாறாயினும் நல்லாட்சி அரசாங்கம் தேர்தல் காலத்தில் வழங்கிய அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்ற முடியாது. உலகின் எந்தவொரு நாட்டிலும், எந்தவொரு அரசாங்கமும் தான் வழங்கிய வாக்குறுதிகளை முழுமையாக நிறைவேற்றியதாக கூறமுடியாது" என அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# அரசு நிவாரணம் வழங்குவதற்காக மேலும் 16 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக அரசாங்கம் மேலும் 16 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது.

மாவட்ட செயலாளர்களின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் பிரதேச செயலாளர்கள் பாதிக்கப்பட்ட மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக இந்த நிதியைச் செலவிடுவார்கள் என்று அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

பிரதேச ரீதியில் தேவைகளை இனங்காணுதல், அனர்த்த நிவாரண சேவைகளை ஒருங்கிணைத்தல் போன்ற நடவடிக்கைகளில் அனர்த்த நிவாரண உத்தியோகத்தர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

நலன்புரி மத்திய நிலையங்களிலும் தமது வீடுகளிலும் உறவினர் இல்லங்களிலும் தங்கியிருக்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமைத்த உணவும் உலர் உணவும் வழங்கப்படுவதோடு உடற்தூய்மை பொருட்கள், பால்மா போன்ற தேவைகளை நிறைவேற்றுவதற்காக இந்த நிதி செலவிடப்பட்டிருப்பதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

தேவையான நிதியை மேலும் ஒதுக்குவதற்கு மத்திய நிலையம் நடவடிக்கை எடுத்துள்ளது. பாதிக்கப்பட்டவர்களுக்காக அரசாங்கம் வழங்கும் நிவாரணம் கிடைக்காவிட்டால் கிராம உத்தியோகத்தரின் பரிந்துரைக்கு அமைய சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளரின் அனுமதியுடன் மாவட்ட செயலாளருக்கு அறிவிக்க முடியும் என அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது. (இ-7)

# திருகோணமலையில் விபத்து; 18 வயது இளைஞன் மரணம்



திருகோணமலை - தம்பலகாமம் - கிண்ணியா பிரதான வீதி கோயிலடி சந்தியில் இடம்பெற்ற விபத்தில், மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

டிப்பர் வாகனமும் மோட்டார் சைக்கிளும் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

சம்பவத்தில் பலியானவர் தம்பலகாமம் - சிறாஜ்நகர் பகுதியைச் சேர்ந்த 18 வயதான ஒருவர் எனத் தெரியவந்துள்ளது.

குறித்த இளைஞன் கிண்ணியா பிரதேசத்திலிருந்து மோட்டார் சைக்கிளில் வேகமாக வந்த நிலையில் இந்த விபத்துக்கு முகம்கொடுத்துள்ளார்.

விபத்துடன் தொடர்புடைய டிப்பர் வாகனத்தின் சாரதியை கைது செய்துள்ளதாகவும், சடலம் கந்தளாய் தள வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# நுவரெலியாவில் இயல்பு நிலை பாதிப்பு

கடும் மழை மற்றும் காற்று காரணமாக நுவரெலியா பிரதேசத்தில் பல இடங்களில் சிறிய மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளதுடன் மரங்களும் முறிந்து வீழ்ந்துள்ளன. அத்துடன் காற்று காரணமாக ஒரு சில இடங்களில் வீட்டுக்கூரைகளும் சேதமடைந்துள்ளன. சில தினங்களாக தொடர்ந்து மழை பெய்து வருவதால் மரக்கறி நிலங்களில் மழைநீர் நிரம்பியுள்ளது.

இதனால் மரக்கறி உற்பத்தியிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. (இ-7)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: விசாகம்
கி.பா: 24
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BSc Eng/ பொறியியலாளர் லண்டன்
தொ.இ: B/6414

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: A/Lபிரான்ஸ் PR
தொ.இ: B/6415

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 48 செவ் 7 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: A/L/சொந்த தொழில்
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: B/6416

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: செவ் 7 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: BSc/ஆசிரியர்
தொ.இ: B/6417

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 41 செவ் 1 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BSc/ஆசிரியர்
தொ.இ: G/6457

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 30 செவ் 1 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: MBBS வைத்தியர்
தொ.இ: G/6459

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 15 செவ் 12 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: MBBS/வைத்தியர்
தொ.இ: G/6461

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: சதயம்
கி.பா: 20
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: AAT, ACCA/ தனியார் தொழில்
தொ.இ: G/6462

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



# வேலைவாய்ப்பு

SOND நிறுவனம் திட்ட ஒருங்கிணைப்பாளர், வெளிக்களப் பணியாளர் (யாழ்ப்பாணம், மட்டக்களப்பு), தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கான பதவி வெற்றிடங்களுக்கு பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருகிறது. (Visit www.sond.lk for vacancy Notice)

முடிவுத்திகதி :- 21.06.2017 (9128)

தொடர்புகள்:- senthu@eureka.lk
077 224 2394





# பாராட்டி வாழ்த்துகின்றோம்

திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன்
(மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர்)
(வடக்கு மாகாணம்)

சேவையினால் உயர்ந்தாய் சிறப்புக்கள்
பலபெற்றாய் சாந்தமே உருவமாகி சலிக்காது
பணியாற்றுவாய் மேலதிக மாகாணக்
கல்விப் பணிப்பாளராய்
மேன்மை மிகு பதவிபெற்றாய்
மென்மேலும் உயர்வடைவாய்

(9135)

நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம்.

வாழ்த்தி மகிழ்வோர் :
திருமதி.க.சிவகுமார், செல்வி.தி.தயாநிதி,
திருமதி.க.அமலன், திரு.நி.தயானந்தன், திரு.இ.அரசகுலசூரியர்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# லண்டன் நகரில் தீவிரவாத தாக்குதலுக்கு 6 பேர் பலி!




(லண்டன்)

பிரிட்டன் நாட்டின் தலைநகரான லண்டனில் நேற்று நடைபெற்ற இரண்டு தீவிரவாத தாக்குதல் சம்பவங்களில் 6 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

லண்டனில் உள்ள உலகப் புகழ்பெற்ற லண்டன் பிரிட்ஜில் சென்று கொண்டிருந்த வான் ஒன்று கட்டுப்பாட்டையிழந்து பாலத்தில் நடந்து சென்றுகொண்டிருந்தவர்கள் மீது மோதியது. இதனையடுத்து மூன்று பேர் லண்டன் பாலத்திலிருந்து அருகிலுள்ள பரோ மார்க்கெட் என்ற பகுதிக்குள் க்த்திகளுடன் ஓடினர். கண்ணில் தென்பட்டவர்கள் மீது சரமாரியாக தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் பலர்காயம் அடைந்ததாக முதல் கட்ட தகவல்கள் வெளியாகின. காயம் அடைந்தவர் களை மீட்டு மருத்துவ ம னையில் சேர்க்கும் பணியையும், தாக்குதல்தாரிகளை அடக்கும் பணியையும்லண்டன்பொலிஸ் துரித மாக செய்தது.

தாக்குதல்தாரிகள் மூன்று பேரையும் லண்டன் பொலிஸ் சுட்டுக் கொன்றது. தாக்குதல் பயங்கரவாத தாக்குதலாகவே கருதப்படுவதாக லண்டன் பொலிஸ் தெரிவித்துள்ளது.

லண்டன் பிரிட்ஜ் பகுதியில் தாக்குதல்தாரிகளால் பொதுமக்களில் 6 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என பொலிஸ் தெரிவித்துள்ளது.

தாக்குதல் குறித்து தகவல் கிடைத்ததும் பொலிஸ் துரிதமாக, தைரியமாக செயற்பட்டது. பொலிஸ் நடத்திய தாக்குதல்தாரிகள் கொல்லப்பட்டனர் என பிரிட்டிஷ் பயங்கரவாத எதிர்ப்பு படை அதிகாரி மார்க் ரோவ்லே தெரிவித்தார். தாக்குதல் நடத்தியவர்கள் தங்களுடைய உடலில் வெடிகுண்டுகளை கட்டியவாறு தோற்றத்தை ஏற்படுத்தியுள்ளனர். ஆனால் அவை போலியானவை என பின்னர் தெரியவந்துள்ளது.

இதற்கிடையே தாக்குதல் நடத்தப்பட்ட பகுதியில் இருந்து 30-க்கும் மேற்பட்டோரை மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தாக்குதலை அடுத்து பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

பிரிட்டனின் மான் செஸ்டர் நகரில் நடந்த தற்கொலை தாக்குதல் ஒன்றில் 22 பேர் கொல்லப்பட்ட சம்பவம் நடந்து இரண்டு வாரத்துக்குள்ளாக இந்த சம்பவம் நடந்துள்ளது. (இ)

## ஜெ – சசி நிறுவனங்களின் பின்னல் வலை



சென்னை தியாகராய நகரில் இருபுறமும் மரங்கள் வளர்ந்த, கவனத்தை ஈர்க்கும் எந்த அம்சமும் இல்லாத ஒரு வீதியின் அடுக்ககத்தில் 'கியான்' (GYAN) என்ற பெயர்ப்பலகை பளிச் சென்று கண்ணில் படுகிறது. ஓரிரண்டு காரணங்களைத் தவிர, அது ஒன்றும் கவனிக்கத்தக்க அடுக்ககம் அல்ல. கதவு எண் 12, கதவு எண் 16 என்ற இரு வீடுகள் மட்டும் சில தனியார் நிறுவனங்களின் பதிவுபெற்ற அலுவலகங்களாகத் திகழ்கின்றன. அந்நிறுவனங்கள், அ.இ.அ.தி.மு.க (அம்மா) கட்சியின் பொதுச் செயலாளர் வி.கே. சசிகலா, அவருடைய அண்ணி இளவரசி ஆகியோருடன் தொடர்புள்ளவை. ஒன்றுக்கொன்று வலைப்பின்னல் தொடர்புள்ள முகமூடி நிறுவனங்களுக்கு இவைதான் முகவரி. அதிகம் கேள்விப்பட்டிராத பெயர்களைக் கொண்டவை சில நிறுவனங்கள்.ஸ்ரீஜெயா பைனான்ஸ் அண்ட் இன்வெஸ்ட்மெண்ட்ஸ், பான்சி ஸ்டீல்ஸ், ஆவிரி பிராப்பர்டீஸ், கியூரியோ ஆட்டோ மார்க், காட்டேஜ் ஃபீல்ட் ரிசார்ட்ஸ் அவற்றில் சில. அனைவருக்கும் பரீட்சயமான நிறுவனம் ஜாஸ் சினிமாஸ் (பழைய பெயர் ஹாட் வீல்ஸ் இன்ஜினீயரிங்). 2015இல் சென்னையில் ஒரு மல்டிபிளக்ஸ் நிறுவனத்தை வாங்கியபோது அனைவரின் புருவங்களையும் உயர வைத்தது.

(தொடரும்)

# இந்தியாவில் இன்னொரு சுதந்திர போராட்டத்தை ஏற்படுத்தி விடாதீர்கள்

## பா.ஜ.கவுக்கு ஸ்டாலின் எச்சரிக்கை

(சென்னை)

இந்தியாவில் இன்னொரு சுதந்திர போராட்டத்தை ஏற்படுத்தி விடாதீர்கள் என மத்தியில் ஆளும் பா.ஜ.கவுக்கு தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

தி.மு.க. தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான கருணாநிதியின் சட்டமன்ற வைரவிழா மற்றும் பிறந்த நாள் விழா பொதுக்கூட்டம் சென்னை ராயப்பேட்டை வை.எம்.சி.ஏ. மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இவ்விழாவில் தி.மு.க. செயல் தலைவர் மு.க. ஸ்டாலின் நிறைவுரையாற்றினார். இதன்போது,

குளித்தலை தொகுதியில் பெற்ற வெற்றியைத்தொடர்ந்து 12 சட்டமன்றத் தேர்தல்களிலும் தொடர்ந்து வெற்றி பெற்றவர் தலைவர் கலைஞர். 48 ஆண்டு காலம் இந்த இயக்கத்தை வழிநடத்திக் கொண்டிருக்கிறார். தமிழகத்தின் முதலமைச்சராக 19 ஆண்டு காலம் பணியாற்றி சாதனை படைத்திருக்கிறார். திராவிட இயக்கம் நூற்றாண்டு கண்டிருக்கிறது. அதில், 80 வருடம் பொது வாழ்வில் ஈடுபட்டுள்ளவர் கலைஞர். அப்படிப்பட்ட தலைவருக்கு எடுக்கப்பட்டுள்ள இந்த விழாவிற்கு வந்திருக்கும் அனைத்து தலைவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த விழாவை மையப்படுத்தி, ஊடகங்களில் கூட்டணிக்கு அச்சாரம் என்றெல்லாம் சொன்னார்கள். அதைப் பற்றி பேச விரும்பவில்லை.

இந்த விழா நமக்கெல்லாம் பூரிப்புதான். ஆனால் ஒரு ஏக்கத்துடனே இருக்கிறோம். கலைஞர் இங்கு வந்து அமரவில்லையே என்ற ஏக்கம்தான். தலைவர் இங்கு ஏன் வரவில்லை என்பது அனைவருக்கும் தெரியும். உடல்நிலை தேறி வந்தது. ஆனால், உடல்நிலை தேறி வரும் நிலையில், தொற்று ஏற்படும் என்பதால் கூட்டத்திற்கு அழைத்துச் செல்லக்கூடாது என்று மருத்துவர்கள் அனைவரும் தெரிவித்து விட்டார்கள். அதனால்தான் அழைத்து வரவில்லை.'

இந்திய அரசியலுடன் ஒன்றிணைந்த இயக்கம் தி.மு.க. மாநில உரிமைகளுக்காக தொடர்ந்து போராடும் இயக்கம் தி.மு.க. சமூக நீதி, விவசாயிகள் பிரச்சினை, தொழிலாளர்கள் உரிமை, பெண்ணுரிமைக்காக தொடர்ந்து போராடும் இயக்கம் தி.மு.க. தேசிய ஒருமைப்பாட்டிலும் நாட்டின் பன்முகத் தன்மை மீதும் நம்பிக்கை கொண்டிருக்கும் இயக்கம் தி.மு.க. அப்படிப்பட்ட இயக்கத்தின் தலைவரின் பிறந்தநாள் விழா மற்றும் சட்டமன்றவைரவிழாவை இங்கு கொண்டாடுகிறோம். தலைவர் கலைஞர், எண்ணற்ற பிரதமரை உருவாக்கியவர். உருவாக காரணமாக இருந்தவர்.

தற்போது மத்தியில் இருக்கும் இந்த ஆட்சி மூன்றாண்டு காலம் நிறைவடைந்துள்ள நிலையில், இந்த ஆட்சியாளர்கள் மக்களைப் பற்றி சிந்திக்கவில்லை என காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல்காந்தி எடுத்துக் கூறினார். பெரும்பான்மை பலம்இருப்பதால்எதை வேண்டுமானாலும் செய்யலாமா?

மாநிலங்களின் முதலமைச்சர்களை ஒருங்கிணைத்து புதிய இந்தியாவை உருவாக்குவோம் என்று சொன்னார்கள். உருவாக்கப்பட்டதா? வேலைவாய்ப்பு ஏற்படுத்தி தருவோம் என்ற உறுதிமொழிஎன்ன ஆயிற்று?

விவசாயிகள் வருமானத்தை ஒன்றரை மடங்கு உயர்த்தி தருவோம் என்றாரகள். செய்தார்களா?

மத்திய அரசு சொல்வதற்கு எல்லாம் ஆடக்கூடிய பொம்மை அல்ல தி.மு.க. எங்களுக்கு ஆட்சி பெரிதல்ல. ஆட்சி பெரிதென்று கருதியிருந்தால் நெருக்கடி நேரத்தில் ஆட்சியை காப்பாற்றியிருக்க முடியாதா? ஆட்சியைப் பற்றி கவலைப்படவில்லையே.

இலங்கைத் தமிழர்களுக்காக ஆட்சி பறிபோனதே, கலைஞர் கவலைப்பட் டாரா? கொள்கை மற்றும் லட்சியத்தில் இருந்து நாம் என்றைக்கும் பின்வாங்கியது கிடையாது.

பா.ஜ.க. ஆட்சிக்கு இன்று பெரும்பான்மை இருக்கலாம். அதன்மூலம் எதிர்க்கட்சிகளை அழிக்க காய் நகர்த்திக் கொண்டிருக்கலாம்.

இந்த சூழலில்தான் நாம் இந்த மேடையில் கூடியிருக்கிறோம். இதேபோல் மதச்சார்பற்ற ஆட்சியை உருவாக்க நாம் அனைவரும் ஒன்றிணைவோம்.

இப்போது மத்திய ஆட்சியாளர்கள் மாட்டிறைச்சிக்கு தடைவிதித்து குழப்பதை ஏற்படுத்துகிறார்கள். அவர்களிடம் கேட்கவிரும்பு கிறேன், இன்னொரு சுதந்திர போராட்டத்தை இந்தியாவில் ஏற்படுத்திவிடாதீர்கள். அதை சந்திக்க மக்கள் தயாராகிவிட்டார்கள். நாமும் தயாராக இருக்கிறோம்என அவர்மேலும் தெரிவித்தார். (இ-7)

# கருணாநிதியின் இடத்தை ஸ்டாலின் நிரப்ப வேண்டும்

## ராகுல் காந்தி பேச்சு





(சென்னை)

கருணாநிதியின் இடத்தை நிரப்புவதற்கான மிகப் பெரிய பணி மு.க.ஸ்டாலினுக்கு காத்திருக்கிறது என்று ராகுல் காந்தி தெரிவித்தார்.

தி.மு.க. தலைவரும், முன் னாள் முதலமைச்சருமான கருணாநிதியின் 94-வது பிறந்த நாள் விழா, சென்னை ராயப்பேட்டை வை.எம்.சி.ஏ. மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த விழாவில் இந்திய தேசிய காங்கிரஸ் துணைத்தலைவர் ராகுல் காந்தி கலந்து கொண்டு உரையாற்றுகையில்,

மு.க.ஸ்டாலின் உட்பட தி.மு.க.வினருடன் இந்த மேடையில் வீற்றிருப்பது எனக்கு கிடைத்திருக்கும் மிகப்பெரிய பெருமையாக கருதுகிறேன். இந்த வாய்ப்பை எனக்கு தந்ததற்கு நன்றி. கருணாநிதி மேலும் பல பிறந்த நாள்களை காண வேண்டும் என்று அவரை வாழ்த்துகிறேன். அவர் நல்ல உடல் நலத்தோடு இருக்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

பண மதிப்பு இழப்பால் இந்தியப் பொருளாதாரம் வீழ்ச்சி அடையவில்லை என்று சில நாட்களுக்கு முன்பு அருண் ஜெட்லி சொன்னார். உலகமே சொல்கிறது, இந்திய பொருளாதாரத்தில் நட்டம் ஏற்பட்டுள்ளதென்று. ஆனால் அதை அவர் மறுக்கிறார். பண மதிப்பு இழப்பு பற்றி அருண் ஜெட்லியிடம் கூட பிரதமர் கலந்து பேசவில்லை. இந்த வழியில்தான் இந்திய அரசு செயறபட்டுக் கொண்டிருக்கிறது.

தங்களின் ஒரே கருத்தின் அடிப்படையில் இந்தியா செல்ல வேண்டும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஒரு கலாசாரம்தான் இந்தியாவை ஆள வேண்டும் என்று நினைக்கிறார்கள். இதை நாங்கள் முற்றிலும் ஏற்கவில்லை. ஒவ்வொரு இந்தியனின் குரலும், கருத்தும் இந்தியாவின் நலனுக்காக கேட்கப்பட வேண்டும் என்பது எங்கள் கருத்து.

அவர்களின் கருத்தை மட்டுமே இந்தியாவில் செயற்படுத்த வேண்டும் என்ற அளவில் செயறபட நரேந்திர மோடியையோ அல்லது ஆர்.எஸ். எஸ். சையோ நாங்கள் அனுமதிக்க மாட்டோம். கோடிக்கணக்கான இந்திய மக்களின் குரலை அடக்கும் அவர்களின் செயற்பாட்டை நாங்கள் ஏற்கமாட்டோம். அவர்களின் தவறான எண்ணங்களை செயற்படுத்துவதைநாங்கள்வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க மாட்டோம்.

இந்த கூட்டத்தை நடத்தி அதில் பங்கேற்க என்னை அழைத்த ம்.க. ஸ்டாலினுக்கு நன்றி சொல்கிறேன். ஒரு மிகப்பெரிய பணி அவருக்கு கார்த்திருக்கிறது. ஒரு மாபெரும்மனிதனின் இடத்தை வருங்காலத்தில் அவர் நிரப்ப வேண்டியுள்ளது. அவர் சரியான திசையில் பயணிக்கிறார் என்பதை சொல்வதில் எனக்கு மகிழ்ச்சி. கருணாநிதி போலஇப்போதுஎப்படிபேசுகிறோமோ அதைப்போலவே ஒரு நாளில் மு.க.ஸ்டாலினைப் பற்றியும் பெருமையாக நாம் பேசுவோம் என்பது உறுதி என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சுற்றுச்சூழல் தினம்
# யூன் 5, 2017

## இயற்கையை நாம் அழித்தால்
## இயற்கையால் நாம் அழிவோம்!



**இயற்கையை இரசிப்போம்! இயற்கையைக் கற்போம்!**

## இயற்கையோடு இசைவுற வாழ்வோம்!

**இயற்கையைப் பாதுகாப்போம்!**

(அ-8721)

**விவசாய, கமநல சேவைகள், கால்நடை அபிவிருத்தி, கூட்டுறவு அபிவிருத்தி,**
**உணவு வழங்கல், நீர் வழங்கல், நீர்ப்பாசனம் மற்றும் சுற்றாடல் அமைச்சு**
**வடக்கு மாகாணம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழில்சார் வழிகாட்டியாக யாழ். பிராந்திய சமுத்திர பல்கலை.

இலங்கையின் கல்வி முறையின் கீழ் பாடசாலைக் கல்வியைத் தொடர்ந்து உயர் கல்வி கற்கத் தவறும் மாணவர்களின் வளமான எதிர்காலத்திற்கு வழிகாட்டவென திறந்த பல்கலைக்கழகங்கள், தொழில் நுட்பக் கல்லூரிகள், பல்கலைக் கல்லூரிகள், 3ஆம் நிலைக் கல்வி என பல்வேறு தெரிவுகள் இருக்கின்றன.

ஆனால் கல்வி பற்றிய நமது பாரம்பரிய சிந்தனை முறைமை காரணமாக பாடசாலைக் கல்வி மற்றும் பல்கலைக்கழக அனுமதி தவிர்ந்த வேறெந்த வாய்ப்புக்கள் குறித்தும் நாம் அக்கறை செலுத்துவதில்லை.

இந்த விடயத்தில் மாணவர்கள் மட்டுமன்றி பெற்றோருக்கும் பெரும் பொறுப்பு இருக்கின்றது.

பிள்ளைகளுடைய கல்வி எதிர்காலத்தை வெறுமனே தமது சுய கௌரவத்திற்காக அடையாளமாகப் பார்க்காது பிள்ளைகளின் எதிர்காலத்தை பொருத்தமான வகையில் ஆற்றுப்படுத்தல் இன்றியமையாததாகும். இதேபோல் ஆசிரியர்களும் விரிவுரையாளர்களும் கல்விச் சமூகத்தினரும் இடைநிலைக் கல்வி முதற்கொண்டே மாணவர்களுக்கு பரந்த கல்வி, தொழில்சார் கல்வி வாய்ப்புக்கள் குறித்து வழிகாட்டல்களை மேற்கொள்ள வேண்டியது காலத்தின் தேவையாகும்.

21 ஆம் நூற்றாண்டில் அறிவு சார் பொருளாதாரக் கட்டமைப் புக்குள் வாழும் இளைஞர் யுவதிகளுக்கு 3 ஆம் நிலைக் கல்வி மிகவும் அவசியமானது. கடந்த காலங்கள் போல ஆரம்ப இடைநிலை கல்வியுடன் கற்றலை நிறுத்தி தொழில் துறைகளுக்குச் செல்லும் நிலை இன்று இல்லை. தாய்நாட்டிலோ அன்றி வெளிநாடுகளிலோ உயர் கல்வி வாய்ப்பினை நாடவேண்டிய சூழ்நிலை காணப்படுவதனால் 3 ஆம் நிலைக் கல்வி முக்கியத்துவம் பெறுகிறது.

எமது நாட்டினைப் பொறுத்த மட்டில் க.பொ.த. (சா/த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் 50 சதவீதத்தினர் உயர்தரம் கற்பதற்கு தெரிவாகுவதில்லை. க.பொ.த.(உ/த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் 90 சதவீதத்தினர் தேசிய பல்கலைக்கழகங்களில் உயர் கல்வி கற்பதற்கு தெரிவாகுவதில்லை.

ஆக ஆரம்பக் கல்வி கற்பதற்கு கல்வியுலகில் பிரவேசிக்கும் மாணவர்கள் தொகையில்3-5 சதவீதத்தினர் மட்டுமே பல்கலைக்கழக அனுமதியின் கீழ் தெரிவாகின்றனர். எஞ்சிய மாணவர்களின் நிலை கேள்விக்குறியாக இருக்கின்றது.

கற்கை நெறியொன்றை பயிலவும் பட்டப்படிப்பிற்கான சந்தர்ப்பமாகவும் இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழக கற்கை நெறிகள் அமைந்துள்ளன.


இச் சமுத்திரப் பல்கலைக் கழகம் உயர்கல்வி தொழில், வாழ்க்கை தேர்ச்சிப் பண்புகளை மிருதுநிலை திறன்கள், பன்முக நுண்மதி, பொது அறிவுத் திறன்களாக பொருத்தமான வழிகாட்டலின் மூலம் தனியாள் திறனாற்றலை விருத்தி செய்து சிறந்த மானிட விருத்திக்கான ஊழிய வளத்தினை உள்நாடு, வெளி நாடுகளுக்கு ஏற்ற விதத்தில் உருவாக்குகின்றது.

இலங்கை போன்ற அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் எதிர் நோக்கும் பிரதான பிரச்சினைகளில் வேலையின்மை பிரதானமாகும். இதற்கான மூல காரணம் எமது கல்வி முறைக்கும் வேலை வாய்ப்பிற்கும் இடையே கணிசமான இடைவெளி காணப்படுகின்றது. நாட்டிற்கு அவசியமான ஊழியப்படையை பொருத்தமான கல்விச் சாலைகள் உயர்கல்வி நிறுவனங்களிலிருந்து பெற்றுக் கொள்ள முடியாமல் இருப்பது துரதிர்ஷ்டவசமான விடயமாகும். இதன் ஒரு வடிவமே இலங்கைப் பல்கலைக் கழகங்களில் பட்டதாரிகளாகப் பட்டம் பெற்று வெளியேறியோர் வேலைவாய்ப்பினை பெறுவதற்கு பெரும் கஷ்டத்தினை எதிர் நோக்குகின்றனர்.

எனவே மாணவர்களுக்கு எதிர்காலக் கல்வி தொடர்பாக முற்கூட்டியே பொருத்தமான தொழில்சார் வழிகாட்டல்களை வழங்குதல் வேண்டும். கல்விக்கூடாகவே தொழில் வாய்ப்பினை பெறுவதற்கு நாம் விரும்புவதனால் சிறந்த தொழில் ஒன்றினைப் பெற்றுத் தரக் கூடிய கல்வி முறைமையைத் தெரிவு செய்து அதனூடாக அரச தனியார் மற்றும் வெளிநாடுகளிலும் பொருத்தமான வேலை வாய்ப்புக்களை பெற முடியும்.

இச் சமுத்திரப் பல்கலைக் கழகம் ஏனைய உயர் கல்வி நிறுவனங்களுக்கு நிகராக பல்வேறு பீடங்களையும்துறைகளையும்தன்னகத்தே கொண்ட சர்வதேச தரத்திலான பல்கலைக்கழகமாக எதிர்காலத்தில் மிளிர வேண்டும். இதற்கு அரசாங்கமும் துறை சார்ந்த அதிகாரிகளும் அக்கறையுடன் செயற்பட்டு துறை சார்ந்த அபிவிருத்திக்கு உதவ வேண்டியது கட்டாயக் கடமையாகும்.

இப்பிராந்திய நிலையத்தில் காணப்படும் கற்கை நெறிகள் வருமாறு,



1. நீரியல் வளர்ப்பும் மற்றும் நீரியல்வள முகாமைத்துவ டிப்ளோமா (NVQ 3-5)

காலம்- ஒரு வருடம், தகைமை- க.பொ.த.(உ/த) உயிரியல் பிரிவு சித்தி

2.வெளியிணைப்பு இயந்திர பொறிவலர் (NVQ 3)

காலம் -6 மாதம், தகைமை- க.பொ.த. (சா/த) சித்தி

3.தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பவியலாளர் (NVQ 4)

காலம்- 1 வருடம், தகைமை - க.பொ.த. (சா/த) சித்தி

4. உயிர் பாதுகாப்பு பயிற்சி நெறி (NVQ 3-4)

காலம் -6 மாதம், தகைமை- க.பொ.த. (சா/த)

5. படகோட்டுநர் பயிற்சிநெறி கடலக மாலுமி (NVQ 4)

காலம் -9 மாதம், தகைமை - க.பொ.த. (சா/த)

6. மிதவை கப்பல் இயந்திர பொறிவலர் (NVQ 4)

காலம் -6, மாதம் தகைமை - க.பொ.த. (சா/த)

7.சுழியோடல் பயிற்சி நெறி (NVQ 4)

காலம்-6மாதம், தகைமை- க.பொ.த. (சா/த)

8. கடலக வரைபடம் வாசித்தலும் செய்மதி தொடர்பாடலும்

காலம்- 10 நாட்கள், தகைமை- க.பொ.த. (சா/த) ஆகிய கடற் பொறியியல் கடல்சார் தொழில்நுட்பம் சார்ந்த கற்கை நெறிகளை நடத்துகின்ற உயர் கல்வி நிறுவனமாக காணப்படுகின்றது.

இப்பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று வெளியேறும் மாணவர்கள் பின்வரும் அனுகூலங்களைப் பெற முடியும்.

1. சர்வதேச தரத்திலான அங்கீகரிக்கப்பட் சான்றிதழ் பெற முடியும்.

2. நிறுவன்ங்களில் பதவி உயர்வுகள் சம்பள ஏற்றங்களுக்கு உதவுகிறது.

3. வெளிநாடுகளில் பொருத்தமான வேலை வாய்ப்புக்களைப் பெறலாம்.

4. க.பொ.த. (சா/த) க.பொ.த. (உ/த) சித்திகளுடன் தொழில் வாய்ப்பு

எனவே பல்கலைக்கழக வாய்ப்பு கிடைக்காத மாணவர்களுக்கு உயர் கல்விக்கான மாற்று வழிமுறைகளாக அல்லது தொழில் சார் கல்வியினைக் கற்பதற்கான களமாக 3ஆம் நிலைக் கல்வி காணப்படுகிறது.

இக் கல்வி முறைமை எமது நாட்டிற்குப் பொருத்தமான துறை சார்ந்த பல்கலைக்கழகங்களை உருவாக்கி அதனூடாக மாணவர்களுக்கு தொழில்சார் வழிகாட்டல்களை மேற்கொண்டு வருகின்றது.

இதனடிப்படையில் இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டு மட்டக்குளி, நீர்கொழும்பு, களுத்துறை, காலி, தங்காலை, மட்டக்களப்பு திருகோணமலை யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் தனது பிராந்திய நிலையங்களை அமைத்து செயற்பட்டு வருகின்றது.

யாழ். பிராந்திய நிலையமானது யாழ்ப்பாணத்தில் நகரப்பகுதியிலிருந்து 2கி.மீற்றர் தூரத்திலுள்ள 2ம் குறுக்குத் தெரு, குருநகர் பகுதியில் 2012 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது திறன் அபிவிருத்தி மற்றும் வாழ்க்கை தொழில் பயிற்சி அமைச்சின் கீழ் இயங்கி வரும் 3னிம் நிலைக் கல்விசார் நிறுவனமாகும்.

3ஆம் நிலைத் தொழில் சார் கல்வி ஆணைக்குழு ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியளிக்கப்பட்ட திறன் அபிவிருத்தி செயற்றிட்டத்துடன் இணைந்து தொழில்நுட்ப, தொழில் சார் கல்வி மற்றும் பயிற்சி துறைகளுக்கான தேசிய சான்றளிப்பாகிய தேசிய தொழில் சார் தகை மைகள் National Vocational Qualifications (NVQ) எனும் சாதாரண சான்றிதழ், டிப்ளோமா, பட்டப்படிப்பு சார்ந்த பயிற்சிகளை வழங்கி வருகின்றது.

இந்த NVQ கற்கை நெறியின் படிநிலைகள் NVQ 1, NVQ 2, NVQ 3, NVQ 4 இவை சான்றிதழ்களாகவும் NVQ 5 டிப்ளோமாவும் NVQ 6 உயர் டிப்ளோமாவாகவும், NVQ பட்டப்படிப்பு சார்ந்ததாகவும் இருக்கின்றது. இப் பல்கலைக்கழகத்தின் கற்கை நெறிகளில் முதன்மையானதாக காணப்படும் NVQஆனது வாழ்க்கை தொழில் கல்வி மற்றும் பயிற்சி துறைகளில் அண்மைக்காலத்தில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்களை கருத்திற் கொண்டு உருவாக்கப்பட்டதாகும்.

கந்தப்பு பரமேஸ்வரன்
ஆசிரியர்
யா/சென்.ஜேம்ஸ் ம.வி.

## பல்கலை. மாணவர்கள் நிவாரண உதவி

தென்னிலங்கையில் இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு. யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீட மாணவர் ஒன்றியத்தின் (MCSU) ஏற்பாட்டில் ஒரு தொகை அத்தியாவசியப் பொருட்கள் நேற்று முன் தினம் வழங்கி வைக்கப் பட்டுள்ளன. இதில் இரத்தின



புரியைச் சேர்ந்த 76 குடும்பங்களுக்கான அத்தியாவசியப் பொருட்கள் இரத்தினபுரி கலவானை தமிழ் வித்தியாலயத்தில் வைத்து பல்கலை. மாணவர்களால் வழங்கப்பட்டன. (இ-9)

## நிவாரணப் பொருட்கள் கையளிப்பு



வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக தமிழ் பேசும் மக்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட நிவாரணப் பொருட்களை வடமாகாண ஆளுநர் தலைமையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளரும் அக்கட்சியின் வடமாகாண சபை உறுப்பினருமான சி.அகிலதாஸ்மற்றும்மாவட்ட அமைப்பாளர் பாலசுப்பிரமணியம் கோபாலகிருஷ்ணன் ஆகியோர் களுத்துறை மாவட்ட அரசாங்க அதிபரிடம் நேற்று முன்தினம் காலை கையளித்தனர். (இ-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரட்டைக் குடியுரிமை கொண்ட இலங்கைத் தூதுவர்கள் மாட்டினர்

(கொழும்பு)

வெளிநாடுகளில் பணியாற்றுகின்ற இலங்கைத் தூதுவர்கள் மூவர் இரட்டைக் குடியுரிமை கொண்டவர்கள் என்று வெளிவிவகார அமைச்சு கண்டறிந்துள்ளது. பங்களாதேஷ், பிரான்ஸ் மற்றும் அமெரிக்காவின் லொஸ்ஏஞ்சல்ஸ் நகரில் உள்ள இலங்கைத் தூதுவர்களே இரட்டைக் குடியுரிமையைக் கொண்டவர்கள் என்று கண்டறியப்பட்டுள்ளது.

பங்களாதேஹ்க்கான இலங்கைத் தூதுவராகப் பணியாற்றிவரும் வை.கே.குணசேகர, பிரித்தானியா மற்றும் இலங்கை குடியுரிமை கொண்டவர்.

பிரான்ஸ்க்கான இலங்கை தூது வராகப் பணியாற்றும் திலக் ரணவிராஜா அமெரிக்கக் குடியுரிமையைக் கொண்டுள்ளவர்.

லொஸ்ஏஞ்சல்ஸ் நகரில் கொன்சூல் ஜெனரலாகப் பணியாற்றும், சுவர்ணா குணரத்ன கனேடிய குடியுரிமையையும் கொண்டவர் என்று தெரியவந்துள்ளது.

இவர்களில், வை.கே. குணசேகர மாத்திரமே இலங்கை வெளிவிவகாரச் சேவையில் உள்ளவராவார்.

அதேவேளை, பிரான்ஸ்க்கான புதிய தூதுவராக பிரேரிக்கப்பட்டுள்ள, புத்தி அதாவுடவும் அமெரிக்கக் குடியுரிமை கொண்டுள்ளவராவார்.

அதேவேளை, இராஜதந்திரப் பதவிகளில் ஏனைய தரங்களில் உள்ள அதிகாரிகளிலும் பலர் இரட்டைக் குடியுரிமைப் பெற்றவர்கள் இருப்பது தெரிய வந்துள்ளது.

நியூயோர்க்கிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் மின்ஸ்டர் கவுன்சிலராக உள்ள சோனாலி சமரசிங்க அமெரிக்கக் குடியுரிமை கொண்டுள்ளவராவார்.

பிரித்தானிய குடியுரிமை கொண்ட மனோஜ் வர்ண பால லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்தில், கவுன்சிலராக பணியாற்றுகிறார்.

லண்டனில் உள்ள இலங்கை தூதரகத்தில், மூன்றாவது செயலராகப் பணியாற்றும், எஸ்.என்.குரே, பிரித்தானிய குடியுரிமையைக் கொண்டுள்ளவராவார்.

அவுஸ்திரேலிய குடியுரிமை பெற்றவரான பாலசூரிய, ஜோர்தானில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் இரண்டாவது செயலராக பணியாற்றுகிறார் என்பதும் கண்டறியப்பட்டுள்ளது. (இ-7)

# அமெரிக்க உயர் அதிகாரிகளுடன் பிரதமர் ரணில் அடுத்தவாரம் பேச்சு

(கொழும்பு)



தனிப்பட்ட பயணமாக அமெரிக்கா சென்றுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, மருத்துவ பரிசோதனைகளை முடித்துக் கொண்டுள்ள நிலையில், அடுத்தவாரம் அமெரிக்க அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்துவார் என்று கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடந்த 28ஆம் திகதி தனிப்பட்ட பயணமாக அமெரிக்கா சென்றார். மருத்துவ பரிசோதனைகளுக்காகவே அவர் இந்தப்பயணத்தை மேற்கொண்டுள்ளார் என்று அரசாங்கம் கூறியிருந்தது.

நியூயோர்க்கில் உள்ள பிரெஸ்பைரேரியன் பல்கலைக் கழக மருத்துவமனையில் அவருக்கான மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. மூன்று நாட்கள் மருத்துவமனையில் தங்கியிருந்த ரணில் விக்கிரமசிங்கவுக்கு முழுமையான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. இரண்டு இரவுகள், மூன்று பகல்கள் மருத்துவமனையில் வைத்து அவர் கண் காணிக்கப்பட்டார். அவரது உறக்க நிலையும், உணவுப் பழக்க வழக்கமும் கண்கா ணிக்கப்பட்டது.

இந்த மருத்துவ பரிசோதனைகள் முடிவடைந்துள்ள நிலையில் நியூயோர்க்கில் தங்கியுள்ள பிரதமர், ஐ.நா சமுத்திரங்கள் கருத்தரங்கில் பங்கேற்று உரையாற்றவுள்ளார்.

அத்துடன் ட்ரம்ப் அரசாங்கத்தின் செல்வாக்கு மிக்க பிரமுகர்களையும் அவர் சந்தித்துப் பேசத்திட்டமிட்டுள்ளார். (இ-7)

# காணாமற் போனோருக்கான அலுவலகம் தொடர்பில் 6ஆம் திகதி விவாதம்

(கொழும்பு)

காணாமற் போனோருக்கான அலுவலகம் அமைப்பதற்கான சட்டமூலம் திருத்தங்களுடன் நாளை 6 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் விவாதத்துக்கெடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

காணாமற் போனோருக்கான அலுவலகம் அமைப்பது தொடர்பான சட்டமூலம் கடந்த ஒகஸ்ட் மாதம் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

இருந்தும் இச்சட்ட மூலத்துக்கு ஜே.வி.பி முன்வைத்த திருத்தம் உள்ளடக்கப்படவில்லை. ஜே.வி.பியின் திருத்தம் உட்பட மேலும் சில திருத்தங்களுடன் இத்திருத்தச் சட்ட மூலம் பாராளுமன்றத்தில்நாளை 6 ஆம் திகதி விவாதிக்கப்படவுள்ளது. (இ-7)

# காப்புறுதி மூலம் மக்களுக்கு நிவாரணம் கிடைத்துள்ளது

## இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க தகவல்

(கொழும்பு)



அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ள காப்புறுதி திட்டத்தின் மூலம் அனர்த்தத்தில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு பெரிய நிவாரணம் கிடைத்துள்ளதாக இராஜாங்க அமைச்சர் சுஜீவ சேனசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் ஏற்பட்ட இவ்வாறான அனர்த்தத்தின் போது காப்புறுதி திட்டத்தின் மூலம் மக்களுக்கு நிவார ணம் வழங்கப்பட்டது எனவும் அவர் கூறியுள்ளார்.

சீத்தாவாக்கபுர பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள இத்தகைய இயற்கை அனர்த்தங்களை சரியான முறையில் முன்கூட்டியே அறிந்து கொள்வது சிரம மானது எனவும் சுஜீவசேன சிங்க தெரிவித்தார். (இ-7)

# இன்று ஒரு தகவல்

## ஆயிரம் திறமைகள் இருந்தும்

கெட்டிக்காரர்கள்; ஆனா என்ன புண்ணியம்? முன்னுக்கு வரவே இல்லையே! என்று சிலரைப்பற்றி மற்றவர்கள் விமர்சனம் செய்வதைப் பார்க்கிறோம். நம் மட்டத்திலேயே கூடத் திறமையிருந்தும் முன்னுக்கு வராத பலர் இருக்கிறார்கள்.

எவ்வளவோ திறமைகளிலிருந்தும் இவர்கள் ஏன் முன்னுக்கு வரவில்லை? இவர்களை முன்னேற விடாமல் தடுக்கும் குறுக்குச் சுவர்கள் என்னென்ன என்பதைப் பற்றிக் கொஞ்சம் சிந்தனை செய்தேன். சில உண்மைகள் புலப்பட ஆரம்பித்தன.

இவர்களுள் பலர் ஒரே நினைப்பு இல்லாத சபல புத்திரக்காரர்களாக இருக்கிறார்கள். திடீரென்று ஒரு வேலையிலிருந்து இன்னொரு வேலைக்கு மாறுவார்கள். செய்யும் தொழிலைத் திடீரென்று மாற்றுவார்கள். அதாவது வாழ்க்கையையும் வளர்ச்சியையும் பணயம் வைத்து எந்த முடிவையும் எடுப்பார்கள். இது இவர்கள் தங்கள் திறமை மீது கொண்டிருக்கும் அசாத்திய தன்னம்பிக்கையைக் காட்டுகிறது என்றாலும் முக்கியமான முடிவுகளை ஆற அமரச் சிந்தித்து எடுக்க வேண்டும் என்கிற இயல்பை இவர்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும். எல்லாமே நம் கணக்குப்படி நடந்து விடுவதில்லை என்பதை இவர்கள் உணர வேண்டியது அவசியம். இல்லாவிட்டால் காலம் மண்டைப் போடாய் போட்டு இந்த உண்மையை உணர்த்தும்.

நேர்மையும் திறமையும் பலர் விடயத்தில் ஒரு சேர இருப்பதில்லை. ஆம், மற்றவர்களை இவர்கள் வெகு சாமர்த்தியமாக ஏமாற்றி விடுவார்கள். சில நேரங்களில் இந்த ஏமாற்று வேலை வெளியே தெரியாமல் போனாலும் பல நேரங்களில் வெட்ட வெளிச்சமாகி விடுவதால் இவர்கள் வீசி எறியப்பட்டு விடுகிறார் கள். ஆக திறமைகளை நேர்வழியில் பயன்படுத்திக் கொள்ள இவர்கள் பாடுபட வேண்டும்.

மனிதனிடம் இருவகை வெளிப்பாடுகள் உண்டு. ஒன்று பேச்சு; மற்றயது செயல். ஒன்றில் கவனம் செலுத்துகிறவர்கள் மற்றதைக் கோட்டை விட்டுவிடுவார்கள். தெளிவாகச் சொல்ல வேண்டுமானால் சாதிப்பவர்கள் பேசுவதில்லை. பேசுபவர்கள் சாதிப்பதில்லை. நான் அறிந்தவரை பல திறமைசாலிகள் தங்களைப் பற்றிய பிரஸ்தாபங்களிலேயே நேரத்தை வீணாக்கிவிடுகிறார்கள். பேசுவதில் செலவிடும் ஆற்றலைச் செயலில் செலுத்தினால் இவர்கள் வெற்றி பெறமுடியும். எதையும் சத்தமில்லாமல் சாதிக்க வேண்டும். பேச்சைச் சிந்தனையாக்கிச் செயலுருவம் கொடுக்க வேண்டும். திறமைசாலிகள் பல பேர் உணர்ச்சி வசப்படுபவர்களாகவே இருக்கிறார்கள். யாரோடும் அனுசரித்துப் போகாமல் பிறருடைய உயர்வுகளுக்கு மதிப்புத்தராமல் என் வழி தனி வழி என்கிற பாணியில் நடந்து கொள்கிறார்கள். முரட்டுச் சுபாவத்துடன் பிரச்சினைகளை அணுகுகிறார்கள். தேவையே இல்லாமல் கோபப்படுகிறார்கள். யாராக இருந்தாலும் சரி இறுதி வெற்றிகளைப் பற்றிச் சிந்திக்க வேண்டுமே தவிர தற்காலிக உயர்வுகளுக்கு மதிப்புக் கொடுத்துவிடக் கூடாது.

திறமைசாலிகள் அத்தனை பேரும் வெற்றி பெற்று விடுவதில்லை. அதைப் பயன்படுத்துகிறவர்களும் அதை முறைப்படி சரியான வழியில் செயற்படுத்துகிறவர்களுமே வெற்றி பெறுகிறார்கள்.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதாபிமான அமைப்புக்கள் இணைந்து நிவாரணப் பணியில் ஈடுபடும் -ஐ.நா.



இலங்கையில் உள்ள மனிதாபிமான அமைப்புக்கள் இணைந்து வெள்ளப் பெருக்கு மற்றும் மண்சரிவினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிகளை வழங்குவதற்கான வேலைத் திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கை வதிவிட இணைப்பாளர் உணா மக்குலின் தெரிவித்துள்ளார்.

சர்வதேச சமூகத்தின் உதவியுடன் இதற்கான திட்டத்தின் கீழ் தொடர்ந்தும் நிதி உதவியை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஐக்கிய நாடுகள் சபையின் நிறுவனம், தேசிய மற்றும் சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்கள் ஆகியன இணைந்து பாதிக்கப்பட்டுள்ள மூன்று இலட்சத்து 74 ஆயிரம் மக்களுக்கு நிவாரணம் வழங்குவதே இதன் நோக்கமாகும்.

காலி, கம்பஹா, அம்பாந்தோட்டை, களுத்துறை, கேகாலை, மாத்தறை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்த அமைப்புக்கள் மூலம் நிவாரண உதவிகள் வழங்கப்படவுள்ளன.

இதுவரையில் 19 நாடுகளில் பொருட்கள், விசேட நிதி முதலானவை அவசர நிவாரண உதவியாக கிடைக்கப் பெற்றுள்ளதுடன், சுகாதார வசதிக்கு தேவையான வற்றை வழங்குவதற்கு விசேட நிதி செலவிடப்படவுள்ளது" என உணா மக்குலின் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# சூழல் மாசடைதலைத் தவிர்ப்போம்

# உலக சூழல் தினம் இன்று

சூழல் எனப்படுவது எம்மைச் சூழவுள்ள அனைத்துக் கூறுகளும் ஆகும். சூழலானது பல்வேறு கூறுகளைக் கொண்டுள்ளது. இதன் முக்கிய கூறுகளாக நான்கு கூறுகள் கருதப்படுகின்றன. அவையாவன: நிலம், நீர், வளி, ஒலி என்பனவாகும். இந்த முக்கிய கூறுகள் மனிதனின் தற்போதய நடவடிக்கைகளால் மாசடைந்து வருகின்றன.

இந்த வகையில் நீர் மாசடைதலை நோக்குவோமாயின் தொழிற்சாலைக் கழிவுகளை நீர் நிலைகளினுள் கொட்டுதல், விவசாய இரசாயனப் பதார்த்தங்கள் நீர் நிலைகளுடன் கலத்தல், பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் போன்றவற்றை நீர் நிலைகளில் இடுதல், தொழிற்சாலைகளில் வெளியேறும் இரசாயனப்பதார்த்தங்கள் மற்றும் கழிவுநீர் என்பன நீர் நிலைகளில் விடுவிக்கப்படல், நகர்ப்புற குப்பை கூழங்கள், கழிவு நீர் என்பவற்றை ஆறுகள், கால்வாய்கள் என்பவற்றுள் விடுவித்தல், நீர் நிலைகளில் பல்வேறு பொருட்களை கழுவுதலும், குளித்தலும், கால்நடைகளை நீர் நிலைகளில் குளிப்பாட்டுதல், மலசல கூட கழிவுகள் நீருடன் கலத்தல் போன்றனவற்றைக் குறிப்பிடலாம்.

இந்த வகையில் அடுத்ததாக நிலம் மாசடைதலை நோக்குவோமாயின் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் கழிவுகளை நிலத்தில் புதைத்தல், காடழித்தல், உக்காத பொருட்களை நிலத்தினுள் புதைத்தல் (கண்ணாடி, பீங்கான் ஓடுகள்), தொழிற்சாலை எண்ணெய்க் கழிவுகளை நிலத்தினுள் செலுத்துதல், அளவிற்கு அதிகமான செயற்கை இரசாயன உரங்களையும் கிருமிநாசினிகளையும் விவசாயத்தின் போது பயன்படுத்துதல், பல அடுக்கு மாடிக்கட்டடங்களை கட்டுதல், ஆற்றுக் கழிமுகங்களில் மண் அகழ்தல், பல அதிவேக நெடுஞ்சாலைகளை அமைத்தல் போன்ற செயற்பாடுகளைக் குறிப்பிடலாம்.

அடுத்ததாக வளி (காற்று) மாசடைதலை நோக்குவோமாயின் தொழிற்சாலை புகைகள் வளியில் கலத்தல், நச்சு வாயுக்கள் வளியினுள் கலத்தல், கிருமிநாசினிகள் விசிறும் போது அவை வளியில் கலத்தல், வெடி பொருட்களின் நச்சு வாயுக்கள் வளியில் கலத்தல், பழைய வாகனங்களில் இருந்து வெளியேறும் புகை வளிமண்டலத்தில் கலத்தல், யுத்தங்கள் நடைபெறுகின்ற போது நவீன ஆயுதங்களின் பயன்பாட்டால் நச்சுப் புகைகள் வளிமண்டலத்தில் கலத்தல், எரிமலை வெடிப்பினால் வெளியேறும் புகை, தூசு போன்ற காரணிகளால் வளி மாசடைகின்றது. அது மட்டுமன்றி அணுஆயுதத் தாக்குதல்கள் காரணமாக பெருமளவில் வளிமாசடைகின்றது. ஏவுகணைகளை வானத்தில் ஏவுவதாலும், காட்டுத் தீபரவும் சந்தர்ப்பங்களிலும், நாம் விறகை எரித்துப் பயன் பெறும் போதும் அதிகளவு புகை வளிமண்டலத்தைச் சென்றடைகின்றமை போன்ற செயற்பாடுகளினாலும் வளி மாசடைகின்றது. இதனால் ஓசோன் படை சிதைவடைதல், பச்சை வீட்டுத் தாக்கம், அமிலமழை, தீய கதிர்வீச்சு, புவியில் வெப்ப நிலை அதிகரித்தல் போன்ற பல தீய விளைவுகள் ஏற்படுகின்றன.

இந்த வகையில் அடுத்ததாக ஒலி மாசடைதலை நோக்குவோமாயின் பட்டாசு அல்லது வெடி பொருட்கள் எரியும் போது சத்தம் வெளிவிடப்படல், தொழிற்சாலை இயந்திரங்களால் ஏற்படும் பாரிய சத்தம், யுத்த நிலைமைகளின் போது ஏற்படும் பாரிய சத்தம், பழைய வாகனங்களைச் செலுத்துவதால் ஏற்படும் அதிகளவான சத்தம், கல்லுடைக்கும் போது ஏற்படும் பாரிய சத்தம் வானைக் கிழித்துச் செல்லும் போர் விமானங்களால் ஏற்படும் பாரிய சத்தம் போன்ற பல செயற்பாடுகளினால் ஒலி மாசடைகின்றது.

மேற்கூறப்பட்ட சூழலில்உள்ள கூறுகள் மாசடைதலைத் தடுப்பதற்கு சர்வதேச ரீதியாக இப்பிரச்சினை இன்று ஆராயப்படுகிறது. உலக நாடுகளின் அரசாங்கங்களோடு இவ்வெண்ணக்கருவை கவனமெடுக்கும் விஞ்ஞான நிறுவனங்களும், பல்கலைக்கழகங்களும் பல ஆய்வுகளை நடத்தி வருகின்றன. சூழல் மாசடைதல் தொடர்பான விழிப்புணர்ச்சிச் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. சிறப்பாக சூழல் மாசடைதலைத் தடுக்கும் இந்த நடவடிக்கைகளின் பங்குதாரர்களாக இருக்கக் கூடிய பாட சாலைகளிலும், கல்லூரிகளிலும் சூழல் பற்றிய கல்வி அறிவு, மாசடைதலைத் தடுக்கும் எச்சரிக்கைகள், பிரசாரங்கள் என்பனவெல்லாம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.


சூழலைப் பாதுகாப்பதற்காகவே ஒவ்வொரு வருடமும் ஜூன் மாதம் ஐந்தாம் திகதி "உலக சூழல் தினம்" கொண்டாடப்படுகின்றது. ஒவ்வொருவருடமும் ஒவ்வொரு ஆய்வுப்பொருளை (Theme) அடிப்படையாகக் கொண்டே சூழல் தினம் உலக நாடுகளில் கொண்டாடப்படுகின்றது.

அந்த வகையில் இவ்வருடத் திற்கான (2017) ஆய்வுப் பொருள் (Theme) "இயற்கை மக்களை இணைக்கும்" (connecting people to nature) என்பதாகும்.

இந்த வருடத்திற்குரிய சூழல் தின ஆய்வுப் பொருளை கனடா தேர்வு செய்துள்ளது.

எனவே இயற்கையின் முக்கிய வளங்களான நீர், காற்று, நிலம், வனம், கனிமங்கள் போன்றவற்றின் அழிவினை தடுப்பதற்கான பரிகார நடவடிக்கைகளில் எல்லாத் தரப்புகளும் கவனம் செலுத்தி வருவது நல்லதொரு செயற்பாடு ஆகும். அந்த வகையில் மரங்களை நடுதல், இயற்கைப் பசளைகளை பயன்படுத்துதல், குப்பை கூழங்கள் எரிப்பதை தவிர்த்து மண்ணினுள் புதைத்தல், உக்காத பொருட்களை பொருத்தமான முறையில் அகற்றுதல், பொலித்தீன் பயன்பாட்டினை தடை செய்தல் போன்ற செயற்பாடுகளின் மூலம் சூழலை பாதுகாக்க நாம் அனைவரும் முன்வர வேண்டும்.

ஆகவே சூழல் மாசடைவதைத் தடுக்க வேண்டியது மனிதராய் பிறந்த எங்கள் ஒவ்வொருவருடைய பெறுப்பும் கடமையும் ஆகும். எனவே சூழலை மாசடையாது பாதுகாத்து சூழலுடன் நட்புறவாக இணைந்து சுகதேகிகளாக அனைவரும் வாழ்வோம் என இந்த சூழல் தின நாளில் எல்லோரும் உறுதி பூணுவோமாக.






உதயராசா கவிநிலவன்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
தரம் 10F



உதயராசா பிரணவிகா
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை
தரம் 6D

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி கோருதல்
# மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம்

1. தலைவர், மாவட்டசெயலக பெறுகைக் குழு சார்பில் மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம்,கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைகளுக்கான, தற்போது தகுதி உடையவர்களிடம் இருந்தும் தகைமை பெற்றவர்களிடமிருந்தும் குறியீடு செய்யப்பட்ட கேள்விகளை கோருகின்றனர்.
2. கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடத்தப்படும்.
3. ஒப்பந்தமானது நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA). கட்டடம் நிர்மாணிப்பதற்கு கீழ்க்குறிப்பிடும் தரத்தினைக் கொண்டிருப்பதோடு,பொது நிதிசுற்றறிக்கை இல.04/2016(i)ற்கு அமைவாக இவ்விலை மனுக்கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை வடமாகாணத்திற்குள் கொண்டுள்ளதும் கறுப்புப் பட்டியலில் பெயர் இடப்படாததுமான கேள்வியாளருக்கு வழுங்கப்படுவதற்கு உரித்துடையதாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
4. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் மேலதிக தகவல்களை மாவட்ட திட்டமிடல் செயலகத்தில் (தொலைபேசி இல. 021 222 2427) பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் மாவட்டத் திட்டமிடல் செயலகம், மாவட்டச் செயலகம், கண்டிவீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் காலை 8.30 முதல் பி.ப.3.00 மணிவரை அலுவலக நாட்களில் கேள்வி ஆவணங்களைப் பரிசோதிக்கலாம்.
5. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரண தொகுதி ஒன்றினை மாவட்டத் திட்டமிடல் செயலகம், மாவட்டச் செயலகம்,கண்டிவீதி,யாழ்ப்பாணம் என்ற முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்ப மொன்றினைச் சமர்ப்பித்து 05.06.2017முதல் 27.06.2017வரை 09.00 மணியில் இருந்து 15:00 மணிவரையிலான காலப்பகுதியில் மீளளிக்கப்படாத கீழ் குறிப்பிடப்படும் தொகையினை பணமாக செலுத்திப் பெற்றுக்கொள்ளமுடியும்.
6. கேள்விகள் 28.06.2016 ஆம் திகதியன்று முற்பகல் 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர், மாவட்ட பெறுகைக்குழு, மாவட்டசெயலகம், கண்டிவீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைக்கப்படவேண்டும். காலம் தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விகள் வருகைதந்த கேள்விதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் மேற்படி முகவரியில் கேள்விகோரல் முடிவுற்ற உடனேயே திறக்கப்படும்.
7. கேள்வி தொடர்பான முற்கேள்விச் சபைக் கூட்டம் மாவட்ட செயலகம், கண்டிவீதி, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் 20.07.2017அன்று முற்பகல் 10:30 மணிக்கு நடைபெறும்.

| கேள்வி அடையாள இல | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) | மீளளிக்கப்படாத வைப்பு | தேவையான தரம் (CIDA) | கேள்விப் பிணைவிபரம். | | ஒப்பந்த காலம் |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைத் தொகை | செல்லுபடியாகும் காலம் | |
| JF/DPS/IND/MCM-SC/IX/11/2017 | மானிப்பாய் சந்தை-கடைத் தொகுதி மற்றும் மலசலகூடம் அமைத்தல் | 16.384 | 4,000.00 | C6 and C5 | 163,840.00 | 23.10.2017 | 90 நாட்கள் |
| JF/DPS/IND/MCM-VM/IX/12/2017 | மானிப்பாய் சந்தை-மரக்கறிச் சந்தை அமைத்தல் | 9.306 | 2,000.00 | C7 | 93,100.00 | 23.10.2017 | 90 நாட்கள் |
| JF/DPS/IND/MCC/IX/02/2017 | சங்கானை சந்தை-சந்தைகட்டத்தொகுதி அமைத்தல். | 33.147 | 5,000.00 | C5 and C4 | 331,500.00 | 23.10.2017 | 90 நாட்கள் |
| JK/SW/MRW/VII/21/2017 | மாவட்டச் செயலக கீழ்த்தளஆண்கள் மலசலகூடபுனரமைத்தல் | 2.383 | 1,000.00 | C8 | 23,835.00 | 23.10.2017 | 90 நாட்கள் |

நா.வேதநாயகன்,
அரச அதிபர்/ மாவட்டச் செயலாளர்,யாழ்.மாவட்டம்.

(சி-8718)

## துப்பாக்கி, ரவைகளுடன் இருவர் நேற்றுக் கைது!

ஜா-எல - ஏகல பகுதியில் ரி-56 ரக துப்பாக்கியுடன் இருவர் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் வசமிருந்து துப்பாக்கி ஒன்று மற்றும் 7 ரவைகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவர்கள் கொஸ் கொட மற்றும் மீடியா கொட ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள்.

மேலும், சந்தேக நபர்கள் இமதுவ, ஹிக்கடுவை, அகுங்கல்ல மற்றும் வெலிபென்ன ஆகிய பகுதி களில் இடம்பெற்ற ஐந்து கொலைகள் தொடர்பில் தேடப்பட்டு வருபவர்கள் என பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

இவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ-7)

## நாட்டு மக்களுக்கு விடுக்கப்பட்டுள்ள முக்கிய எச்சரிக்கை!

அடுத்து வரும் நாட்களில் அதிக மழைவீழ்ச்சி பதிவாகுமானால் நாட்டில் அரிசி தட்டுப்பாடு ஏற்படலாம் என விவசாய திணைக்களத்தின் காலநிலை தொடர்பான அதிகாரியான ரஞ்சித் புன்யவர்தன எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட அனர்த்தங்களால் 2 இலட்சம் ஹெக்டேயர் பரப்புடைய நெல் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில் அரிசித் தட்டுப்பாடு நிலை ஏற்படலாம் என அவர் கூறியுள்ளார்.

எனவே, இந்தப் பிரச்சினைக்கு தீர்வாக வேறு உற்பத்திகள் தொடர்பில் விவசாயிகள்கவனம் செலுத்த வேண்டும் எனவும் ரஞ்சித் புன்யவர்தன ஆலோசனை வழங்கியுள்ளார். (இ-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1093

Search for people, places and things    Nagendram Home

### டிலானி




### மேகலா




### காவேரி

இட்லி மூன்றெழுத்து
சட்னி மூன்றெழுத்து
சட்னியிலுள்ள கடுகு மூன்றெழுத்து
உப்பு மூன்றெழுத்து
இதை சாப்பிட உதவும் தட்டு
மூன்றெழுத்து அதை பிளேட்ன்னு
சொன்னாலும் மூன்றெழுத்து
சட்டி மூன்றெழுத்து ருசிக்கும்
நாக்கு மூன்றெழுத்து
ஹஹஹஹ...

### சிறி




### கமலன்




### வினோத்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்நாடு- ஓர் பார்வை




பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
வாழ்நாள் பேராசிரியர்
முன்னாள் துணைவேந்தர்

தமிழ் நாட்டின் உயர் கல்வி நீண்ட வரலாற்றைக் கொண்டதுடன் இன்று 60க்கு மேற்பட்ட மாநில அரசு, தனியார், மத்திய அரசு பல்கலைக்கழகங்கள், உயர்கல்வி நிறுவனங்கள் பெரும் எண்ணிக்கையான இணைந்த கல்லூரிகளைக் கொண்டு பெரியளவில் விரிவடைந் துள்ளது. மேலும் பலவகைப்பட்ட கற்கைகள் இடம்பெறுவதுடன் இலட்சக் கணக்கான மாணவர்கள் கல்வி பயில்கின்றார்கள். மேலும் பால் நிலையில் முன்னர் நிலவிய ஆண் மேலாதிக்கம் வெகுவாகக் குறைவடைந்து சமநிலைப் பண்பு காணப்படுகின்றது.

இந்தியாவில் 1857ஆம் ஆண்டு கொல்கத்தா,பம்பாய், சென்னை ஆகிய மூன்று நகர்களிலும் ஒரே காலத்தில் பிரித்தானிய அரசு பல்கலைக்கழகங்களை நிறுவியது. இப் பல்கலைக்கழகங்கள் இந்திய மக்களின் மேம்பாட்டுக்குப் பெரிதும் உதவியாக இருந்ததுடன் ஆங்கிலக் கல்வி வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியது. மேலும் இந்தியாவில் ஆங்கில கல்வி கற்ற நடுத்தர வகுப்பு உருவாக வழி சமைத்தது. இவர்கள் இந்திய சுதந்திரத்தை முன்னெடுப்பதில் முக்கியத்துவம் பெற்றிருந்தனர்.

சென்னையில் பல்கலைக்கழகம் அமையப்பெற்றது. தென்னிந்தியாவின் கல்வி வளர்ச்சிக்கு பெரிய உதவியாக இருந்தது சென்னைப் பல்கலைக்கழகம். மிகப் பரந்த பிரதேசத்திற்குப் பல்கலைக்கழகமாக விளங்கியதுடன் இப் பல்கலைக் கழகத்துக்குக் கீழ் இணைந்த பல கல்லூரிகள் இருந்தன. 1857இல் இருந்து 1965இல் மதுரை – காமராஜர் பல்கலைக்கழகம் நிறுவப்படும் வரை சென்னை மாநிலத்தில் பின்னர் தமிழ் நாட்டில் சென்னைப் பல்கலைக்கழகத்துடன்தான் சகல கல்லூரிகளும் இணைக்கப்பட்டு இருந்தன. இக் கல்லூரிகள் கற்றவர் யாவரும் சென்னை பல்கலைக் கழகப் பட்டத்தையே பெற்றுள்ளனர். சென்னைப் பல்கலைக் கழகத்தில் பட்டம் பெற்ற முன்னோடிகளில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழர் அறிஞர் சி.வை. தாமோதரம்பிள்ளையும் ஒருவராவார்.

சென்னை நகரை அன்றும் இன்றும் முக்கியப்படுத்துவதில் பல கல்லூரிகள் பெரும் பங்கு வகித்து வருகின்றன. சென்னை ர்ரஜதானிக் கல்லூரி, சென்னை கிறிஸ்தவக் கல்லூரி, லொயலாக் கல்லூரி, பெண்கள் கிறிஸ்தவக் கல்லூரி, ஸ்ரெலா மேரிஸ் கல்லூரி, பெண்களுக்கான எத்திராஜ் கல்லூரி, குருநானக் கல்லூரி, இராணி மேரிக் கல்லூரி, பெண்களுக்கான வைஷ்ணவக் கல்லூரி, விவேகானந்தாக் கல்லூரி போன்றன 1950 களுக்கு முன்னர் சிறப்புற்று இருந்தன. இதேபோல் இம்மாநிலத்தின் முக்கிய நகர்களில் கிறிஸ்தவ மிஷனரி மார்களின் முயற்சியால் பிரபல்யமான பல கல்லூரிகள் நிறுவப்பட்டன. இன்று மாநிலத்தில் பல பல்கலைக்கழகங்களும் கல்லூரிகள் மற்றும்




ஆய்வு நிறுவனங்கள் தமிழ் நாட்டின் கல்வித் துறைக்குப் பெரும் பங்காற்றுகின்றன.

1929 இல் அண்ணாமலைச் செட்டியாரால் சிதம்பரத்தில் மிகப் பெரிய அண்ணாமலைப் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது. இந்தப் பல்கலைக்கழகம் சென் னைப் பல்கலைக்கழகம் போல் அல்லாது Unitary Residential University தனியான பல்கலைக்கழகமாக இருந்த துடன் இங்கு கற்கும் மாணவர்கள் தங்குவதற்கு மிகப் பெரிய விடுதீ வசதிகள்கொண்டதாகவும் இருந்தது. இது பேராதனைப் பல்கலைக் கழக கட்டமைப்பை ஒத்தது. இப் பல்கலைக்கழகம், தமிழ் நாட்டின் உயர் கல்வி வளர்ச்சிக்கு குறிப்பாக தமிழ், கர்நாடக சங்கீ தம் போன்ற துறைகளின் வளர்ச் சிக்கு பெரும் பங்கு வகித்தது, இன்னும் வகித்து வருகின்றது.

1965 இல் மதுரை – பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது. முன்னாள் முதல்வர் கர்ம வீரர் காமராஜரின் மறைவிற்கு பின்னர், அவர் குறிப்பாக தமிழ் நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு ஆற்றிய பங்கை கௌரவிக்க மதுரைப் பல்கலைக்கழகத்தின்பெயர்மதுரை காமராஜர் பல்கலைக் கழகம் எனப் பெயரிடப்பட்டது. இப்பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்ட பின்னர் அன்றைய மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் சென்னைப் பல்கலைக்கழகத்தின் கீழ் இருந்த கல்லூரிகள் யாவும் புதிய மதுரை காமராஜன் பல்கலைக்கழகத்திற்குக் கீழ் கொண்டு வரப்பட்டன. இன்று மதுரை, தேனி, திண்டுக்கல், விருதுநகர் மற்றும் இராமநாதபுர மாவட்டங்களில் உள்ள கலை, விஞ்ஞானக் கல்லூரிகள் இப் பல்கலைக்கழகத்துடன் இணைந்துள்ளன. இன்று இப் பல்கலைக் கழகத்திற்குக் கீழ் 109 கல்லூரிகள் செயற்படுவதுடன் சில வளர்ச்சி பெற்ற கல்லூரிகள் தன்னாதிக்க கல்லூரிகளாக (Autonumous College) வும் இருக்கின்றன. தன்னாதிக்க கல்லூரிகள், இப் பல்கலைக்கழகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பாட விதர்னத்தை அவர்களே கற்பித்து பல்கலைக்கழக விதிமுறைக்கு அமைவாக நாங்களே பரீட்சைகளை அமைக்க முடியும். பட்டங்கள் பல்கலைக்கழகத்தால் மாத்திரம் வழங்கப்படும். ஏனைய கல்லூரிகள் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபடலாம். பரீட்சைகள் பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும்.

1982இல் கோயம்புத்தூரில் பாரதியார் பல்கலைக்கழகமும், திருச்சியில் பாரதிதாசன் பல்கலைக் கழகமும் அமைக்கப்பட்டன. இதனால் அன்றைய கோயம்புத்தூர், உதக மண்டல மாவட்டத்தில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் கீழிருந்த கல்லூரி கள் புதிய பல்கலைக்கழக நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன. இன்று கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், உதக மண்டல மாவட்டங்களில் கீழ் இருக்கும் கலை, விஞ்ஞானக் கல்லூரிகள் பாரதியார் பல்கலைக்கழகத்தின் கீழ் இருக்கின்றன.

இதேபோல் பாரதிதாசன் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்ட பொழுது திருச்சி, தஞ்சாவூர் மாவட்டங்களில் சென்னைப் பல் கலைக்கழகத்துக்கு கீழிருந்த கல்லூரிகள் புதிய பாரதிதாசன் பல்கலைக்கழகத்துக்குகீழ்கொண்டு வரப்பட்டன. இன்று கரூர், திருச்சி, பெரம்பலூர், அரியலூர், தஞ்சாவூர், திருவாரூர், நாகப் பட்டணம் ஆகிய மாவட்டங்களில் இருக்கும் கலை, விஞ்ஞானக் கல்லூரிகள் பாரதியார் பல்க லைக் கழகத்தின் ஆட்சிப் புலத்திற்கு கீழ் இருக்கின்றன.

1990இல் திருநெல்வேலி நகரில் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது. தமிழ் அறிஞர், நாடகத் துறையில் புகழ் பெற்றவர். இன்று பொதுவாகப் பாடப்பெறும் தமிழ்த்தாய் வாழ்த்துப்பாவின் ஆசிரியர் என்ற நிலையில் திருநெல்வேலியில் அமைத்த பல்கலைக் கழகத்துக்கு மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் எனப் பெயரிடப்பட்டது. இப் பல்கலைக்கழகம் அமையப் பெற்றதும் திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமாரி, மாவட்டங்க ளில் மதுரை – காமராஜர் பல்க லைக்கழகத்தின் கீழிருந்த கல்லூரிகள் புதிய பல்கலைக்கழகத்தின் நிர்வாகத்துக்கு கீழ் கொண்டு வரப்பட்டதுடன் பல புதிய கலை விஞ்ஞான கல்லூரிகள் இதன் ஆட்சிப் பரப்பில் நிறுவப்பட்டுள்ளன.

இப்பல்கலைக்கழகத்திற்குள்ளும் தன்னாதிக்ககல்லூரிகளும் இணைந்த கல்லூரிகளும் இருக்கின்றன. திருநெல்வேலிமனோன் மணியம் சுந்தரனார் பல்கலை அமைவைத் தொடர்ந்து சேலத் தில் புதிய பல்கலைக்கழகம் அமையப் பெற்றது. இப் பல்கலைக்கழகத்திற்கு சமூக சீர்திருத்த வாதியான பெரியார். E.V.K. இராமசாமி நாயக்கரின் பெயர் சூட்டப் பட்டு பெரியார் பல்கலைக்கழகம் என அழைக்கப்படுகின்றது.சேலம்,நாமக்கல், தர்மபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் சென்னைப் பல்கலைக்கழகத்தின் கீழிருந்த கல்லூரிகள் இப் புதிய பல்கலைக் கழகத்துக்கு கீழ் கொண்டு வரப்பட்டுள்ளதுடன் புதிய பல கலை, விஞ்ஞானக் கல்லூரிகளும் நிறு வப்பட்டுள்ளன.

2002 ஆம் ஆண்டு வேலூரில், ஒரு பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டு திருவள்ளுவரின் பெயர் இப் பல்கலைக்கழகத்துக்குச் சூட்டப்பட்டது. வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர் ஆகிய மாவட்டங்களில் சென்னைப் பல்கலைக்கழகத்தின் கீழிருந்த கலை, விஞ்ஞானக் கல்லூரிகள் இப்புதிய பல்கலைக்கழகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன.

காரைக்குடியில் 1985 இல் அழகப்பா பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது. ஆரம்பத்தில் தனியார் பல்கலைக்கழகமாகவும் தனித்த பல்கலைக்கழகமாகவும் ஆரம்பித்ததுடன் இணைந்த பல்க லைக் கழகக் கல்லூரிகளை கொண்ட பல்கலைக்கழகமாக இன்றுள்ளது. புதுக்கோட்டை, சிவகங்கை மாவட்டங்களிலுள்ளகலை,விஞ்ஞானக் கல்லூரிகள்இப்பல்கலைக்கழக நிர்வாகத்தின்கீழ் இருக்கின் றன.

சென்னைப் பல்கலைக்கழகம் ஒரு காலத்தில் சென்னை இராசதானிப் பகுதியில் இருந்த முழுக்கல்லூரிகளின் நிர்வாகத்திற்குப் பொறுப்பாக இருந்தது. பின்னர் சென்னை மாநிலம், அதன் பின்னர் தமிழ்நாடு முழுவதும் இருந்த சகல துறைசார் கல்லூரிகளின் நிர்வாகத்திற்குப்பொறுப்பாக இருந்தது. எல்லாக் கற்கை நெறி பிரிவினரும் சென்னைப் பல்கலைக்கழகப் பட்டமே பெற்றிருந்தனர். புதிய பிராந்திய பல்கலைக்கழகங்களும் புதிய துறைசார் (Thematic Universities) அமைக்கப்பட்டதால் சென்னைப் பல்கலைக்கழகத்தின் நிர்வாகப் பரப்பு குறுகியதுடன் பொறுப்பான விடயப் பரப்புக்களும் குறைவடைந்துள்ளன.

இன்று இப்பல்கலைக்கழகத்தின் கீழ் சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் இருக்கும் கலை, விஞ்ஞானக் கல்லூரிகள் இருக்கின்றன. இப்பல்கலைக்கழகத்திற்குக்கீழ் மிகைபெற்ற பல பழைய கல்லூரிகளும் புதிய பல கல்லூரிகள் தன்னாதிக்கக் கல்லூரிகளாகவும் (Autonumous Colleges) பலமான பட்டப்பின்படிப்பு செயற்பாடுகளைக் கொண்டனவாக இருக்கின்றன. மேலும் பல கல்லூரிகள் (Deemed University Status) பல்கலைக்கழக அந்தஸ்தைப் பெறும் நிலையை எட்டியுள்ளன. லொயலா, ஸ்ரெல்லாமேரிஸ்,இராஜதானி,சென்னை கிறிஸ்தவக் கல்லூரி,எத்திராஜ் பெண்கள் கல்லூரி, கும்பகோணம் அரச கல்லூரி போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

தமிழ்நாட்டில் அரச துறையில் அமையப் பெற்றுள்ள பல்கலைக்கழகங்கள் பின்வருமாறு,

சென்னைப் பல்கலைக் கழகம், மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், மனோன் மணியம் சுந்தரனார் பல்க லைக்கழகம், பெரியார் பல்கலைக்கழகம், திருவள்ளுவர் பல்கலைக் கழகம், அழகப்பா பல்கலைக் கழகம் இந்த எட்டு பல்கலைக் கழகங்கள் கலை, விஞ்ஞான கற்கைகளுடன் தொடர்புபட்டும் குறிப்பிடப்பட்ட பிரதேசங்களிலுள்ள இணைந்த கல்லூரிகளை நிர்வகிப்பதிலும் அக்கல்லூரிகளில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்குவதில் பொறுப்பாக உள்ளன. தமிழ்நாட்டில் இன்று 1250 இற்கு மேற்பட்ட கலைக்கல்லூரிகள் இருக்கின்றன. இக்கல்லூரிகளில் பெரும்பாலானவற்றில் விஞ்ஞான பட்டதாரி வகுப்புக்களும் இடம்பெறுகின்றன.

தமிழ்நாட்டின் கலை, விஞ்ஞான வகுப்புக்களைக் கொண்ட இணைந்த பிரசித்தி பெற்ற கல்லூரிகள் பல தனியார் நிறுவனங்களாலும் சமய நிறுவனங்களாலும் நடத்தப்படுகின்றன. மேலும் இக்கல்லூரிகள் முக்கியமான நகரங்களில் காணப்படுகின்றன. அரச கலைக்கல்லூரிகள் மாநிலம் முழுவதிலும் பரவலாக இருப்பதுடன் சிறிய நகர்களிலும பின்தங்கிய பிரதேசங்களிலும் காணப்படுகின்றன.

தமிழ்நாடு ஆசிரியர் கல்விப் பல்கலைக்கழகம் ( TN Teacher Education University)- தமிழ்நாட்டில் கல்வியியல் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகள் யாவும் 2005 ஆம் கல்வியா ண்டிலிருந்து இப்பல்கலைக்க ழகத்திற்குக் கீழ் கொண்டு வரப் பட்டுள்ளன. இதற்கு முன்னர் இக் கற்கை நெறிசென்னை,மதுரைகாமராஜர், மனோன்மணியம் சுந்தரனார், பாரதியார், பாரதிதாசன், பெரி யார், திருவள்ளுவர், அழகப்பா பல்கலைக்கழகத்து கலை, விஞ்ஞானக் கல்லூரிகளின் கீழ் இருந்தது குறிப்பிடத்தக்கது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே நாளில் கம்பனிப் பதிவு



கம்பனிகளை இலத்திரனியல் அடிப்படையில் தன்னியக்க முறையில் பதிவு செய்யும் திட்டமொன்றுக்கான ஒப்பந்தம், வர்த்தகம் மற்றும் கைத்தொழில் அமைச்சில், அமைச்சர் ரிஷாட் பதியுதீன் முன்னிலையில், கடந்த வாரம் கைச்சாத்திடப்பட்டது.

கம்பனிப் பதிவாளர் திணைக்களத்துக்கும், கே.பி.எம்.ஜீ - சிறிலங்காவுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட இந்த ஒப்பந்தம் தொடர்பான திட்டத்தை அமுல்படுத்த 57 மில்லியன் ரூபாய் செலவிடப்படுகிறது என, வர்த்தக மற்றும் கைத்தொழில் அமைச்சினால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தத் தொகையை, கம்பனிப் பதிவாளர் திணைக்களம், வரியிறுப்பாளர்களிடமிருந்து அறவிடாமல் கம்பனிப் பதிவாளர் நிதியத்திடமிருந்து பெற்று வழங்குகிறது.

இந்த புதிய திட்டம், ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர், ஒரே நாளில் புதிய கம்பனிகளை இலத்திரனியல் முறையின் கீழ், இணையம் மூலம் பதிவு செய்து கொள்ள முடியும்.

இதுவரை காலமும், ஒரு கம்பனியைப் பதிவு செய்வதற்கு இருந்த பல்வேறு சிரமங்கள், இந்தப் புதிய முறை மூலம் நீக்கப்படுவதோடு மாத்திரமின்றி மூன்று நாட்கள் காத்திருக்க வேண்டிய தேவையும் இல்லை.

வெளிநாடுகளில் வாழ்வோர், இலங்கையில் கம்பனியொன்றைப் பதிவு செய்ய வேண்டுமாயின், இங்கு வந்து சிரமப்பட வேண்டியிருந்த நிலை இனிமேல் இருக்காது. அவர்கள் தமது ஆவணங்களையும், கடவுச்சீட்டு மற்றும் விவரங்களையும் இணையம் மூலம் வழங்கி அவை சரிபார்க்கப்பட்ட பின், தமது கம்பனியை ஒரே-நாளில் பதிவு செய்து கொள்ள இந்த புதியத் திட்டம் வழிவகுக்கிறது என குறிப்பிடப்பட்டிருந்தது.

# ஆண்டின் சிறந்த வளர்ந்து வரும் நிதி நிறுவனமாக எம்பிஎஸ்எல் தெரிவு



2017 மத்திய கிழக்கு ஆசிய தலைமைத்துவ அமர்வு விருதுகள் 2017இல், "ஆண்டின் சிறந்த வளர்ந்து வரும் நிதிசார் நிறுவனம்" எனும் விருதை, மேர்ச்சன்ட் பாங்க் ஒஃவ் சிறிலங்கா (MBSL) அன்ட் Finance பிஎல்சி தனதாக்கியிருந்தது.

ஆசியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளைச் சேர்ந்த, நிதிசார் சேவைகளை வழங்கும் நிறுவனங்களின் போட்டி மத்தியில் வெல்லப்பட்டிருந்த இந்த விருதின் மூலமாக, இலங்கையின் நிதிசார் கட்டமைப்பில் MBSL கொண்டுள்ள நிலைப்பாடு மேலும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இரு வருடங்கள் எனும் குறுகிய காலப்பகுதியில் இலங்கையில் முன்னெடுக்கப்பட்டிருந்த சிக்கல்கள் நிறைந்த மூன்று நிறுவனங்களின் ஒன்றிணைவாக அமைந்திருந்த MBSL, அதன் மக்களை ஒன்றிணைப்பது, செயன்முறைகளை வகைப்படுத்துவது மற்றும் வளர்ச்சிக் கொள்கை ஆகியவற்றை முன்னெடுத்திருந்தது. இதனூடாக அதிகளவு போட்டிகரத்தன்மை வாய்ந்த நிதிசார் நிறுவனமாக திகழ்கிறது. 2016இல் MBSL பதிவு செய்திருந்த உறுதியான நிதிசார் பெறு பேறுகளினூடாக இது மேலும் உறுதி செய்யப்பட்டிருந்தது. 2016 நிறைவில் நிறுவனத்தின் மூலமாக, 293 சதவீத ஒன்று திரட்டப்பட்ட வருமான வளர்ச்சி பதிவாகியிருந்தது. வரிக்கு பிந்திய இலாபமாக 176 மில்லியன் ரூபாய் பதிவாகியிருந்தது.

இந்த சாதனைகள், மத்திய கிழக்கு ஆசிய தலைமைத்துவ மாநாடு விருதுகள் வழங்கல் 2017 நிகழ்வின் போது கௌரவிக்கப்பட்டிருந்தன. இந்நிகழ்வு டுபாய், மரீனாவில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில், MBSL தலைவர் கலாநிதி. சுஜீவ லொகுஹேவா மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரி ரி.முதுகல ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.




# டிஎப்சிசி ஊடாக மீள உபயோகிக்கக்கூடிய பைகள்



பொருத்தமான நேரத்தில் எடுக்கப்பட்டட பொருத்தமான முடிவாக, இலங்கை வங்கியியற் துறையில் முதற்தடவையாக DFCC வங்கியானது தமது பணியாளர்களுக்கென மீள உபயோகிக்கக்கூடிய DFCC வங்கி வர்த்தக நாமமிடப்பட்ட பைகளை அங்குரார்ப்பணம் செய்துள்ளது.

உங்கள் பைகளை நீங்களே எடுத்துச்செல்லுங்கள் என்ற கருத்தாக்கத்தினை பணியாளர்கள் மத்தியில் ஊக்குவிக்கும் நோக்குடன் முன்னெடுக்கப்பட்டுள்ள இந்த முனைப்பின் ஊடாக வங்கியானது, வருடாந்தம் உபயோகிக்கப்படும் ஒரு மில்லியன் பொலித்தீன் பைகளின் உபயோகத்தினை குறைப்பதற்கு உத்தேசித்துள்ளது.

நாட்டில் தற்போது காணப்படும் குப்பை பிரச்சினையினை கருத்திற் கொண்டு முன்னெடுக்கப்படும் இந்த செயற்பாடானது, மீள்சுழற்சிக்கு உட்படுத்தக் கூடிய பைகளை உபயோகிப்பதை ஊக்குவிக்கின்றது.

# கொமர்சல் வங்கி பே மாஸ்டர் மூன்று நாட்களில் சாதனை



2017 ஏப்ரல் மாதத்தில் 2,500க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் கொமர்ஷல் வங்கி apd ;Ngkh] ;uKi w Clhf %d Nwj pd q; fs py ; 116 gpy ypad ; & ghi a rkgs khf Tk;Vi d anf hLgg d T f s hf T k ; செலுத்தி சாதனை படைத்துள்ளன.

இது கொமர்ஷல் வங்கியின் அதி நவீன பாரிய அளவிலான கொடுப்பனவு முறையாகும்.

ஏப்ரல் 5, 6 மற்றும் 7 திகதிகளில் பே மாஸ்டர் ஊடாக மேற்படி நிறுவனங்களுக்குத் தேவையான 375,666 இலத்திரனியல் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதில் 53 வீதமானவர்கள் கொமர்ஷல் வங்கியில் கணக்குகளைக் கொண்டுள்ள வாடிக்கையாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. என்றும் ஏனையவர்கள் ஏனைய வங்கிகளில் கணக்குகளைக் கொண்டவர்கள் என்றும் வங்கி அறிவித்துள்ளது.

குறிப்பிட்ட இந்த நாட்களில் ஆறாம், ஏழாம் திகதிகளில் மட்டும் பே மாஸ்டர் ஊடாக மூன்று லட்சம் பேருக்கு 9 பில்லியன் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது. இது இந்த முறைமையின் அளப்பரிய ஆற்றலை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது என்றும் வங்கி அறிவித்துள்ளது.

தனி நபர்களும் நிறுவனங்களும் கொமர்ஷல் வங்கியின் இணைய மேடையில் ஒரு கோவையை பதிவேற்றம் செய்வதன் மூலம் பல்வேறு தரப்பினருக்கு சகல விதமான கொடுப்பனவுகளையும் செய்து கொள்ள இந்த பே மாஸ்டர் முறை வழியமைக்கின்றது. கொடுப்பனவுகளின் எண்ணிக்கைக்கு இங்கே வரையறை கிடையாது. கொடுப்பனவை செலுத்துபவர்களும் அதை பெறுகின்றவர்களும் கொமர்ஷல் வங்கியில் கணக்குகளைக் கொண்டிருந்தால் பணப்பரிமாற்றம் உடனடியாகவே இடம்பெறும்.

பல நிறுவனங்கள் தமது ஊழியர்களின் சம்பளக் கொடுப்பனவு, வாடிக்கையாளர்களுக்கான தரகு கொடுப்பனவு உட்பட இன்னும் பல கொடுப்பனவுகள் என்பனவற்றைச் செலுத்த பெரும்பாலும் இந்த முறையைப் பயன்படுத்துகின்றன. 2016ல் இந்த முறை தரவேற்றம் செய்யப்பட்டது. பாரிய அளவிலான கொடுப்பனவுகளுக்காக இரட்டை மற்றும் பன்முக அங்கீகாரங்கள் இதன் மூலம் வழங்கப்பட்டுள்ளன. குழு கணக்குகளுக்காக் பிரத்தியேகமான வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

வட்டிகள், பங்கிலாப கொடுப்பனவுகள், முகவராண்மை தரகுகள், காப்புறுதி கொடுப்பனவுகள், பாரிய பாவனை கொடுப்பனவுகள், ஊழியர் நம்பிக்கை நிதியம், ஊழியர் சேமலாப நிதியம் என அரச கொடுப்பனவுகள் உட்பட இன்னும் பல கொடுப்பனவுகளுக்கு நவீன தரமுயர்த்தப்பட்ட முறைமை வழிவகுக்கின்றது.

# முதலீட்டாளர் பயிற்சிப்பட்டறை

"நீங்களும் சிறந்த முதலீட்டாளராகலாம்" எனும் கருப்பொருளில் பங்குச் சந்தை முதலீட்டு உத்திகள் தொடர்பான பயிற்சிப்பட்டறை எதிர்வரும் 10, 17,18 மற்றும் 24ம் திகதிகளில், யூன் மாதத்தின் வார இறுதி நாட்களில் காலை 9.30 தொடக்கம் மதியம் 12.30 வரை யாழ்-பங்குப் பரிவர்த்தனை கேட்போர் கூடத்தில் நடைபெறும். (சத்திரச்சந்திக்கு அருகாமை) பதிவுக்கட்டணம் ரூபா.1,000 எனவும் 0212221455 அல்லது 0777822014 க்கு தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

# யூனியன் வங்கி பிரதி தலைவராக பிரியந்த பெர்னாண்டோ நியமனம்

யூனியன் வங்கி பிஎல்சி பிரியந்த பெர்னாண்டோவை வங்கியின் பிரதி தலைவராக நியமனம் செய்துள்ளமை குறித்து அறிவித்துள்ளது.



பெர்னான்டோ.கடந்த 6 வருடங்களாக வங்கியின் சுயாதீனமான நிறைவேற்று அதிகாரமற்ற பணிப்பாளராக சபையில் அங்கம் வகித்திருந்ததுடன், ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ குழுவின் தலைவராகவும், சபைத் தணிக்கை குழுவின் அங்கத்தவராகவும், மனித வள மற்றும் ஊதிய குழு, நியமன குழு ஆகியவற்றின் அங்கத்தவராகவும் கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE

(வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6,697.86 | 6,689.07 ⇩ |
| எஸ் & பி 20 சுட்டி | 3,828.59 | 3,842.45 ⇧ |

விலை அசைவுகளின் அடிப்படையில் — புரள்வு (ரூபா.மில்.) 4,134.876

**உயர்வடைந்த பங்குகள்(ரூ):** பிறவுண்ஸ் கப்பிரல்(3.80), ஈஸ்ரன் மேர்சன்ட் (8.10), சிரஸ் கல்பிட்டிய(3.50), ஈடன் ஹோட்டல்(16.40), எஸ்எம்பி லீசிங்(0.80).

**சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):** கலமசு 746.70(746.70), பிசி ஹவுஸ் (0.10), எஸ்எம்பி லீசிங்(X)(0.30), ரோக்கியோ சீமென்ட்(63.50), ரோக்கியோ சீமென்ட்(X)(57.30).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

# வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 150.78 | 154.58 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 193.46 | 200.03 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 168.21 | 174.56 |
| சுவிஸ் பிராங் | 154.36 | 160.47 |
| கனேடிய டொலர் | 110.99 | 115.39 |
| அவுஸ்திரேலிய டொலர் | 110.41 | 115.39 |
| சிங்கப்பூர் டொலர் | 108.36 | 112.34 |
| ஜப்பான் யென் | 1.34 | 1.39 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.36 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 41.52 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் அரங்கம்

## ராஜா நல்ல ராஜா!

நாட்டரசன்புரம் என்ற நாட்டை மார்த்தாண்டன் என்ற மன்னன் ஆண்டார். அவர் தனது நாட்டில் பல சிரமங்களுக்கிடையில் மிகப்பெரிய பூந்தோட்டம் ஒன்றை அமைத்தார். அதில் எல்லாவகையான பூச்செடி களையும் வளர்த்தார்.

பல நிறத்தில் பூமரங்களையும் அமைத்தார். பூமரங்களை ஒட்டி நல்ல காய், கனிகளைத் தரும் மரங்களையும் அமைத்தார். எங்கு பார்த்தாலும் பச்சைப் பசேல் என்ற புற்களையும், புல்லின் நடுவே தரையில் படரும் சிறிய பூச்செடி வகையும் வளர்த்தார்.

மரங்களிலும் புதர்களிலும் உயர்ந்த சாதிப் பறவைகளையும், முயல், அணில் போன்றவைகளை யும் வளர்த்தார். வைரத்தை தங்கத் தில் பதித்தது போல பொன்னிற புள்ளி மான்கள் அந்தத் தோட்டத் தில் அங்குமிங்கும் துள்ளியோடின.

அந்தத் தோட்டத்தைக் கண் டால் மனம் அமைதியடையும். கவலைகள் மறந்து போகும். அப்படி ஒரு அற்புதமாக அந்த தோட்டம் அமைந்து இருந்தது. அந்தத் தோட டத்தைக் காணவும், ரசிக்கவும் பல தேசத்து ராஜாக்களும் சிற்றரசர்க ளும் வருவர்.

அவர்களை மன்னர் வரவேற்று உபசரிப்பார். அவர்கள் தோட்டத் தைச் சென்று காண்பர் பிரமிப்பர். இத்தனை பெரிய இடத்தை வளை த்து இத்தனை எழிலான ஒரு தோட் டத்தை அமைக்க முடியுமா? என்று வியப்பர். எனினும் அந்தத் தோட்டத் தைச் சுற்றி பார்த்துக் கொண்டே வரும் போது ஒரு குறிப்பிட்ட இடத் திற்கு வரும்போது முகம் சுளிப்பர்.

ஏனென்றால் அந்த இடத்தில் ஒரு பிரிந்தும் பிரியாததுமாக கிழிந்த காய்ந்த, ஓலைகளுடன் கூடிய ஒரு சிறு குடிசை இருந்தது. அந்தக் குடிசையின் சுற்றுச் சுவர்கள் வெறும் களிமண்ணால் பிசைந்து கட்டப்பட்டு இருந்தது. அந்த ஓலைக் குடிசையை சுற்றி துவைக்கும் கல்லும், முக்கூட் டுக் கற்களால் அடுக்கப்பட்ட ஒரு சிறு அடுப்பும், ஏழெட்டு நைந்து போன துணிமணிகளும், அலுமி னியக் குவளைகளும் கிடக்கும். குடிசையை சுற்றி நாகவாளி செடி நிறைந்து இருக்கும்.

இத்தனை அற்புதமான ஒரு தோட்டத்தின் நடுவே இத்தனை கோரமான பஞ்சக்குடிசை ஒன்று ஏன் உள்ளது என்ற யாருக்குமே புரியவில்லை. எனினும் அந்தக் காரணத்தை பேரரசரிடம் கேட்கும் தைரியமோ அல்லது அந்தக் குடிசை இருப்பது தோட்டத்தின் எழிலைக் கெடுப்பதாக உள்ளது என்று கூறவோ யாருக்கும் துணிவே வரவில்லை.

நாட்கள் சென்றன. மகிபாலன் என்றொரு சிற்றரசன் அந்த தோட் டத்தைக் காண வந்தான். வழக்கம் போல மன்னருடன் சேர்ந்து தோட் டத்தைச் சுற்றிப் பார்த்தபடி அரசனைப் பலவிதமாகப் புகழ்ந்தபடி வந்தான்.

திடீரென அவன் கண்கள் குடி சையைக் கண்டது. உடனே முகம் வாடினான். அத்தனை எழிலான தோட்டத்தில் இப்படி ஒரு ஏழ்மை தோற்றமுடன் கூடிய குடிசை ஒன்று இருப்பதற்கு ஏதோ ஒரு காரணம் இருக்க வேண்டும் என்று நினைத் தான்.

உடனே அரசரிடம், "மன்னா இந்த எழிலான தோட்டத்தில் இப்படி யொரு எளிய குடிசை இருப்பதன் காரணம் என்ன?"" என்று கேட் டான்.



உடனே மன்னன், "மகிபாலா! இந்த குடிசை உன்னைப் போன்ற ஒரு தைரியசாலியின் குடிசை. நான் எட்டு ஆண்டுகளுக்கு முன் இந்தத் தோட்டத்தை உருவாக்க முயன்றபோது ஒரு பெரிய பரப்பள வுடன் கூடிய இடம் எனக்கு மிகவும் அவசியமாகியது. நாடு முழுக்க அமைச்சர் அந்த மாதிரி ஒரு இடத்தைத் தேடிய போது இந்த இடம் அகப்பட்டது. ஆனால், பெரிய இடத் திற்கு நடுவே இந்த குடிசையும் இருந்தது.

"இதில் இருந்த ஏழைக் கிழவியி டம், நீ இந்தக் குடிசையை காலி செய்ய வேண்டும். இங்கு மன்னர் மிகப் பெரிய பூந்தோட்டம் அமைக்க இருக்கிறார்,"" என்று கூறியபோது கிழ்வி மறுத்திருக்கி றாள்.

விபரமறிந்த நான் நேரில் வந்து, "இடத்தை காலி செய்,"" என்று கூறினேன்.

ஆனால் அந்த பெண்ணோ, "மன்னா! இது என்பாட்டன் பூட்டன் காலத்து குடிசை, இதைத் தாங்கள் அழிப்பதை நான் விரும்பவில்லை. என் உயிரே போனாலும் இதனை இடிக்கவோ, ஓலைகளைப் பிரித் தெறியவோ நான் மனதார ஒப்புக் கொள்ள மாட்டேன். படைபலம் நிறைந்த நீங்கள் நினைத்தால் என்னை ஒரே நிமிடத்தில் கொன்று விடலாம்.

"நான் இறந்த பின்பு இந்த இடத்தை நீங்கள் இடித்து, சிதைத்து உமது தோட்டத்தை உருவாக்கிக் கொள்ளலாம். ஆனால், நான் இறந்தாலும் எனது பூர்வீகக் குடி சையை அழித்து என் மனதில் வேதனையை ஏற்படுத்தியதற்காக தங்களுக்கு இறைவன் நிச்சயம் தண்டனையைத் தந்தே தீருவார்."" என்று கூறி அழுதார்.

"அவள் கண்ணீரில் இருந்த நியாயமும் பூர்வீக நினைவுச் சின்னத்தைக் காப்பாற்றிக் கொள் ளும் மனோ தைரியத்தால் என்னை எதிர்த்து அவள் பேசிய வீரமும் என் மனதை நெகிழ வைத்தது. அவள் மன உணர்வை மதித்து, நான் இந்தக் குடிசையை அகற்றாமல் இந்தத் தோட்டம் உருவாக்கிய நான்கு, ஐந்து ஆண்டுகளில் அந்தக் கிழவி இறந்துவிட்டாள்.

"அவளுக்குப் பின் இந்தக் குடி சையை ஆள யாரும் சந்ததிகள் இல்லை. என்றாலும் அந்தக் கிழவி யின் உணர்வுக்கும், வீரத்திற்கும் ஒரு மதிப்பு தர எண்ணி இந்தக் குடிசையை அகற்றவில்லை."" என்றார்.

பேரரசரின் பெருந்தன்மை யையும், நல்ல பண்பையும் மகிபா லன் வியந்து பாராட்டினான்.

நீதி : மனிதர்களாகிய நாம் மற்றவர்களின் மன உணர்வு களை மதிக்க் வேண்டும். யாரையும் மனம் நோகச் செய் தல் தவறு. மன்னரின் பெருந் தன்மையான குணத்தை நீங் களும் கடைபிடிக்க வேண்டும்.

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

06.2017
05

- 1864 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: வேர்ஜினியாவின் பியெட்மொண்ட் நகரில் இடம்பெற்ற போரில் அமெரிக்கப் படைகள் கூட்டமைப்புப் படைகளைத் தோற்கடித்து கிட்டத்தட்ட 1,000 பேரை சிறைப் பிடித்தனர்.
- 1900 - இரண்டாம் போவர் போர்: பிரித்தானியர் தென்னாபிரிக்காவின் பிரிட்டோரியாவைக் கைப்பற்றினர்.
- 1912 - ஐக்கிய அமெரிக்காவின் கடற்படையினர் கியூபாவில் இறங்கினர்.
- 1946 - சிக்காகோவில் உணவுசாலை ஒன்று தீப்பிடித்ததில் 61 பேர் கொல்லப்பட்டனர்.
- 1956 - இலங்கையில் சிங்களம் மட்டும் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.
- 1959 - சிங்கப்பூரின் முதலாவது அரசு பதவியேற்றது.
- 1967 - இஸ்ரேலிய வான்படையினர் எகிப்து, ஜோர்தான், சிரியா ஆகியவற்றின் மீது தாக்கு தலை ஆரம்பித்தனர்.
- 1968 - ஐக்கிய அமெரிக்காவின் அரசுத் தலைவருக்கான வேட்பாளர் ரொபேர்ட் கென்னடி பாலஸ்தினர் ஒருவனால் சுடப்பட்டார். இவர் அடுத்த நாள் உயிரிழந்தார்.
- 1969 - அனைத்துலக கம்யூனிஸ்ட்களின் மாநாடு மொஸ்கோவில் ஆரம்பமானது.
- 1974 - ஈழப்போர்: சிவகுமாரன் உரும்பிராயில் பொலிஸார் சுற்றி வளைத்த போது சயனைட் அருந்தி மரணமடைந்தார். இவர் ஈழப்போரில் முதன் முதலில் சயனைட் அருந்தி வீரச்சாவை யடைந்தவர்.
- 1977 - செஷெல்சில் இராணுவப் புரட்சி இடம் பெற்றது.
- 1977 - முதலாவது தனிக்கணனி அப்பிள் II விற்பனைக்கு விடப்பட்டது.
- 1979 - இலங்கையின் சுயாதீன தொலைக்காட்சி அரசுடைமை ஆக்கப்பட்டது.
- 1984 - இந்தியப் பிரதமர் இந்திரா காந்தி சீக்கியர் களின் பொற்கோயிலில் தாக்குதல் நடத்த உத்தர விட்டார்.

### பிறப்புகள்

- 1925 - வ. அ. இராசரத்தினம், ஈழத்து எழுத்தாளர்.
- சயனைட் அருந்தி உயிர் நீத்த சிவகுமாரன் (1950-1974)

### இறப்புகள்

- 1910 - ஓ ஹென்றி, அமெரிக்க எழுத்தாளர் (பி. 1862)
- 1958 - ரெங்கநாதன் சீனிவாசன், மொரிசியஸ் அரசியல்வாதி (பி. 1910)
- 2002 - மு. சிவசிதம்பரம், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்
- 2004 - ரோனால்ட் ரேகன், அமெரிக்க முன்னாள் அதிபர் (பி. 1911)
- 2004 - கே. கணேஷ், எழுத்தாளர் (பி. 1920)

### சிறப்பு நாள்

- உலக சுற்றுச்சூழல் நாள்
- டென்மார்க் - அரசியல் நிர்ணய நாள்
- சேஷெல்ஸ் - விடுதலை நாள்

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சுன்னாகம் | கொடிகாமம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 200 | 110 | 180 | 200 | 170 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 80 | 120 | 100 | 110 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 350 | 450 | 400 | 300 |
| தக்காளி | 140 | 140 | 100 | 220 | 160 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 70 | 60 | 80 | 100 | 70 |
| கோவா | 160 | 240 | 150 | 200 | 200 | 140 |
| கரட் | 250 | 320 | 200 | 240 | 300 | 200 |
| பூசணி | 70 | 80 | 50 | 80 | 100 | 70 |
| புடோல் | 100 | 100 | 50 | 120 | 120 | 120 |
| வாழைக்காய் | 60 | 80 | 40 | 70 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 280 | 280 | 300 | 300 | 200 | 300 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 90 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 140 | 300 | 150 | 180 | 160 | 170 |
| வெண்டிக்காய் | 80 | 80 | 80 | 140 | 160 | 120 |
| கருணைக்கிழங்கு | 100 | 100 | 70 | — | 160 | 100 |
| பயற்றங்காய் | 120 | 120 | 100 | 100 | 120 | 150 |
| லீக்ஸ் | 100 | 160 | 120 | 120 | 120 | 120 |
| பீற்றூட் | 140 | 200 | 100 | 160 | 160 | 140 |
| கறிமிளகாய் | 250 | 200 | 140 | 200 | 280 | 200 |
| முருங்கைக்காய் | 100 | 80 | 60 | 100 | 80 | 180 |
| போஞ்சி | 200 | 200 | 180 | 200 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 160 | 140 | 130 | 140 | 200 | 140 |
| கீரை - 1பிடி | 20 | 30 | 20 | 40 | 30 | 30 |
| தேசிக்காய் | 40 | 80 | 40 | 60 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 70 | 70 | 65 | 40-50 | 70 |
| இராசவள்ளி | 240 | — | — | — | 240 | 200 |
| வெங்காயப்பூ | 300 | 180 | — | 240 | — | 300 |
| முள்ளங்கி | 80 | 80 | — | 100 | 120 | 100 |
| பொன்னாங்காணி | 30 | 30 | 10 | 40 | 40 | 25 |
| வல்லாரை | 10 | 10 | 10 | 20 | 20 | 25 |
| ஈரப்பலா | 80 | 100 | — | — | — | 80 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறர் மனையவரைப் பெற்ற தாயெனவும்
பிறபொருள் எட்டியேயெனவும்
பிறர் வசை உரைத்தல்
பெருமையன்றெனவும்... – *வில்லிபாரதம்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சமூகத்தை நல்வழிப்படுத்த தனியான திட்டமிடல் குழு தேவை

எங்கு பார்த்தாலும் சமூகப் பிறழ்வுகள் தலைவிரித்தாடுகின்றன.

களவு, கொலை, வாள்வெட்டு, கலாசார சீரழிவு என்பவற்றின் தாண்டவம் எங்ஙனம் வாழப் போகிறோம் என்ற அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்தப் பிறழ்வுகள் ஏன் நடக்கின்றன? என்பது தெரியவில்லை. ஓர் ஆசிரியர் அடித்துவிட்டார் என்றவுடன் மாணவன் தற்கொலை செய்வதென்பது எத்துணை பயங்கரமானது.

ஆசிரியர் அடித்தது தொடர்பில் மேலிடத்தில் முறையீடு செய்வது; தனக்கு ஏற்பட்ட உளத்தாக்கத்தை சீர்மைப்படுத்த பொறுப்பான ஆசிரியரை அணுகுவது; நண்பர்களுடன் பகிர்ந்து காள்வது என்ற எந்த நடைமுறைகளும் பின்பற்றப்படாமல்,

அல்லது அதற்கு முயற்சி செய்யாமல் தற்கொலை செய்தல் என்ற முடிவை மாணவன் எடுக்கும் போது,

அதனால் அந்தக் குடும்பம் எத்துணை இழப்பைச் சந்திக்கின்றது என்பதைப் புரிந்து கொள்வது கடினமன்று.

ஆசிரியர் அடித்ததால் மாணவன் தற்கொலை செய்வதென்பது சாதாரணமான விடயமல்ல.

இத்தகைய நிலைமை ஒரு முன்னுதாரணமாகிப் போனால் அதன் விளைவு எவ்வாறாக அமையும் என்று நினைக்கவே நெஞ்சம் பதறுகிறது.

தவிர, பிள்ளைகள் படித்தாலும் சரி, படிக்காமல் விட்டாலும் சரி, பாடசாலை என்ற கட்டமைப்பில் இருந்து வெளியே வந்தால் போதும் என்ற மனநிலைக்குப் பெற்றோர் வரவேண்டிய ஒரு கட்டாயமும் ஏற்பட்டுள்ளது. இதற்கு வேறு சில காரணங்களும் உண்டு. இவை பாடசாலை என்ற சமூக அமைப்புடன் சம்பந்தப்பட்டதாக இருக்க,

2,500 கிலோ கிராம் மாட்டிறைச்சியை சட்ட விரோதமாக புத்தளத்துக்கு கொண்டு செல்லும் போது கிளிநொச்சியில் வைத்து பொலிஸார் பிடித்துள்ளனர் எனில்,

அந்த மாடுகள் நிச்சயமாக களவாகப் பிடிக்கப்பட்டவை என்பது நிரூபணமாகிறது. இங்குதான் மாடுகளைக் களவாகப் பிடித்தல் என்ற விடயம் கவனிக்கப்பட வேண்டும்.

அதாவது வாழ்வாதாரத்துக்காக ஏழைக் குடும்பங்களுக்கு கொடுக்கப்பட்ட பசு மாடுகள் காணாமல் போவதான முறைப்பாடுகள் நாளாந்தம் செய்யப்படுகின்றன.

தவிர, தீவுப் பகுதியில் மாடுகள் பிடிக்கப்பட்டு அவை வாகனங்களில் கடத்தப்படுகின்றன. இந்தக் கடத்தல்களுக்குப் பொலிஸார் சிலரும் உடந்தை என்ற தகவல்களும் உண்டு.

இதற்கு மேலாக வீடுகளில், தோட்டங்களில் புகுந்து களவெடுக்கும் சம்பவங்களும் அதிகரித்துள்ளன.

இவற்றை சமூகச் சீரழிவுகளாகப் பார்க்கும் அதேவேளை தற்கொலைச் சம்பவங்களும் விபத்து மரணங்களும் கண்டபாட்டில் அதிகரித்துள்ளன.

எனவே இவை தொடர்பில் கட்டுப்பாட்டை ஏற்படுத்த – நம் சமூகத்தை நெறிப்படுத்த – இளைஞர்களை வழிப்படுத்த பொருத்தமான திட்டங்களும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இது விடயத்தில் உடனடி நடவடிக்கையின் பொருட்டு, கலாசார உத்தியோகத்தர்களின் முகநூலில் சமூக விழிப்புணர்வுப் பணியை அதிரடியாக மேற்கொள்வது நல்லது.

பொறுப்பான அதிகாரிகள் இதுபற்றிச் சிந்திக்க வேண்டும். இல்லையேல் தமிழர் தாயகத்தில் மீண்டும் இடப்பெயர்வு ஏற்பட வாய்ப்புண்டு.

## அனர்த்தங்களின் பின் நோய்கள் அதிகரிக்கும்
### சுகாதார அமைச்சு எச்சரிக்கை

நாட்டில் ஏற்பட்ட அனர்த்த நிலைமை, தற்போது சற்றுத் தணிந்துள்ள நிலையில், அவ்வாறான அனர்த்தங்களின் பின்னர் ஏற்படக் கூடிய நோய்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடிய வாய்ப்புகள் அதிகமாக உள்ளதென, சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது.

இவ்வாறான நோய்களிலிருந்து பாதுகாப்புப் பெற வேண்டுமாயின், சில நடைமுறைகளையும் பொது மக்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது.

நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்தம் போன்ற நோய்களுக்கு உள்ளாகியுள்ளவர்களின் மருந்து வகைகள், அனர்த்தங்களினால் அழிவடைந்திருக்க வாய்ப்புள்ளது. அதனால், உடனடியாக மருத்துவ சிகிச்சை நிலையங்களுக்குச் சென்று, தங்களுக்குரிய மருந்துவகைகளை மீளப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

இதேவேளை, இக்காலப் பகுதியில் அதிகளவில் பரவக் கூடிய டெங்குக் காய்ச்சலைத் தடுப்பதற்கும், நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும்.

இதுதவிர, அனர்த்தங்களுக்கு முகங்கொடுத்துள்ளவர்களின் மனோநிலை தொடர்பிலும் அவதானம் செலுத்தப்படல் வேண்டும் என்றும், சுகாதார அமைச்சு அனைவரிடமும் கேட்டுள்ளது.

நோய்களைத் தடுப்பதற்குரிய சில வழிமுறைகள் பற்றியும் சுகாதார அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.

எப்போதும், நன்றாகக் கொதிக்கவைத்து ஆறவைத்த நீரை அல்லது போத்தலில் அடைக்கப்பட்ட நீரை மாத்திரம் பருகவேண்டும்.

நன்றாகச் சமைத்த உணவுகளை அல்லது சமைத்து பொதியிடப்பட்ட உணவுகளை மாத்திரம் உண்ணவேண்டும்.

குழந்தைகளுக்கு, தாய்ப்பால் மாத்திரம் வழங்க வேண்டும். பால்மா கொடுப்பதை முற்றிலும் தவிர்ப்பதோடு, குழந்தைகளுக்கான பால் போத்தல்கள் பயன்படுத்துவதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

உணவு உண்பதற்கு முன்னர், கைகளை நன்றாக சவர்க்காரமிட்டுக் கழுவிக் கொள்ளவேண்டும்.

பச்சை மரக்கறி வகைகள் அல்லது இலை வகைகளை உணவாக எடுத்துக் கொள்வதைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும். இதனால், வயிற்றோட்டம் மற்றும வாந்திபேதி போன்ற நோய்கள் ஏற்பட இடமுண்டு.

பிரசவத்துக்குத் தயாரான நிலையில் உள்ள கர்ப்பிணித் தாயமார்கள், உடன டியாக வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படல் வேண்டும்.

வெள்ளநீரில் விளையாடுவதையோ அல்லது ஓடங்களைச் செலுத்துவதையோ தடுக்க வேண்டும்.

வெள்ளத்தில் மூழ்கியிருந்த வீடுகளில் மீளக்குடியேறும் போது, வீடுகளின் பலம் தொடர்பிலும் பரிசோதிக்க வேண்டும்.

எப்போதும், சிறுநீர் மற்றும் மலங்களை, மலசலகூடங்களிலேயே கழிக்க வேண்டும்.

பிளாஸ்டிக் மற்றும் பாத்திரங்களை வீசும் போது, நுளம்புகள் பெருகாத வகையில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வெள்ளநீரில், எலிகளின் சிறுநீர்கள் கலந்திருப்பதால், வெள்ளநீரில் இருப்பவர்கள், எலிக்காய்ச்சலுக்கான நுண்ணுயிர்க்கொல்லி (அன்டிபயோட்டிக்ஸ்) மருந்தை ஏற்றிக்கொள்ள வேண்டும்.

வெள்ளப்பிரதேசங்களில் அமைந்துள்ள அனைத்துக் கிணறுகளையும் இறைத்து, குளோரின் கலந்துவிட வேண்டும்.

வெள்ளப்பகுதியில் உள்ளவர்களின் கால்களில் காயங்கள் ஏற்பட்டிருந்தால், மருத்துவர்களின் உதவிகளை உடனடியாக நாட வேண்டும்.

இவ்வாறு சுகாதார அமைச்சு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது. (இ-7)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்




**நெருங்கிய சொந்தத்தில் பொருத்தம் அவசியமா?**

பெண் குடும்பத்தைப் பற்றியோ, ஆண் குடும்பத்தைப் பற்றியோ பரம்பரை பரம்பரையாக அறிந்தவர்கள் திருமண பொருத்தம் பார்க்க வேண்டிய தில்லை.

இரு குடும்பத்தாரிடம் உள்ள நல்லது கெட்டது இவை இரண்டையும் ஆராய்ந்து பெண் கொடுக்கல் வாங்கல் வைத்துக் கொள்ளலாம்.

(தொடரும்)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மறறும்பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை யாழ்.பிரதேசத்தில மருதங்கேணி, வத்திராயன், உடுத்துறை, கொடுக்குழாய், ஆழியவளை, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, கேவில், வெற்றிலைக் கேணி இராணுவமுகாம், கட்டைக்காடு இராணுவ முகாம் ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் தேக்கவத்தை பிரதேசம் ஆகிய இடத்திலும் மன்னார் பிரதேசத்தில் முருங்கன், முசலிப்பிரதேசம், பரிகாரிக்கண்டல், பூந்தீவுக் கண்டல், மடுக்கரை, புதுக்காமம், மருதமடு, பொனனாச் சிக்குளம், மணற்குளம், மேதாவெளி, பொற்கேணி, கொக்குப்படையான, தம்பட்டமுசலி, மறிச்சுக்கட்டி, கூழாங்குளம், புதுவெளி, அரிப்பு நீர்ப்பாசன சபை, சிலாவத்துறை, CECB, முள்ளிக்குளம் கடற்படை முகாம், சிலாவத்துறை கடற் படை முகாம் ஆகிய பிரதேசங்களிலும் மின்தடைப்படும் (இ-9)



## திருப்பதி மலை வாழும் வெங்கடேசா

நஞ்சுண்டனின் சந்நிதிக் கதவு சாத்தியிருந்தது. புறவாயிலைப் பூதகணங்கள் காத்துக் கொண்டிருந்தன.

நந்தீஸ்வரரும் சண்டீஸ்வரரும் நமசிவாய நாமத்தை ஓதிக் கொண்டிருந்தார்கள். ஓம் நமசிவாய ஓங்காரம் கைலாயம் எங்கும் கவிதையாய் ஒலித்தது.

பிருகு முனி சந்நிதிக் கதவைச் சமீபித்தார்.

பரமசிவன் பார்வதிதேவியுடன் தனித்திருப்பதாகச் சொல்லி சிவகணங்கள் சிரேஷ்ட முனி பிருகுவை வழிமறித்தன.

உகந்ததொரு தருணம் இதுவே என பிருகு முனிவருக்குத் தோன்றியது.

சங்கரனின் சயன மண்டபத்துள் நுழைந்தார். அங்கே பார்வதியும் பரமசிவனும் தாந்தரிக யோகத்தில் தம்மை மறந்திருந்தனர்.

அறிவிப்பு ஏதுமின்றி உள்ளே நுழைந்த அந்தணர் பிருகுவை பார்வதி தேவி முதலில் கண்டார். பதறிப்போய் பரமசிவனிடமிருந்து விலகினார்.

(தொடரும்)

## விலங்கு விசர் நோயினால் பாதிக்கப்பட்ட பிராணியின் அறிகுறிகள்

அமைதியின்றி இருக்கும், கோபத்துடன் காணப்படும், தென்படும் பொருட்களைக் கடிக்கும், திடீரென எந்தத் தூண்டலுமின்றி மனிதரைக் கடிக்கும்.

காட்டு விலங்குகளை செல்லப்பிராணிகளாக வீட்டில் வளர்க்காதீர்கள்

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ். மாநகரசபை.

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### திறமை உயர்வு



ஏதோ ஒரு வகையிலோ, சில வகைகளிலோ, திறமைசாலியாக நீ இருக்கலாம் அல்லது அப்படி இருப்பதாக நினைத்துக் கொண்டு இருக்கலாம். உன் திறமைக்குக் கடந்த கால மனித இனத் தொடரும் இக்காலச் சமுதாயத் தொடரும் ஆதாரம் என்பதை மறந்துவிடாதே. இந்த உணர்வு உன் திறமைக்கு வீழ்ச்சி ஏற்படாது பாதுகாப்பளிக்கும். கடமையிலே உன்னை உயர்த்தும், உனது திறமையை மேலும் மேலும் அதிகரிக்கும்.

ஒவ்வொரு துறையிலும் நீ அடைந்துள்ள உயர்வைவிட அதிகமான உயர்வை அடைந்துள்ளோர் பலர் இருக்கின்றார்கள் என்பதையும் மறந்து விடாதே.

சந்தர்ப்பம் கிடைக்கும்போது உன்னைவிடத் திறமைசாலிகளைப் பாராட்டுவதும் உன்போன்ற திறமையில் முன்னேற்ற ஆர்வம் கொண்டுள்ளவர்களை உற்சாகப்படுத்துவதும் உன் திறமைக்கோர் சிறப்பளிக்கும் சாதனமாகும்.

சுயநல நோக்கத்தோடு பிறரைப் புகழ்வது கயமைச் செயல் என்பதையும் மறந்துவிடக் கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரெஞ்சு ஓபன் டென்னிஸ்

## வோஸ்னியாக்கி, சிலிச் 4 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றனர்



பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டியில் வோஸ்னியாக்கி, சிலிச் 4ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றனர்.

கிராண்ட்சிலாம் போட்டிகளில் ஒன்றான பிரெஞ்சு ஓபன் டென்னிஸ் போட்டி பாரீஸ் நகரில் நடைபெற்று வருகிறது.

உலகின் 7-ம் நிலை வீரரான சிலிச் (குரோஷியா) 3ஆவது சுற்றில் ஸ்பெயின்வீரர்லோபசை எதிர்கொண்டார். இதில் சிலிச் 6-1, 6-3, 6-3 என்ற நேர் செட் கணக்கில் எளிதில் வென்று 4ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றார்.

மற்ற ஆட்டங்களில் உலகின் நம்பர் வன் வீரரான ஆன்டி முர்ரே (இங்கிலாந்து) 3ஆம் நிலை வீரரான வாவ்ரிங்கா (சுவிட்சர்லாந்து) வெர்டேஸ்சோ (ஸ்பெயின்) ஆகியோரை வென்று 4-வது சுற்றுக்கு முன்னேறினார்கள்.

உலகின் 11ஆம் நிலை வீராங்கனையான வோஸ்னியாக்கி (டென்மார்க்) 3ஆவது சுற்றில் அமெரிக்காவை சேர்ந்த பெலிசை சந்தித்தார். இதில் வோஸ்னியாக்கி 6-2, 2-6, 6-3 என்ற கணக்கில் வென்றார்.

மற்ற ஆட்டங்களில் 3ஆம் நிலை வீராங்கனை ஷிமோனா ஹெல்ப் (ருமேனியா), கார்சியா (பிரான்ஸ்) ஆகியார் வென்று 4ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றனர்.

9-ம் நிலை வீராங்கனையான ரட்வன்ஸ்கா (போலந்து), 14-வது இடத்தில் இருப்பவரான வெஸ்னியா (ரஷியா) ஆகியோர் 3ஆவது சுற்றில் அதிர்ச்சிகரமாக தோற்றார். (க)

# சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III-2017

## ஸ்ரான்லி அணி முதலாவது வெற்றி

சிறிலங்கா கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் தொடரில் 28ஆவது போட்டி 21.05.2017 அன்று ஸ்ரான்லி கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இப் போட்டியில் ஸ்ரான்லி அணி, டிறிபேக் ஸ்ரார் அணியை 79 ஓட்டங்களால் வெற்றி பெற்று தனது முதலாவது வெற்றியை பதிவு செய்துள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி அணி 36.1 ஓவர்களில் சகல



இலக்குகளையும் இழந்து 244 ஓட்டங்களை பெற்றன.

சுஜீவன் -76, பிரசாத் - 62, பிரசாந் - 31, ஓட்டங்களைப் பெற்றனர்.

தசீந்தன், பிரதீப் தலா 01 இலக்கினையும் பார்த்தீபன், மாக்சிவ் தலா 02 இலக்கினையும் சங்கீதன் 04 இலக்கினையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய டிறிபேக் ஸ்ரார் அணி 36.3 ஓவர்களில் சகல இலக்கினையும் இழந்து 165 ஓட்டங்களை பெற்றது. டர்ஸன் - 10, பார்த்தீபன் - 28, சுஜின்தன் - 20, மாக்சிவ் ஆட்டமிழக்காது 46, லக்ஸன் - 19 ஓட்டங்களையும் பெற்றனர்.

விதுஸன், கம்சிகாந் தலா 1 இலக்கினையும் துஸ்யந்தன், பிரசாந் தலா 2 இலக்கினையும் மதன் 4 இலக்கினையும் கைப்பற்றினர்.

இப் போட்டியின் மூலம் யாழ். சென்றல் விளையாட்டுக் கழகம் 2010 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து 8 வருடங்களாக நடத்தி வரும் யாழ். நகரில் சிறந்த கழக அணித் தெரிவு நிகழ்வில் (தரவரிசை) ஸ்ரான்லி அணி 9.03 புள்ளிகளையும் டிறிபேக் ஸ்ரார் அணி 2.65 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டது. (க)

# தாமதமாக பந்துவீசியதனால் இலங்கை வீரர்களுக்கு அபராதம்

தென்னாபிரிக்காவுக்கு எதிரான நேற்று முன்தினம் போட்டியில் மெதுவாக பந்து வீசியதால் இலங்கை வீரர்களுக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளதுடன், அணி இலங்கை அணி 4 மணி நேரம், 7 நிமிடங்களை பந்து வீச எடுதது கொண்டுள்ளது.

இதனையடுத்து இலங்கை அணி தலைவர் உபுல் தரங்க யிலும் விளையாட ஐ.சி.சி தடை விதித்துள்ளது.

மேலும், இலங்கை அணி வீரர்கள் குறித்த நேரத்தில் பந்து வீசி முடிக்காததால் அவர்களுக்கு



தலைவர் தரங்கவுக்கு அடுத்த இரண்டு போட்டிகளில் விளையாட தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஜூன் 8இல் இந்தியாவுக்கு எதிரான போட்டியிலும், ஜூன் 12இல் பாகிஸ்தான் அணிக்கு எதிரான போட்டி

வழங்கப்படும் தொகையில், 20 சதவீதம் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (க)

சம்பியன்ஸ் கிண்ணம் தொடரின் நடைபெற்ற ஆட்டத்தில் தென்னாபிரிக்காவுடன் மோதிய இலங்கை 96 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இந்த போட்டியில், குறிப்பிட்ட நேரத்தை விட இலங்கை அணி அதிக நேரம் பந்து வீசியுள்ளது.

அதாவது, ஐசிசி விதியின் படி மூன்றரை மணி நேரத்துக்குள் பந்து வீச வேண்டும். ஆனால்

# பிளே ஓவ் சுற்றுக்குள் நுழைந்தது இளங்கதிர்



**LONDON FIRST FRESH FOOD LTD** இன் அனுசரணையுடன் சைனிங்ஸ் விளையாட்டுக்கழகம் மறைந்த சைனிங்ஸ் உறுப்பினர் நடராசா வைத்திலிங்கம் ஞாபகார்த்தமாக 3 ஆவது வருடம் நடத்தும் உதைபந்தாட்ட தொடரின் (06.03.2017) அன்று நடைபெற்ற போட்டியில் சைனிங்ஸ் அணியுடன் இளங்கதிர் அணி மோதியது.

முதல் பாதியாட்டத்தில் சைனிங்ஸ் அணியானது 2:1 என்ற கோல்கணக்கில் முன்னிலை வகித்தது. எனினும் இரண்டாம் பாதியாட்டத்தில் திடீரென எழுச்சியடைந்த இளங்கதிர் அணியானது அடுத்தடுத்து 3 கோல்களை போட்டு ஆட்ட நேர முடிவில் 4:2 என்ற கோல்கணக்கில் அபார பெற்றியீட்டியது.

இளங்கதிர் அணிசார்பாக அணித் தலைவர் ஜெகதாஸ் அதிகபட்சமாக இரண்டு கோல்க்ளை பதிவு செய்தார். இவ் வெற்றியின் மூலம் **A group** இல் முதல் அணியாக பிளே ஓவ் சுற்றுக்கு தகுதிபெற்றது.

இதற்கு முன்னதாக ரேவடி அணியுடனான போட்டியானது 1:1 என்ற கோல்கணக்கில் சமனிலையில் முடிவுற்றது.

மேலும் நேதாஜி அணியுடன் 1:0 என்ற கோல்கணக்கில் வெற்றியீட்டியமையும் குறிப்பிடத்தக்கது. (க)

# சுப்பர் 8இற்கு நுழைந்தது குறிஞ்சிக்குமரன், டயமன்ஸ்

கலைமதியின் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில், (2017.06.03) அன்று நடைபெற்ற முதலாவது போட்டியில் திக்கம் [illegible] வி.கழகத்தை 1:0 என்ற கோல் கணக்கில் தோறகடித்து SUPER 08 சுற்றுக்கு முன்னேறியுள்ளது குப்பிளான் குறிஞ்சிக்குமரன் வி.கழகம். [illegible] வது போட்டியில் [illegible] நசரேத் வி.கழகத்தை எதிர்த்து வதிரி டயமன்ஸ் வி.கழகம் மோதியது.

ஆட்ட நேர முடிவில் இரண்டு அணிகளும் தலா ஒவ்வொரு கோல்களை போட்டிருந்தது. சமநிலை தவிர்ப்பு உதையில் நசரேத் வி.கழகத்தை 3:2 என்ற கோல்கணக்கில் தோற்கடித்து SUPER 08 சுற்றுக்கு முன்னேறியுள்ளது வதிரி டயமன்ஸ் வி.கழகம். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனர்த்த உயிரிழப்பு...

க்கும் ஆசி வேண்டி பிரார்த்திக்கும் முழு இரவு பௌத்த சமய வழிபாடும் இன்று திங்கட்கிழமை கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் இடம்பெறும்.

ஆயிரம் தேரர்கள் உள்ளிட்ட சர்வமத தலைவர்களின் பங்கேற்புடன் இந்த பிரார்த்தனை இடம்பெறவுள்ளது.

இந்த புண்ணிய நிகழ்வில் பங்குபற்றும் பௌத்த துறவியர்கள் உள்ளிட்ட பலரும் இன்று மாலை 5 மணியளவில் கொழும்பு 07, ஆர்.ஜீ. சேனாநாயக்கா மாவத்தையிலுள்ள ஸ்ரீ சம்புத்தாலோக்க விகாரையிலிருந்து ஊர்வலமாக சுதந்திர சதுக்கத்துக்கு வரவுள்ளனர். மாலை 6 மணிக்கு பிரார்த்தனை ஆரம்பமாகவுள்ளது.

இந்த பிரார்த்தனையில் பங்குபற்ற விரும்பும் மக்கள் வெண்ணிற ஆடையுடன் மாலை 5 மணிக்கு முன்னதாக சுதந்திர சதுக்கத்துக்கு வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (செ)

## ரூ.30 பில்...

ரூபாய் வரை இருக்கும் என ஆரம்ப கட்ட மதிப்பீடுகளில் இருந்து கண்டறியப்பட்டுள்ளது.

இது உத்தியோகப்பற்ற மதிப்பீடாகும் எனவும் இதுவரை அரச அதிகாரிகள் அதிகார பூர்வ கணக்கீடுகள் மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெள்ளம் மற்றும் மண்சரிவினால் சேதமடைந்த வீடுகள் மற்றும் கட்டட நிர்மாணத்திற்காக குறைந்தது 15 பில்லியன் ரூபாய் வழங்க வேண்டி ஏற்படும் என மற்றுமொரு அரச தரப்பு தகவலில் கூறப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த அனர்த்தங்களில் சிக்கி உயிரிழந்தவர்களுக்கு 30 மில்லியனுக்கும் அதிகமான இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரண்டு வாரங்களில் வெள்ளம் மற்றும் மண்சரிவு காரணமாக இதுவரை 212 பேர் பலியாகியிருந்ததுடன் 79 பேர் தொடர்ந்தும் காணாமல்போயுள்ளனர்.

அத்துடன் 2 ஆயிரத்து 93 வீடுகள் முற்றாகவும் 11 ஆயிரத்து 56 வீடுகள் பகுதி அளவிலும் சேதமடைந்துள்ளதுடன், ஒரு இலட்சத்து 79 ஆயிரத்து 376 குடும்பங்களைச் சேர்ந்த 6 இலட்சத்து 98 ஆயிரத்து 289 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.(செ)

## மேலும் மீன்கள்...

தொடர்ந்து 4ஆவது நாளாக மீன்கள் இவ்வாறு கரையொதுங்கியுள்ளன.

இறந்த நிலையில் கரையொதுங்கிய மீன்களை நேற்று சிலர் எடுத்துச்சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2014ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வட்டுவாகல், நந்திக்கடல் மற்றும் வடக்காறு பகுதிகளில் பெருமளவு சிறிய வகை மீன்கள் இறந்த நிலையில் கரையொதுங்கியிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

முல்லைத்தீவு நந்திக்கடல் பகுதிகளில் நிலவிய நீண்டகால வரட்சியினால் நீரின் உவர்தன்மை அதிகரித்து ஒட்சிசன் அளவு குன்றவடைந்துள்ளமையே பெருமளவு மீன்கள் உயிரிழப்பதற்கு காரணம் என நாரா எனும் தேசிய நீரியல்வள முகாமைத்துவ நிறுவனம் தெரிவித்திருந்தது.

இதன்படி மூன்று வருடங்களின் பின்னர், மீண்டும் மீன்கள் இறந்த நிலையில் கரையொதுங்கி வருகின்றன.

இந்த நிலையில் நாரா நிறுவனத்தின் பிரதிநிதிகள் முல்லைத்தீவு வட்டுவாகல் களப்புக்குச் சென்று ஆய்வுகளை நடத்தவுள்ளதாக தெரிவித்துள்ளனர். (செ)

## கத்திக்குத்து...

ளார்

நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு 8.00 மணியளவில் நடைபெற்ற இச்சம்பவத்தில் அல்வாய் வடக்கைச் சேர்ந்த குணசிங்கம் நிதர்சன் (வயது - 26) என்பவரே இதில் உயிரிழந்தவராவார்.

வெளியில் நண்பர்களுடன் சென்றதாக கூறப்படும் பிரஸ்தாப இளைஞர் அப்பகுதியில் உள்ள வீதியில் கத்திக்குத்துக்கு இலக்காகி குற்றுயிராய் கிடந்ததையடுத்து பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்து வரப்பட்ட போது உயிரிழந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் விசாரணையினை மேற்கொண்டுவரும் பருத்தித்துறைப் பொலிஸார் அதே பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளதுடன் தொடர் விசாரணைகளையும் முன்னெடுத்து வருகின்றனர்.

இளைஞனின் சடலம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் மரண விசாரணைக்காக வைக்கப்பட்டுள்ளது. (செ-60)

## 79 பேரை...

இந்நிலையில் இவர்களை தேடும் பணி தொடர்ந்து வருகின்றது.

களுத்துறை மாவட்டத்தில் கூடுதலானோர் காணாமல் போயுள்ளதாக அரசு பேரிடர் முகாமைத்துவ மையத்தினால் இறுதியாக வெளியிடப்பட்ட அறிக்கையில் தகவல் வெளியாகியுள்ளது.

நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு அரசு பேரிடர் முகாமைத்துவ மையத்தினால் வெளியிடப்பட்ட தகவல் அறிக்கையில் 224 உயிரிழப்புகளும் 78 பேர் காணாமல் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை வெளியிட்ட தகவல் அறிக்கையில் அதில் மாற்றம் செய்யப்பட்டு 212 பலியாகியுள்ளனர், 79 பேர் காணாமல் போயுள்ளதாகவும் பதிவிடப்பட்டுள்ளது. இரத்தினபுரி மாவட்டத்தில் மரணங்களின் எண்ணிக்கை 87ஆக அதிகரித்துள்ளது.

கேகாலை மாவட்டம்-04, களுத்துறை மாவட்டம் - 65, கம்பகா மாவட்டம்-04, மாத்தறை மாவட்டம்-31, அம்பாந்தோட்டை மாவட்டம் -05, காலி மாவட்டம்-15 மற்றும் கண்டி மாவட்டம் -01 என்ற எண்ணிக்கையில் 212 மரணங்களும் அறிக்கையிடப்பட்டுள்ளன.

இரத்தினபுரி மாவட்டத்தில் 14 பேரும் மாத்தறை மாவட்டத்தில் 15 பேரும் களுத்துறை மாவட்டத்தில் 50 பேரும் என 79 பேரை காணவில்லை என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

அரசாங்கம் வெளியிட்டுள்ள பிந்திய தகவல் அறிக்கையின்படி, பாதிப்புக்குள்ளான குடும்பங்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 84 ஆயிரத்து 268 என அதிகரிப்பை காணமுடிகின்றது.

பாதுகாப்பான இடங்களில் தங்கியிருந்த குடும்பங்களில் அநேகமான குடும்பங்கள் வீடுகளுக்கு திரும்பியுள்ள நிலையில், அந்த எண்ணிக்கை தற்போது 7 ஆயிரம் குடும்பங்களை சேர்ந்த 25 ஆயிரமாக குறைந்துள்ளது.

2313 வீடுகள் முழுமையாகவும், 12529 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளது என இதுவரை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதாக அரசு பேரிடர் முகாமைத்துவ மையத்தின் துணை இயக்குநர் பிரதீப் கொடிப்பிலி தெரிவிக்கின்றார். (செ)

## ஆடைகளை கிழித்து...

ப் பிரயோகங்களிலும் ஈடுபட்டனர். இதனால் நேற்றுமாலை யாழ்.மாவட்ட செயலகப் பகுதி அல்லோலகல்லோலப்பட்டது.

சுண்டுக்குளி தபாலகத்திற்கும் புகையிரதப் பாதைக்கும் இடைப்பட்ட பகுதியிலுள்ள ஆலமரத்திற்கு கீழ் நேற்று மாலை 4 மணியளவில் ஒன்று கூடிய நபர்களே இவ்வாறு அடிதடியில் ஈடுபட்டுள்ளனர்.

அதேவேளை மோதலில் ஈடுபட்டவர்களை விலக்கிக் கொள்வதற்காக பொதுமக்களும் அவ்விடத்தில் கூடியதுடன் மேற்படி சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. இதையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் அப் பகுதியில் விசாரணையையும் முன்னெடுத்திருந்தனர்.

அப்பகுதியைச் சேர்ந்த பெண்ணொருவருக்கும் ஆட்டோசாரதிக்கும் இடையிலான முரண்பாடே இவ் மோதலுக்குக் காரணம் எனத் தெரியவருகிறது.

மேலும் யாழ்.மாவட்ட செயலகத்திற்கு அருகாமையிலுள்ள குறித்த ஆல மரத்தின் கீழ் ஆட்டோவில் வந்து கூடும் நபர்கள் தினந்தோறும் அடிதடியில் ஈடுபடுவதால் தம்மால் நிம்மதியாக வாழமுடியவில்லை என்று அப்பிரதேச மக்கள் கவலைவெளியிட்டுள்ளனர்.

இந்தப் பகுதியில் தினந்தோறும் நடந்து வரும் சமூகவிரோதச் செயற்பாடுகள் தொடர்பாக யாழ்.மாவட்ட செயலகத்தில் முறையிடப்பட்டுள்ளதாகவும் இருப்பினும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும் பிரதேச மக்கள் கவலை தெரிவித்திருந்தனர். (செ-6,9)

## இரு அமைச்சர்கள்...

பெற்ற மாவட்ட அரச அதிபர் தலைமையிலான மூவர் அடங்கிய குழுவினர் வடமாகாண முதலமைச்சரால் நியமிக்கப்பட்டனர்.

அதன்படி அமைச்சர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் பதிவு செய்யப்பட்டு விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. அவ்வாறு விசாரணை செய்யப்பட்ட முறைப்பாடுகளில் ஊழல், நிதி மோசடி, நிர்வாக ரீதியிலான முரண்பாடுகள், நியமனம் சார்பான பதவி வடயங்களும் உள்ளடக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டிருந்தது.

இவ் விசாரணைகள் முடிவுற்றமையை தொடர்ந்து கடந்த மாதம் குறித்த விசாரணை குழுவின் இறுதி அறிக்கை முதலமைச்சரிடம் கையளிக்கப்பட்டது.

அவ்வாறு கையளிக்கப்பட்ட அறிக்கை தொடர்பான விபரங்கள் 4 அமைச்சர்களுக்கும் முதலமைச்சரால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதில் வடமாகாண விவசாய அமைச்சருக்கு எதிராக சுமத்தப்பட்ட நிதி மோசடி குற்றச்சாட்டுக்களில் அதிகமானவை எண்பிக்கப்பட்டுள்ளதாகவும், வடமாகாண கல்வி அமைச்சருக்கு எதிரான நிர்வாக ரீதியான குற்றச்சாட்டுக்கள் பல எண்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

அத்துடன் சுகாதார அமைச்சர் மற்றும் மீன்பிடி அமைச்சருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் பகுதியளவில் நிரூபிக்கப்படவில்லை எனவும் தெரியவருகிறது. குறிப்பாக நிதி மோசடிகள், நியமனங்கள், இடமாற்றங்கள் தொடர்பாக தேவையற்ற தலையீடுகள், வினைத்திறன் அற்ற செயற்பாடுகள் போன்ற குற்றச்சாட்டுக்களே நிரூபிக்கப்பட்டுள்ளன.

இதனால் வடமாகாண சபை வினைத்திறனாக இயங்க வேண்டும் எனில் அதிகளவில் குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்ட அமைச்சர்கள் இருவர் பதவி விலக வேண்டும் எனவும் அவர்களுக்கு எதிராக மேலதிக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன்,

மேலும் இத்தகைய முறையற்ற செயற்பாடுகளுக்கு அமைச்சர்களுடன் உடந்தையாக இருந்த அமைச்சின் செயலாளர்களும் மாற்றம் செய்யப்பட வேண்டும் எனவும் குறித்த அறிக்கையில் சிபாரிசு செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. (செ-9)

## உப தலைவர் பதவி...

சபையின் 72ஆவது அமர்வு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதல் 2018ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் வரை நடைபெறவுள்ளது.

அத்துடன் மற்றுமொரு தலைவர் பதவிக்காக சிலோவேனியாவின் வெளிவிவகார மற்றும் ஐரோப்பிய விவகார அமைச்சர், மிரோஸ்லோவ் லைய்ஜாக் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இறுதியாக 2007ஆம் ஆண்டு ஐ.நா பொதுச் சபையின் 62ஆவது கூட்டத் தொடரில் உப தலைமைப் பொறுப்பை இலங்கை வகித்திருந்தது.

இதன்பிரகாரம் 72ஆவது கூட்டத்தொடரில் இலங்கை சார்பான உப தலைவராக ஐ.நாவிற்கான நிரந்தர வதிவிடப் பிரதிநிதி ரொஹான பெரேரா செயற்படவுள்ளார். (செ)

## குடிநீர் போத்தல்...

ந்து நேற்றைய தினம் யாழ்.நல்லூர் பகுதியில் உள்ள விடுதி ஒன்றில் வைத்து பிடித்து நையப்புடைக்கப்பட்டுள்ளனர்.

தாம் போத்தலில் அடைக்கப்பட்ட குடிநீர் தயாரிக்கும் நிறுவனத்தை சேர்ந்தவர்கள் எனவும் தமது தண்ணீரை போத்தல்களை யாழ்.மாவட்டம் முழுவதும் விநியோகம் செய்வதற்கான உரிமத்தை வழங்குவதாக கூறி யாழ்.மாவட்டத்தில் சுமார் 30 பேருக்கு மேற்பட்டவர்களிடம் இருந்து பணத்தை பெற்றுள்ளனர்.

பணம் வழங்கிய பலருக்கு உரிமம் வழங்கப்படாததுடன் சிலருக்கு வழங்கப்பட்ட தண்ணீர் சுகாதார நியமங்களுக்கு அமைவாக இல்லை என தெரிவித்து பாவனையாளர் அதிகாரசபையினால் தடை செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் பாதிக்கப்பட்டவர்கள் குறித்த நிறுவனத்துடன் தொடர்பு கொண்டு கேட்ட போது பலர் அச்சுறுத்தப்பட்டுள்ளனர்.

இதனால் பணத்தை இழந்த பலர் அமைதியாக இருந்த நிலையில் பாதிக்கப்பட்டவர்கள் அண்மையில் ஒன்று கூடி தீர்மானித்ததற்கு அமைவாக மேற்படி தண்ணீர் தயாரிப்பு நிறுவனத்தை சேர்ந்தவர்களை யாழ்.நல்லூர் சுற்றாடலில் உள்ள விடுதி ஒன்றுக்கு அழைத்து ஒருவருக்கு புதிதாக விநியோகஸ்தர் உரிமம் பெறுவதுபோல் பாவனை செய்து மேற்படி நிறுவனத்தின் முக்கியஸ்தர்கள் இருவரை வரவழைத்துள்ளனர்.

இதன்படி வருகை தந்த குறித்த நிறுவனத்தை சார்ந்தவர்களை நேற்று மாலை 7 மணிக்கு மடக்கி பிடித்த பாதிக்கப்பட்டவர்கள் அவர்களை நையப்புடைத்ததன் பின்னர் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இதேவேளை பொலிஸாருக்கு தகவல் கொடுக்கப்பட்டு 1 மணி நேரத்தின் பின்னதாகவே சம்பவ இடத்திற்கு பொலிஸார் வந்து விசாரணைகளை நடத்தி மேற்படி நிறுவனத்தை சேர்ந்த இருவரையும் கைது செய்துள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் 2011ஆம் ஆண்டு தொடக்கம் மேற்படி தண்ணீர் தயாரிப்பு நிறுவனம் இவ்வாறு விநியோகஸ்தர் உரிமம் வழங்குவதாக கூறி ஏமாற்றி வந்துள்ளது. மேலும் பாதிக்கப்பட்டவர்கள் பணம் செலுத்தியமைக்கான சான்றுகள் மற்றும் வழங்கப்பட்ட தண்ணீர் விற்பனைக்கு தடை செய்யப்பட்டமைக்கான சான்றுகள் அனைத்தையும் வைத்துள்ளனர்.

அதேபோல் யாழ்.மாவட்டத்தில் மட்டும் அண்ணளவாக சுமார் .3 தொடக்கம் 4 கோடி ரூபாய் பணத்தை மேற்படி தண்ணீர் நிறுவனம் மோசடி செய்துள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். (செ-9)

## படகு கவிழ்ந்து விபத்து...

மூலம் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்ட போதும் வழியில் மகன் மரணமடைந்ததுடன் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்

தந்தையார் மயில்வாகனபுரம் புன்னைநிராவியைச் சேர்ந்த உதயகுமார் குமரன் (வயது 19) என்ற இளைஞனே இச் சம்பவத்தில் உயிரிழந்தவராவார்.

இளைஞரின் சடலம் பிரேத மற்றும் மரண விசாரணைகளுக்காக கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் மேலதிக விசாரணைகளும் இடம்பெற்று வருகின்றது. (செ-312)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒலிம்பிக் பதக்க...

சிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தனியார் தொலைகாட்சி நிறுவனமொன்றுக்கு வழங்கிய பேட்டியொன்றின் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

2000 ஆம் ஆண்டு ஆஸ்திரேலியா, சிட்னியில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளின் போது, 200 மீட்டர் ஓட்ட பந்தையத்தில் சுசந்திகா ஜயசிங்க வெள்ளி பதக்கமொன்றை பெற்று இலங்கைக்கு பெருமை சேர்த்தார்.

ஆனால், தான் தற்போது பாரிய பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ள காரணத்தினால் தான் இந்த தீர்மானத்தை எடுத்ததாக சுசந்திகா ஜயசிங்க தெரிவித்துள்ளார்.

தனக்கு விளையாட்டு அமைச்சகத்தின் ஆலோசகர் பதவியொன்று வழங்கப்பட்டு ஒரு வருடம் கடந்துள்ள போதிலும், இதுவரை எந்தவொரு பொறுப்பும் வழங்கப்படவில்லை என்று குற்றம்சாட்டிய அவர், தனக்கு அந்த பதவிக்கான ஊதியம் வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

இரண்டு பிள்ளைகளின் தாயான தான் தற்போது பெரும் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்துள்ள காரணத்தினால் தான் நாட்டுக்கு புகழை தேடித்தந்த ஒலிம்பிக் வெள்ளி பதக்கத்தை விற்பனை செய்ய தீர்மானித்துள்ளதாகவும் அவர் அறிவித்தார்.

இந்தக் கருத்துத் தொடர்பாக வினவிய போது கருத்து தெரிவித்த விளையாட்டு அமைச்சர் தயாசிறி ஜெயசெக்கற, சுசந்திகா ஜெயசிங்கவிற்கு தனது வெள்ளி பதக்கத்தை விற்பனை செய்யும் அவசியம் ஏற்படமாட்டாது என்று தெரிவித்தார்.

சுசந்திகா ஜெயசிங்கவிற்கு 75ஆயிரம் ரூபாய் மாதாந்தம் கொடுப்பனவொன்றுடன் விளையாட்டு அமைச்சகத்தின் ஆலோசகர் பதவியொன்றை வழங்க தான் அமைச்சரவை பத்திரமொன்றை சமர்ப்பித்த போதிலும், அமைச்சரவை அவருக்கு 60ஆயிரம் ரூபாய் மாத்திரம் வழங்க தீர்மானித்ததாக தெரிவித்தார்.

அதனை பெற்றுக்கொள்ள சுசந்திகா ஜயசிங்க முன்வரவில்லை என்று கூறிய அமைச்சர் ஜெயசெக்கற, அவருக்கு அந்த பதவியில் கடமையாற்ற எந்த தடையும் இல்லை என்று கூறியுள்ளார். (செ)


யப்பான் சயிக்கிள்



விலை 8, 500/= லிருந்து

1.லேடிஸ் சயிக்கிள்கள்
2.யென்ஸ் சயிக்கிள்கள்
3.கியர் சயிக்கிள்கள்
4.மவுண்டன் சயிக்கிள்
5.மடக்கும் சயிக்கிள்கள்

இலகுவான ஓட்டம்
பாட்ஸ் தாராளமாக உண்டு
கழுவிபூட்டுதல் திருத்த
வேலைகள் இல்லை

மின்னுவதெல்லாம் பொன் அல்ல
யப்பான் சயிக்கிள் ஒன்றை வாங்கி
நீண்டகாலம் (10) வருடம் பாவிக்கலாம்

(9124)

அன்ரன் என்ரபிறைசஸ்
பலாலி றோட், கோண்டாவில்.
(பாம் ஸ்கூல் முன்பாக)



வட இந்திய காசி சீரடி யாத்திரை

ஆரம்பம் : 05.08.2017

யாத்திரீகர் - 20 நாள்கள் - 15

செல்லுமிடங்கள்: டெல்லி, ஆக்ரா, தாஜ்மகால், அலகாபாத் (கங்கா,ஜமுனா, சரஸ்வதி), திருவேணி, சங்கமம், கயா, காலமானவர்களுக்கு சிரார்த்தம் செய்யும் இடம். புத்தகயா,புத்தாலயங்கள், சீத்தமடி, காசி (வாரணாசி), 3 நாள்கள் குருசேத்திரம், பாண்டவர்கள் யுத்தம் புரிந்த இடம், மும்பாய், சீரடி பாபா, சனி, சிங்கனாப்பூர், அக்கல் கோட், பாபா, இராமேஸ்வரம், மதுரை, துல்க்காப்பூர் அம்மன் கோயில், வேறு இடங்களும் காணலாம். ஒரு நாள் சென்னையில் சொப்பிங். உங்களிடம் வாங்கும் ரூபாவுக்கு எமது சேவை. 4 விமானப் பயணம், A/C வாகன வசதி, மூன்று வேளை மடப்பள்ளி ஆட்கள் சமைத்த உணவு, காப்பி, ரீ, படகுக் கட்டணங்கள் எயாபோட் போக வர வாகன வசதி, 2 பேருக்கு குளியலறை (வெஸ்ரன் கொமட்) இணைந்த அறைகள் (NON AC) குடிநீர் (மேலும் ஆலயங்களில் எடுக்கும் புகைப்படங்கள் 25 அன்பளிப்பாகத் தரப்படும்) விருப்பமுடையவர்கள் பாஸ்போர்ட் போட்டோக் கொப்பியும் ஒரு பாஸ்போட் சைஸ் புகைப்படமும் அனுப்பி பதிவு செய்யவும். மேலும் விபரங்களைக் கேட்டு அறிந்து பதிவு செய்யவும். (C-8724)

கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன்
மகன் ராஜன்
No. 59,3/6, செட்டியார் தெரு, கொழும்பு-11
Tel: 077 768 0102/ 077 736 2154
Facebook:Sriranganathanthuraiappa


## வீடமைப்பு திட்ட...

இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் குற்றம் சுமத்தியுள்ளார்.

எனினும் ஆட்சி மாற்றத்தின் மூலம் மலையக மக்களின் இருள் மயமான வாழ்க்கை முடிவிற்கு கொண்டுவரப்பட்ட அவர்களுக்கான தனியான வீட்டுத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு 4ஆயிரம் வீடுகள் அமைப்பதற்கான ஒப்பந்தம் அண்மையில் மலைநாட்டு புதிய கிராமங்கள் அமைச்சர் பழனி திகாம்பரத்தினால் கைச்சாத்திடப்பட்டது.

இதன்படி நுவரெலியா, இறம்பொடை-ஹெல்பொடதோட்டத்தில் நேற்று முன்தினம் 100 வீடுகள் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நடைபெற்றுள்ளது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றிய கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன் நாட்டில் இடம்பெற்ற போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட பின்னர் இந்திய அரசாங்கம் வடக்கு கிழக்கில் 50 ஆயிரம் வீடுகளை நிர்மாணித்து கொடுத்துள்ளது.

அதில் 4 ஆயிரம் வீடுகள் மலையகத்திற்கு கொடுக்கப்பட்ட நிலையில், கடந்த ஆட்சியில் இருந்த அமைச்சுகள் இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் கவனம் செலுத்தாமையால் வீடுகளை அமைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதேவேளை பணத்திற்காக அரசியலுக்கு வந்திருந்தால் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 250 மில்லியன் ரூபாய் தருவதாக தெரிவித்த போதிலும், அதனை நிராகரித்து தோட்ட மக்களுக்கு தனி வீட்டு திட்டத்தை ஏற்படுத்தி கொடுக்க வேண்டும் என தான் எண்ணியதாக மலைநாட்டு புதிய கிராமங்கள் அமைச்சர் பழனி திகாம்பரம் தெரிவித்துள்ளார்.

இந்த அடிக்கல் நாட்டு நிகழ்வில் மலைநாட்டு புதிய கிராமங்கள் அமைச்சர் பழனி திகாம்பரம், கல்வி இர்ராஜாங்க அமைச்சர் வே.இராதாகிருஷ்ணன், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் தரன் ஜித்சிங் சந்து, இந்திய உதவி உயர்ஸ்தானிகர் ராதா வெங்கட்ராமன், நாடாளுமன்ற உறுப்பினர் எம். திலகராஜ், மத்திய மாகாண சபை உறுப்பினர் சோ.ஸ்ரீதரன், எம்.ராம், மனிதவள அபிவிருத்தி நிதியத்தின் தலைவர் வி.புத்திரசிகாமணி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதேவேளை, இலங்கைக்கு அண்மையில் விஜயம் செய்த இந்திய பிரதமர் நரேந்திர மோடி மலையக மக்களுக்கு மேலும் 10 ஆயிரம் வீடுகளை நிர்மாணித்து கொடுக்கவுள்ளதாக உறுதியளித்தமை குறிப்பிடத்தக்கது. (செ)


இலங்கையின் முதன்மை வெளியீடு....

யாழ் நதி

தரம் 1 தொடக்கம் O/L வரையான மாணவர்களுக்கு ஏற்ற வகையில் அனைத்துப் பாடங்களையும் உள்ளடக்கிய 2-ம் தவணைப் பரீட்சை வினாத்தாள்கள் விடைகளுடன் சகல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.

யாழ் நதி
புலமை ஊக்கி

2017 புலமைப் பரிசில் பரீட்சையை எதிர்கொள்ளும் மாணவர்களுக்கான எதிர்பார்க்கும் வினாப் பகுதிகளை உள்ளடக்கிய 8 வினாத்தாள்கள் விடைகளுடன்

இலங்கையில் அனைத்து புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ள முடியும்.
தொடர்புகளுக்கு :
0777417143, 0112341942
(9136)


## முன்னாள் போரா...

என்ற நபரே யாழ்ப்பாண பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் 19 ஆம் திகதி பளைப் பகுதியில் பொலிஸாரின் வாகனத்தின் மீது துப்பாக்கிச் சூட்டு சம்பவம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

குறித்த சம்பவத்தினைத் தொடர்ந்து அப்பகுதியில் பொலிஸாரும் இராணுவத்தினரும் குவிக்கப்பட்டு தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் விசாரணைகளையும் மேற்கொண்டிருந்தனர்.

அந்த வகையில் விசாரணைகளின் அடிப்படையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை குறித்த இளைஞன் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைக்காக பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் வவுனியாவுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

கைதான நபர் முன்னாள் போராளியாக இருந்து புனர்வாழ்வு பெற்று தனியார் நிறுவனம் ஒன்றில் பணிபுரிந்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ)

## அனர்த்த எச்சரிக்...

மணித்தியாலங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி மையம் அறிவித்துள்ளது.

இரத்தினபுரி, கேகாலை, காலி, மாத்தறை, களுத்துறை, அம்பாந்தோட்டை மற்றும் நுவரெலியா ஆகிய பகுதிகளுக்கே இந்த மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணி தொடக்கம் எதிர்வரும் 24 மணிநேரத்திற்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ள நில்லயில், மக்களை அவதானமாக செயற்படுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (செ)

## 100-வது நாளை...

போராட்டம் நேற்று 98 ஆவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் நாளை 6 ஆம் திகதி தமது நூறாவது நாள் போராட்டத்தை யாழ். மாவட்டச் செயலகத்திற்கு முன்பாக மாபெரும் கவனயீர்ப்பு போராட்டமாக முன்னெடுக்க பட்டதாரிகள் தரப்பில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (செ)


காணி விற்பனைக்கு

யாழ்.இந்துக் கல்லூரிக்கும் தட்டாதெரு சந்திக்கும் இடையில் காணி விற்பனைக்கு உண்டு.
(9123)
தொடர்பு:-
075 639 6761



IELTS
IELTS Test Prep

வெளிநாடுகளில் STUDENT VISA வில் படிப்பதற்கு அவசியமான IELTS எளிமையான முறையில் கற்பிக்கப்படும்



- வேலைசெய்வோரின் நலன்கருதி மாலை நேரங்களிலும் வார இறுதி நாட்களிலும் வகுப்புகள் நடைபெறும்
- பிரத்தியேக வகுப்புக்களும் (PERSONAL CLASSES) உண்டு.

தொடர்புகளுக்கு: 0768226236
49 A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS



அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்

வெளிநாடுகளுக்கான
துரித கடிதங்கள், பொதிகள் சேவை





365 நாட்களும்

72 மணி நேரத்தில் உலகின் எப்பாகத்திலும் ஒப்படைக்கப்படும் (Express Service)

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் ஏற்கப்பட்டு வெளிநாடுகளில் ஒப்படைக்கப்படும் (Door to Door Service)

DHL aramex FedEx SKYNET

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்
Call 021 222 3536

அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்
Call 021 222 6113


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.06.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org